# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 28

சுடர் 32 | கதிர் 56 | வள்ளுவர் ஆண்டு 2048 | தை 08, சனிக்கிழமை 21.01.2017







முக்காலி முரளி



இந்தப் பாராட்டோட ஐயா கொஞ்சக் காலத்த ஓட்டுவார் பாருங்கோ...



# மனித உரிமை விவகாரத்தில் முன்னேற்றம்

## சையிட் அல் ஹுசைன் ரணிலுக்குப் பாராட்டு

கொழும்பு, ஜனவரி 21

இலங்கையின் மனித உரிமை விவகாரத்தில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இது மகிழ்ச்சியளிப்பதாக உள்ளது என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் அல் ஹுசைன், கொழும்பு அரசின் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவிடம் தெரிவித்தார் என, தலைமை அமைச்சர் அலுவலகப் பத்திரிகை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரோ, ஐ.நா. மனித >> 25

## இறக்குமதியாகும் அரிசியின் விலை 76 ரூபா

மைத்திரி அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜன. 21

இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ அரிசி எந்தக் காரணத்துக்காகவும் 76 ரூபாவிற்கு மேல் விற்பனை செய்ய முடியாது என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள வறட்சி நிலைக்கு மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்கும் அரசின் >> 25



இஸ்லாமிய தீவிரவாதத்தை உலகிலிருந்து அகற்றுவேன்

## பதவியேற்பு விழாவில் அதிபர் ட்ரம்ப் உறுதி

வொசிங்டன், ஜன. 21

இஸ்லாமிய பயங்கரவாதத்தை உலகிலிருந்து அகற்றுவேன் என்று, அமெரிக்காவின் புதிய அதிபராகப் பதவி >> 23அ

## பிரிட்டன் தூதரையும் விட்டுவைக்காத டெங்கு

கொழும்பு, ஜன. 21

இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் ஜேம்ஸ் டோரிஸ் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. >> 25

## டொனால்ட் ட்ரம்புக்கு கொழும்பில் எதிர்ப்பு

கொழும்பு, ஜன. 21

அமெரிக்காவின் புதிய அரச தலைவர் டொனால்ட் ட்ரம்புக்கு எதிராக கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்துக்கு முன்பாக நேற்றுப் போராட்டம் >> 23அ

## குடும்பத் தலைவர் விபத்தில் சிக்கிச் சாவு

தென்மராட்சி, ஜன.21

பட்டா படி வாகனமும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் மோட்டார் சைக்கிளோட்டி வாகனச் சில்லுக்குள் அகப்பட்டுச் சம்பவ இடத்தில் சாவடைந்தார். >> 23அ

## வெலிவேரிய தாக்குதல்; மூவரல்ல நால்வரே சாவு

நீதிமன்றில் புதிய தகவல்

கொழும்பு, ஜன. 21

கம்பகா மாவட்டத்தின் வெலிவேரிய பகுதியில் 2013 ஆம் ஆண்டு தூய குடிதண்ணீர் கோரி நடத்தப்பட்ட போராட்டத்தில் இராணுவத்தினரின் தாக்குதலில் மூவர் உயிரிழந்தனர் என இதுவரை தெரிவிக்கப்பட்டு வந்த நிலையில், அந்தச் சம்பவத்தில் நான்கு பேர் உயிரிழந்தனர் என >> 25

இளைஞர் எழுச்சிக்கு கிடைத்தது பலன்

## ஜல்லிக்கட்டுக்கு டில்லி ஒப்புதல்

சென்னை, ஜன. 21

ஜல்லிக்கட்டு நடத்துவதற்காக தமிழக அரசு கொண்டு வந்த அவசரச் சட்டம் புதுடில்லி அரசின் அங்கீகாரத்துடன் குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. விலங்குகளைக் காட்சிப்படுத்தக் கூடாது என்ற பட்டியலில் இருந்து காளைகளை நீக்க இந்தச் சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளதாக பிரிஜ செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது. தமிழக >> 23அ

## காணாமற்போனோரின் உறவுகள் உணவு ஒறுப்பு

திங்கள் முதல் வவுனியாவில் தொடர் போராட்டம்

வவுனியா, ஜன. 21

தமிழர் தாயகத்தில் கையளிக்கப்பட்டும் கடத்தப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடிக் கண்டறியும் குடும்பங்களின் சங்கத்தினர் நான்கு முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து, நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் வவுனியாவில் தொடர் உணவு ஒறுத்தல் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக >> 25

## வடமராட்சியில் 5 பேர் கைது கள்ளநோட்டு அச்சிட்டதாக

யாழ்ப்பாணம், ஜன.21

நாணயத் தாள்களைச் சட்டவிரோதமாக அச்சடித்துப் பயன்படுத்தினார்கள் என்ற குற்றச்சாட்டில் வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்த 5 பேர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட் >> 25



## வறட்சி வாட்டிய குடாநாட்டில் நேற்று மழை

யாழ்ப்பாணம், ஜன. 21

இந்த மாதத்தின் அதிகூடிய மழை வீழ்ச்சி நேற்றுப் பதிவாகியுள்ளது. யாழ்ப்பாணத்தில் >> 23அ

## வடக்கில் 2 1/2 லட்சம் பேர் வறட்சியால் கடும் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 21

யாழ். மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை நேற்றுடன் ஒரு லட்சத்தைத் தாண்டியது. அத்துடன் வடக்கில் இரண்டரை லட்சம் பேர் வரையில் பாதிக்கப்பட்டுள்ளதாக இடர்முகாமைத்துவ மைய >> 23அ

## நீதி கிடைத்தால் மட்டுமே நல்லிணக்கம்

ஐரோப்பிய ஒன்றியத் தூதுவரிடம் தெரிவித்தார் வடக்கு முதல்வர்

யாழ்ப்பாணம், ஜன.21

போரின் போது இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதி கிடைத்தால் மட்டுமே அமைதியையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்த முடியும். அரசியல் ரீதியான உரித்துக்களைப் பெற்றுத்தந்தால் மாத்திரமே ஏனைய விடயங்களில் கரிசனை கொள்ள முடியும்.

இவ்வாறு ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவரிடம் தெரிவித்தார் வடக்கு மாகாண முதலமைச்சர் >> 25

## நெடுந்தீவுக்கான சேவையை நேற்று ஆரம்பித்தது நெடுந்தாரகை

யாழ்ப்பாணம், ஜன.21

குறிகாட்டுவான் - நெடுந்தீவுக்கு இடையேயான போக்குவரத்துக்கு என்று 150 மில்லியன் ரூபா நிதியில் இலங்கையில் கட்டப்பட்ட முதலாவது பன்னாட்டு நியம பயணிகள் படகான நெடுந்தாரகையின் முதலாவது சேவை நேற்று உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது.

வடக்கு மாகாண தலைமைச் செயலாளர் அ.பத்திநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக >> 25







# தடை அதை உடை

## ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாக வவுனியாவில் போராட்டம்

வவுனியா, ஜன.21
தடை அதை உடை என ஜல்லிக்கட்டுக்கு ஆதரவு தெரிவித்து வவுனியாவைச் சேர்ந்த இளைஞர்களும் நேற்று கவன வீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.
இந்தப் போராட்டம் நேற்று மாலை 4 மணியளயவில் வவுனியா மையப் பேருந்து நிலையம் முன்பாக இடம்பெற்றது.
வவுனியா மாவட்ட இளைஞர்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தப் போராட்டத்தில் பெருமளவான இளைஞர்கள் கலந்து கொண்டனர். காளை இனங்களைப் பாதுகாப்போம், ஜல்லிக்கட்டு நம் இனத்தின் அடையாளம், காப்போம் காப்போம் காளையைப் பாதுகாப்போம், தமிழகத்துக்காக ஈழம், ஈழத்துக்காகத் தமிழகம் என எழுதப்பட்ட வாசகங்களை ஏந்தியவாறும், கோசங்களை எழுப்பியவாறும் இளைஞர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதேவேளை, ஜல்லிக்கட்டுத் தடைக்கு எதிராக தமிழகத்தில் முன்னெடுக்கப்படும் போராட்டங்களுக்கு ஆதரவாக வடக்குக் கிழக்கில் பல இடங்களில் போராட்டங்கள் நடத்தப்படுகின்றன. இதில் நேற்று வவுனியாவிலும் முன்னெடுக்கப்பட்டது. (வ-21)

## ரத்ன தேரர் தலைமையில் வருகிறது தேசிய சபை

### சம்பந்தனுக்கும் அழைப்பு

கொழும்பு, ஜன. 21
இன, மத, மொழி வேறுபாடுகளுக்கு அப்பால் சென்று நாட்டை நல்வழிப்படுத்தும் நோக்கிலேயே தேசிய சபையொன்றை அமைப்பதற்கு உத்தேசித்துள்ளேன். இதில் தமிழ் புத்திஜீவிகளும் இணைந்துகொள் ளலாம். எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் கூட வரலாம்.
இவ்வாறு தெரிவித்தார் சுயாதீன நாடாளுமன்ற உறுப்பினராகச் செயற்படும் தீர்மானத்தை எடுத்துள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரான அத்துரலிய ரத்ன தேரர்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
அரசினுடைய குறைகளைச் சுட்டிக்காட்டி அதன் பயணத்தை நல்வழிப்படுத்தும் நோக்கிலேயே தேசிய சபை அமையவுள்ளது. நாடு மீது அக்கறையுள்ள அனைவரும் இதில் இணையலாம். விரைவில் வடக்குக்குச் சென்று இது பற்றி தெளிவுபடுத்தவுள்ளேன். மலையக மக்களின் பிரச்சினைகள் சம்பந்தமாகவும் தீவிரமாகக் குரல் எழுப்ப வேண்டியுள்ளது - என்றார்.
(த-5)


## முன்னாள் போராளிகளுக்கு சுயதொழில் கடன் உதவிகள்

யாழ்ப்பாணம், ஜன.21
யாழ். மாவட்டத்தில் மறுவாழ்வளிக்கப்பட்ட முன்னாள்போராளிகள் 61பேருக்கு சுயதொழில் கடன் உதவிகள் வழங்கி வைக்கப்பட்டன.
யாழ். மாவட்ட செயலகத்தில் யாழ் மாவட்ட மேலதிக செயலாளர் பா. செந்தில்நந்தனன் தலைமையில் நேற்று இந்த நிகழ்வு இடம்பெற்றது.
கடற்றொழில், கால்நடை வளர்ப்பு, கணினி, மின்னியல், தையல், தச்சு வேலை போன்ற துறைகளில் சுயதொழில் புரியவுள்ள காரைநகர்ப் பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த 17 பேர், தெல்லிப்பழைப் பிரிவைச் சேர்ந்த 6 பேர், சங்கானைப் பிரிவைச் சேர்ந்த 6 பேர், பருத்தித்துறைப் பிரிவைச் சேர்ந்த 6 பேர், ஊர்காவற்றுறைப் பிரிவைச் சேர்ந்த 7பேர், நல்லூர்ப் பிரிவைச் சேர்ந்த 7பேர், சண்டிலிப்பாய்ப் பிரிவைச் சேர்ந்த 6 பேர், கோப்பாய்ப் பிரிவைச் சேர்ந்த ஒருவர், உடுவில் பிரிவைச் சேர்ந்த 5 பயனாளிகளுக்கு சுயத்தொழில் கடன் உதவி வழங்கப்பட்டது.
இந்த நிகழ்வில் மறுவாழ்வு அதிகார சபையின் தலைவர் என்.பத்மநாதன், நிறைவேற்றுப் பணிப்பாளர் என்.புகேந்திரன், மறுவாழ்வு ஆணையாளர் நாயகத்தின் பொறுப்பதிகாரி லெப்டினன்ற் கேணல் மடுகல்ல, இலங்கை வங்கியின் மூத்த முகாமையாளர் சேதுகாவலன் மற்றும் யாழ். மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (வ-21)

## முழு அதிகாரமுள்ள மாகாண அரசையே எதிர்பார்க்கிறோம்

### நெடுந்தாரகை ஆரம்ப நிகழ்வில் சுமந்திரன் எம்.பி. கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன.21
முழு அதிகாரங்களுடன் கூடிய மாகாண அரசையே நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.
இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் தெரி வித்தார்.
உலகவங்கி, ஆஸ்திரேலியா உதவியுடன் கட்டப்பட்ட நெடுந்தாரகை படகுச் சேவை நேற்று ஆரம்பித்து வைக்கப் பட்டது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ் வாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
நெடுந்தீவுக்கான நெடுநாள் தேவைகளில் ஒன்று நெடுந்தாரகை மூலம் இன்று நிவர்த்தி செய்யப்பட்டமை போன்று எமது மக்கள் அனைவரதும் தேவைகள் நிறைவு செய்யப்பட வேண்டும்.
இங்கே வருகை தந்துள்ள அமைச்சர் பைசர் முஸ்தபா, எமது மக்களின் உள்ளத்தில் உள்ளவற்றையும், அவர்கள் எதிர்பார்ப்பதையும் அறிந்து செல்லவேண்டும். இதன்மூலம் தென்னிலங்கையில் எழும் கேள்விகளுக்கு அவர் பதிலளிக்க முடியும்.
முதலமைச்சரின் உரையில் சொல்லத் தயங்கிய ஒரு விடயத்தையும் சுட்டிக் காட்டுகின்றேன். நாம் எதிர்பார்ப்பது சில அதிகாரங்களுடன் கூடிய மாகாண சபையை அல்ல. முழு அதிகாரங்களுடன் கூடிய மாகாண அரசையே எதிர்பார்க்கின்றோம். இவைகள் தொடர்பிலும் பேச்சுக்கள் இடம்பெறுகின் றன-என்றார். (த-101)



## சீனாவின் அலிபாபா இங்கு முதலிட ஆர்வம்

கொழும்பு, ஜன. 21
உலகின் மிகப் பிரபலமான சீன இணைய வணிக நிறுவனமான அலிபாபா, இலங்கையில் முதலீடு செய்வதில் ஆர்வம் காட்டி வருவதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது.
டாவோசில் நடைபெறும் உலகப் பொருளாதார மாநாட்டில், அலிபாபா நிறுவனத்தின் தலைவரான ஜாக் மாவை, நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.
இந்தச் சந்திப்பின்போதே, இலங்கையில் முதலீடு செய்வதற்கான உடனடி நடவடிக்கையை ஆரம்பிக்கப் போவதாக, அலிபாபாவின் தலைவர் ஜாக் மா தெரிவித்துள்ளார்.
தமது முதலீட்டுத் திட்டம், நூற்றுக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கும் வகையில் அமைந்திருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (த-5)

## முதலமைச்சர் நிதியச் சட்ட வரைவு சட்டமா அதிபரிடம் தூங்குகிறது

### ஐரோ. ஒன்றியத் துதுவரிடம் எடுத்துக் கூறினார் விக்கி

யாழ்ப்பாணம், ஜன.21
அனுமதிக்காக அனுப்பி வைக்கப்பட்ட வடக்கு மாகாண முதலமைச்சர் நிதியம் நியதிச் சட்ட வரைவு சட்டமா அதிபர் திணைக்களத்தில் உறங்கிக் கொண்டிருக் கின்றதாக முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.
வடமாகாண முதலமைச்சரை ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் போல் நேற்று வெள்ளிக்கிழமை முதலமைச்சர் செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார். இந்தச் சந்திப்பின் போது, வடக்கு மாகாண முதலமைச்சர் நிதியம் நியதிச் சட்டம் குறித்து ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர் கேள்வி எழுப்பினார். இதற்குப் பதிலளிக்கும் போதே முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:



முதலமைச்சர் நிதியம் அமைக்க அனுமதி தர முடியாதென முன்னர் இருந்த ஆளுநர் சந்திரசிறி கூறியிருந்தார். பின்னர் வந்த பளிகக்கார முதலமைச்சர் நிதியம் தருவதாகக் கூறினார். அவர் கூறியவாறே சென்றுவிட்டார். தற்போதுள்ள ஆளுநர் ரெஜினோல்ட் குரே தருவதாக கூறி வரைபினைப் பெற்றுக்கொண்டார். அந்த வரைபு சட்டமா அதிபர் திணைக்களத்தில் தற்போது உறங்கிக்கொண்டிருக்கின்றது. முதலமைச்சர் நிதியம் நியதிச் சட்டம் இதுவரையில் எனது கையில் கிடைக்கவில்லை.
முதலமைச்சர் நிதியம் நியதிச் சட்டம் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்தியுள்ளேன்.
அரசுடனும், சட்டமா அதிபர் திணைக்களத்துடனும் கதைத்து நியதிச் சட்டத்தினை விரைவில் நடைமுறைப்படுத்துவதற்கான நடவ டிக்கை மேற்கொள்வதாக ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர் உறுதியளித்துள்ளார்.
ஜி.எஸ்.பி. பிளஸ் உள்ள திட்டங்க்ளை ஜெனிவா உடன்படிக்கையின் பிரகாரம் அரசு ஏற்றுக்கொண்டுள்ளது.
ஏற்றுக்கொண்டவாறு அரசு அவற்றினை நடைமுறைப்படுத்துகின்றதா என்பது பற்றி அறிந்துகொள்ளுமாறும் தூதுவரிடம் வலியுறுத்தினேன் - என்றார். (வ-106)



# மண்முனைப்பற்றில் நேற்று மழை வேண்டிப் பொங்கல்

கொக்கட்டிச்சோலை, ஜன.21
மழை வேண்டியும், சூரியன், பட்டிகளுக்கு நன்றி செலுத்தும் வகையிலும் மண்முனைப் பற்று பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட தாழங்குடா ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய முன்றிலில் பொங்கல் விழா நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.
தாழங்குடா முச்சந்தியில் இருந்து கலாசார ஊர்வலம் ஆரம்பித்து ஆலயத்தை வந்தடைந்தது. பின்னர் ஆலயத்தின் முன்பாக 25 பானைகளில் பொங்கல் பொங்கப்பட்டது.
இயற்கையைக் கொண்டு அலங்கரிக்கப்பட்ட மேடை அமைப்புக் கொண்ட வீட்டில் கலை நிகழ்வுகளும் நடைபெற்றன. தமிழர்கள் உழவுத் தொழிலுக்காகப் பயன்படுத்தும் பாரம்பரிய பொருள்கள் காட்சிப்படுத்தப்பட்டன.
மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் சத்தியானந்தி நமசிவாயம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (து)

# மட்டக்களப்பில் பரவலாக மழை

## ஆயினும் நெல் அழிவால் விவசாயிகள் பெரும் பாதிப்பு

களுவாஞ்சிகுடி, ஜன.21
மட்டக்களப்பு மாவட்டத்தில் மிக நீண்ட நாள்களின் பின்னர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலையிலிருந்து பரவலாக மழை பெய்து வருகிறது. ஆயினும் இந்த மழை வீழ்ச்சியால் நெற்பயிர்களுக்குப் பயனேதும் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டது.
எதிர்பார்த்த மழை வீழ்ச்சி கிடைக்காததால் விவசாயிகள் உள்ளிட்ட பலரும் பெரிதும் பாதிப்படைந்திருந்தனர். இந்நிலையில் நேற்றுமுன்தினமும் நேற்றும் அங்கு பரவலாக மழை பெய்தது.
இது குறித்து மட்டக்களப்பு மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் ந.சிவலிங்கம் தெரிவித்ததாவது:
மட்டக்களப்பு மாவட்டத்தில் 80 ஆயிரம் ஏக்கர் நெல்வயல்கள் வறட்சியால் பாதிப்படைந்துள்ளன. இதில் 32 ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட நெல்வயல்கள் முற்றாகக் கைவிடப்பட்டுள்ளன.
பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணங்கள் வழங்கும் அறிவிப்புகள் எதுவும் இதுவரை கிடைக் கவில்லை. ஆனால் காப்பு றுதிச் சபைக்கு இந்த விடயம் தொடர்பில் அறிவிக்குமாறு எமக்கு அறிவுறுத்தப்பட் டுள்ளது.
நேற்றில் இருந்து மட்டக்களப்பு மாவட்டத்தில் பரவலாக மழை பெய்து வருகிறது. ஆனாலும் வேளாண்மைக்கு தற்போது பெய்கின்ற மழை பயன்தரக்கூடியதாக அமையாது. இந்த மழை வீழ்ச்சி எதிர்வரும் திங்கட்கிழமை வரை கிடைக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன. இனி மேல் கிடைக்கின்ற மழை வீழ்ச்சியில் மாவட்டத்திலுள்ள குளங்கள் நிரம்பினால் அது எதிர்வரும் காலபோக வேளாண்மைக்குச் சாதகமாக அமையும்- என்றார்.
மட்டக்களப்பில் மழை வேண்டி பல இடங்களிலும் ஆலயங்களில் சிறப்புப் பூசைகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (து)



# சிறிலங்கன் விமான நிறுவனத்துக்குள் மோசடிக் கும்பல்

## ஒப்புக்கொண்டார் கபீர் ஹாசிம்

கொழும்பு, ஜன. 21
சிறிலங்கன் விமான சேவை நிறுவனத்தில் மோசடிக் கும்பல் செயற்பட்டு வருவதை அமைச்சர் கபீர் ஹாசிம் ஒப்புக் கொண்டுள்ளார்.
கொழும்பில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
சிறிலங்கன் விமான சேவை நிறுவனத்தில் ஒரு மோசடிக் கும்பல் இயங்கி வருகின்றது என்பதனை ஒப்புக்கொள்கின்றேன். இந்த விடயம் குறித்து துரித கதியில் விசாரணைகள் நடத்தப்படும். கடந்த அரசின் ஆட்சிக் காலத்தில் சிறிலங்கன் விமான சேவை நிறுவனத்தில் பெரியளவில் மோசடிகள் இடம்பெற்றன. இந்தச் சம்பவங்கள் தொடர்பில் சிறப்பு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
பொது எதிரணியில் அங்கம் வகிக்கும் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் மக்களைப் பிழையாக வழிநடத்தும் நோக்கில் அண்மையில் எனக்கு எதிராக முறைப்பாடு செய்திருந்தனர். இந்த முறைப்பாடு ஒரு பொய்யான முறைப்பாடாகும் - என்றார்.
கூட்டு அரசில் அங்கம் வகிக்கும் 10 அமைச்சர்கள் செய்து வரும் ஊழல், மோசடிகளை வெளியிட்டு அவர்களுக்கு எதிராக எப்.சி.ஐ.டியில் முறைப்பாடுகளையும் மகிந்த அணியினர் பதிவு செய்து வருகின்றனர். கடந்த புதன்கிழமை அமைச்சர் கபீர் ஹாசிம் விமானக் கொள்வனவின்போது 140 மில்லியன் ரூபாவைச் சுருட்டினார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே முறைப்பாடு பதிவு செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (து-5)

# எதிர்பார்க்கும் அதிகாரங்கள் இல்லையேல் அரசமைப்பை எதிர்ப்போம்

## பிரதியமைச்சர் ஹரீஸ் அரசுக்கு எச்சரிக்கை

எருவில், ஜன.21
வடக்கு-கிழக்கு மக்களுக்குச் சரியான தீர்வைப் புதிய அரசமைப்பில் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதில் பிடிவாதமாக இருக்கின்றோம். நாங்கள் வேண்டி நிற்கின்ற அதிகாரப் பகிர்வு கிடைக்காவிட்டால் புதிய அரசமைப்புக்கு ஒத்துழைப்பு வழங்கமாட்டோம். இவ்வாறு விளையாட்டுத்துறைப் பிரதியமைச்சர் எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.
முன்னைய அரசுஐரோப்பிய நாடுகளின் அயலுறவுக் கொள்கையுடன் முரண்பட்டு நின்றமையால் தொழிற் சந்தைகள், ஜி.எஸ்.பி. வரிச்சலுகை போன்றவை கிடைக்காமல் போனதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.



கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
கடந்த கால ஆட்சியின் போது நாட்டின் அயலுறவுக் கொள்கையில் ஏற்பட்ட பிழையான முடிவு காரணமாக எமக்குக் கிடைக்க வேண்டிய பல நன்மைகள் கைநழுவின.
இந்த நாட்டில் புதிய அரசு பொறுப்பை ஏற்றதன் பின்னர், அயலுறவுக் கொள்கையில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக எமக்குக் கிடைக்காமல் இருந்த பல நன்மைகள் கிடைக்கவுள்ளன. அதிலும்குறிப்பாக எமது தலைமை அமைச்சர் ரணில் வெளிநாட்டில் இருந்து கொண்டு எமது நாட்டுக்குத் தேவையான பல நன்மைகளைப் பெற்று வருகின்றார். அதில் ஒன்றுதான் ஜி.எஸ்.பி. வரிச் சலுகையாகும்- என்றார். (து-ஐ-ய)

# வாகனம் கால்வாயில் விழுந்து விபத்து; சகோதரர்கள் சாவு

கொழும்பு,ஜன.21
தெஹியத்தகண்டிய – வேவிசிரிகம பிரதேசத்தில் கப் ரக வாகனம் ஒன்று ஹேணானிகல கால்வாயில் வீழ்ந்து மூழ்கி விபத்துக்குள்ளானதில் இருவர் உயிரிழந்தனர்.
இந்த விபத்து நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.
தொடுவாவா நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த கப் ரக வாகனம் அதிவேகத்தில் பயணித்துள்ள நிலையில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.
இதேவேளை, சம்பவத்தில் உயிரிழந்துள்ளவர்கள் சகோதரர்கள் எனவும், சடலங்கள் உடற் கூற்றுப் பரிசோதனைக்காக தெஹியத்தகண்டிய மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.
விபத்துத் தொடர்பில் தெஹியத்தகண்டிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாக திருமலையிலும் இன்று கவனவீர்ப்பு

திருமலை, ஜன.21
தமிழர் பாரம்பரிய விளையாட்டான ஜல்லிக்கட்டுத் தடைக்கு எதிராக தமிழகத்தில் இடம்பெற்றுவரும் போராட்டங்களை ஆதரித்து இன்று திருகோணமலையிலும் மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.
இன்று மாலை 4 மணிக்கு திருமலை நகரசபையை அண்மித்த பகுதியில் போராட்டம் நடைபெறும். திருகோணமலை தமிழர் ஒன்றியத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தப் போராட்டத்தில் அனைவரையும் கறுப்புநிற ஆடையணிந்து கலந்து கொள்ளுமாறு வேண்டு கோள் விடுக்கப்பட்டுள்ளது. (து-ய-45)

# காவலரணுக்கு அண்மையில் குண்டு மீட்பு

யாழ்ப்பாணம், ஜன.21
அச்சுவேலி இராணுவக் காவலரணுக்கு அண்மித்த பகுதியில் கைக்குண்டு ஒன்றை மீட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
அச்சுவேலியில் உள்ள இராணுவக் காவலரண் ஒன்றுக்கு அண்மித்த பகுதியில் கைக்குண்டு உள்ளது என நேற்று முன்தினம்மாலை அச்சுவேலிப் பொலி ஸாருக்குத் தகவல் கிடைத் தது.
குறித்த பகுதிக்குச் சென்ற பொலிஸார் சிறப்பு அதிரடிப் படையினரின் உதவியுடன் குண்டை மீட்டனர். (து-26)

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



# பட்டப்பகலில் மூன்று வீடுகள் உடைத்து திருட்டு

யாழ்ப்பாணம்.ஜன. 21
கொற்றாவத்தை, சக்களாவத்தை பிரதேசத்தில் நேற்றையதினம் பகல் நேரத்தில் மூன்று வீடுகள் உடைக்கப்பட்டு பொருள் கள் திருடப்பட்டுள்ளன. குறித்த திருட்டுச் சம்பவம் இடம்பெற்ற இரண்டு வீடுகளின் உரிமையாளர்கள் தோட்டத்தொழில் செய்பவர்கள் . மூன்றாவது வீட்டின் உரிமையாளர் ஆசிரியையாவார்.பகல்வேளையில் நடைபெற்ற திருட்டுச்சம்பவத்தில் குறித்த ஆசிரியையின் வீட்டின் கதவை உடைத்து உட்புகுந்த திருடர்கள் 10 பவுண் நகை மற்றும் 8ஆயிரம் ருபா பணத்தைத் திருடிச் சென்றிருக்கிறார்கள். பாடசாலை முடித்து வந்த போதே வீட்டில் திருட்டுப் போனமை குறித்த ஆசிரியைக்குத் தெரிய வந்தது. அடுத்து பொலிஸாருக்கு தெரியப்படுத்தியிருக்கிறார். ஏனைய இரண்டு வீடுகளிலும் 7பவுண் நகை மற்றும் 10 ஆயிரம் ருபா பணம் ஆகியவை திருட்டுப் போயிருக்கின்றன. திருட்டு நடைபெற்ற இடத்துக்கு சென்ற வல்வெட்டித்துறைப் பொலிஸார் விசாரணைகளை நடத்தியதுடன் கைவிரல் தடயங்களையும் சேகரித்துச் சென்றனர்.
(க-26 - ரி-1)



# பொது அமைப்புகளுக்கு பொருள்கள் விநியோகம்

கிளிநொச்சி ஜன 21
கரைச்சி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பொது அமைப்புகளுக்கான பொருள்கள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனால் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன
கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி பிரதேச செயலகப்பிரிவில் உள்ள அபிவிருத்திப் பணிகளுக்கென 2016 ஆம் ஆண்டு அமைச்சரின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் ஒரு லட்சத்து 32 ஆயிரத்து 500 ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அந்த வகையில் நேற்று முன்தினம் கரைச்சி பிரதேச செயலகத்தில் வைத்து பொது அமைப்புக்களுக்கான பொருள்கள் வழங்கப்பட்டன. கிளிநொச்சி பொன்னகரில் அமைந்துள்ள சிவபாதம் கலையக பாடசாலையில் 4 லட்சம் ரூபா பெறுமதியில் சிறுவர் பூங்கா அமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது
இந்த நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், பிரதேச செயலர் நாகேஸ்வரன், ஐ.தே கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் என பலரும் கலந்து கொண்டனர். (க -6- 34)

# குறிகாட்டுவான் துறைக்கு மின்சாரம் வழங்குங்கள்

## உள்ளூராட்சி அமைச்சரிடம் நேற்று அப்பகுதி மக்கள் நேரில் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன.21
குறிகாட்டுவான் சந்திவரை வந்த மின்சாரத்தை இறங்குதுறைவரை கொண்டுவந்து இப்பகுதியூடான போக்குவரத்தை இலகுப டுத்துவதற்கு ஆவன செய்யுமாறு மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சர் பைசல் முஸ்தபாவிடம் அப்பகுதிமக்கள் கோரிக்கை விடுத்தனர்.
குறிகாட்டுவான் -நெடுந்தீவு இடையிலான புதிய படகுச் சேவையை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்ட அமைச்சரிடமே அப்பகுதி மக்கள் மேற்படி கோரிக்கையை விடுத்தனர்.
நயினாதீவு , நெடுந்தீவு , அனலைதீவுமற்றும்எழுவை தீவுகளுக்கான பிரதான போக்குவரத்து மார்க்கமாக விளங்கும் குறிகாட்டுவான் இறங்குதுறைப் பிரதேசத்துக்கு இன்றுவரைக்கும் மின்சாரம் கிடையாது. இதனால் இப்பகுதியூடாக நயினாதீவு ஆலய உற்சவம் மற்றும் கச்சதீவு ஆலயங்களுக்கான போக்குவரத்துக் காலத்தில் தீவுகளில் வாழும் மக்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.
இதன் காரணமாக குறிகாட்டுவான் சந்தியில் இருந்து 300 மீற்றர் வரையான இந்த இறங்குதுறைப் பிரதேசத்துக்கு மின் இணைப்பினை வழங்கி பாதுகாப்பான போக்குவரத்திற்கு உதவ முன்வரவேண்டும்.
இது குறித்து பலதடவைகள் உள்ளூர் அரசியல்வாதிகளின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. இன்று வரையில் குறித்த பணி இடம்பெறவில்லை.
எனவே மேற்படி தேவையின் முக்கியத்துவத்தை உணர்ந்து குறித்த 300 மீற்றருக்கானமின்இணைப்பு வசதியை ஏற்படுத்தித் தருமாறு கோருகின்றோம். என்றனர். (க-101)

# வவுனியா வடக்குச் சங்கத்தின் கிளை அகற்றப்படவில்லை

## ஒருங்கிணைப்புக் குழுத் தீர்மானம் உதாசீனம்

முல்லைத்தீவு, ஜன. 21
ஒட்டுசுட்டான், முத்துஐயன்கட்டு பலநோக்கு கூட்டுறவுச் சங்கதின் ஆளுகைப் பகுதியான ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பகுதியில் வவுனியா வடக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தால் அமைக்கப்பட்ட கிளையை உடனடியாக அகற்றுமாறு முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இணைத்தலைவர்களால் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்த நிலையில் இதுவரையில் அந்தக் கிளை அகற்றப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.
ஒட்டுசுட்டான், முத்துஐயன்கட்டு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக்கடை ஒன்று கரிபட்ட முறிப்புப் பகுதியில் இயங்கி வருகின்றது. இந்தநிலையில், வவுனியா வடக்கு ப.நோ.கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக்கடை ஒன்றை அதே பகுதியில் அமைந்துள்ளனர். இது தொடர்பாகக் கடந்த 19ம் திகதி நடைபெற்ற முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் கருத்து முன்வைக்கப்பட்டது. இதனை ஆராய்ந்த இணைத்தலைவர்கள் குறித்த ஒரு சங்கத்தின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிக்கு அண்மையில் உள்ள வேறொரு சங்கத்தால் கிளைக்கடைகள் நடத்துவது ஏற்றுக்கொள்ளக் கூடியது அல்ல. எனவே குறித்த பகுதியில் அமைந்த சங்கக்கடையை உடனடியாக அகற்றுமாறு இணைத்தலைவர்களால் தீர்மானம் எடுக்கப்பட்டது. முடிவெடுக்கப்பட்டு ஒரு மாத காலம் கடந்தநிலையில் இதுவரைக்கும் சங்கக் கிளை அகற்றப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.
ஒட்டுசுட்டான் கரிபட்ட முறிப்பு பகுதியினரும், நெடுங்கேணி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுச்சபையில் அங்கத்தவர்களாக இருக்கின்றார்கள். அவர்கள் குறித்த கிளையைத் தமது பகுதியில் இருந்து அகற்றுவதற்கு அனுமதி கொடுக்கவில்லை.
கிளை தமது பகுதியில் இருப்பதைத்தான் விரும்புகிறார்கள். இதனால் அகற்றப்படவில்லை என முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் தெரிவித்தார். (க-7)

# அதிரடிப் படையின் ஜீப் மோதி குடும்பத்தலைவர் படுகாயம்

*மாங்குளத்தில் நேற்று மாலை சம்பவம்*

மாங்குளம், ஜன. 21
மாங்குளம் எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு முன்பாக சிறப்பு அதிரடிப் படையினர் பயணித்த ஜீப் வண்டியும் மோட்டார் சைக்கிளும் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த குடும்பத்தலைவர் படுகாயம் அடைந்த நிலையில் மாங்குளம் ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக் சிகிச்சைகளுக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு மாற் றப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.
இந்தச் சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை மாலை 6 மணியளவில் இடம்பெற்றது.
சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவது,
கிளிநொச்சியில் இருந்து நெடுங்கேணி நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்த குடும்பத்தலை வர் மாங்குளம் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் நிரப்புவதற்காக திரும்பியுள்ளார். அந்தவேளை வவுனியாவில் இருந்து கிளி நொச்சி நோக்கிப் பயணித்த சிறப்பு அதிரடிப் படையினரின் ஜீப் வண்டி வேகக் கட்டுப்பாட்டை இழந்து முன்னால் சென்ற மோட்டார் சைக்கிள் மீது மோதி விபத்திற்குள்ளாகியது.
மோட்டார் சைக்கிளில் பயணித்த குடும்பத்தலைவர் தூக்கி வீசப்பட்டு படுகாயமடைந்தார். அவர் உடனடியாக மாங்குளம் ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். மேலதிக சிகிச்சைகளுக்காக அவர் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.
வவுனியா நெடுங்கேணியைச் சேர்ந்த ஓமாந்தரம் செல்லத்துரை (வயது - 42) என்பவரே படு காயம் அடைந்தார்.
சம்பவம் தொடர்பாக மாங்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (வ-422)

# ஒன்றுகூடல் நிகழ்வு

யாழ்ப்பாணம். ஜன. 21
வட இலங்கை நெசவுப் போதனாசிரியர் சங்கத்தின் ஒன்று கடல் நிகழ்வு இன்று காலை 9.30 மணிக்கு நல்லூர் அரசடிஅரச நெசவு பயிற்சிக் கலாசாலை மண்டபத்தில் நடைபெற உள்ளது.
இந்த நிகழ்வில் வடமாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் முன்னாள் உதவிச்செயலர் கந்தையா கனகரட்ணம் கலந்து கொள்ள உள்ளார். (க-ரி-1)

# குருநகர் மக்கள் ஒன்றியத்தால் பல்கலை. மாணவர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.21
குருநகர் கிராமத்தின் கல்வி வளர்ச்சிக்கும், நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், வாழ்க்கையைச் செலுத்த சிரமப்படும் இந்தக் கிராம மக்களுக்கும் முன்னுரிமை கொடுத்து உதவி செய்துவரும் மக்கள் நேய அமைப்பான குருநகர் மக்கள் முன்னேற்ற ஒன்றியம், பல்கலைக்கழகத்துக்குச் செல்லத் தகுதி பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வைக் குருநகர் கலாசார மண்டபத்தில் கடந்த மாதம் 30ஆம் திகதி நடத்தியது.
இந்த நிகழ்வு ஒன்றியத் தலைவர் ஞா.லூயிஸ் அன்ரனி தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வின் முதன்மை விருந்தினராகக் குருநகர் புனித யாகப்பர் ஆலயப் பங்குத் தந்தை வண.பிதா ஜே.ஜே.மௌலிஸ் அடிகளாரும், சிறப்பு விருந்தினர்களாக யாழ். சென்ஜேம்ஸ் மகாவித்தியாலய அதிபர் கே.கலியுகன், யாழ். சென்ஜேம்ஸ் மகளிர் வித்தியாலய அதிபர் அ.மரியதாஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.
இந்த அமைப்பின் செயற்பாடுகள் சம்பந்தமாக உரை நிகழ்த்திய அமைப்பின் செயலாளரும் சமாதான நீதிவானுமான அ.க.ஏனஸ்ற் தமதுரையில் பின்வருமாறு தெரிவித்தார்.
இந்த அமைப்புக்கான நிதியுதவி இத்தாலி பாலர்மோவில் வாழும் குருநகர் உறவுகளால் வழங்கப்படுகிறது. இந்தக் கிராமத்தின் கல்வி வளர்ச்சிக்கும், நோய் மற்றும் ஜீவாதாரம் ஆகியவற்றுக்கும் இந்த அமைப்பு முன்னுரிமை கொடுத்துச் செயற்படுகிறது. பாலர்மோ இத்தாலிய உறவுகள் இந்த மண்ணையும் இந்த மக்களையும் நேசித்து உதவும் கரங்களாகச் செயற்படுகிறார்கள் என்று தெரிவித்தார்.
2015 க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழகம் செல்லத் தகுதிபெற்றுள்ள குருநகரைச் சேர்ந்த மாணவிகளான எமில் ஜான்சன் கமன்சி டொன் பொஸ்கோ, யூலியா லிவிலினி, அன்ரனி ஜோஸ் சுஜி, அன்பழகன் சலானா, பிரான்ஸிஸ் ஆன்றெபேக்கா, கிறிஸ்துராசா மேரி சிறிசாந்தா, லிங்கம் சொபிகா லூர்த்து றொபட் கெனடி றெபேக்கா, மார்சல்ஸ் றஜீவ்குமார் கொலஸ்ரிக்கா ஆகியோருக்கும் மாசல்ஸ் றெஜி ஜெயக்குமார் தனுஜன், மரியதாஸ் தனுஜன், அரங்கேதீஸ்வரன் இளங்கீரன் ஆகிய மாணவர்களுக்கும் ஊக்குவிப்பு நிதியாக தலா ரூபா 5 ஆயிரம் வழங்கப்பட்டன.
மேலும் காலணி தேவையான மாணவர்களுக்குக் காலணிகளும் சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டுச் சத்திரசிகிச்சை செய்ய வேண்டியவர்களுக்கான உதவி நன்கொடைப் பணமாக ரூபா 3லட்சம் ரூபாவும் வழங்க இந்த அமைப்பு முடிவு செய்துள்ளதாகவும், இதற்கான நிதி பாலர்மோ, இத்தாலியில் வசிக்கின்ற உறவுகளால் சேர்க்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது எனவும் செயலாளர் அ.க.ஏனஸ்ற் தெரிவித்தார். (க-51)

NEW
# போத்தீஸ்

திருமணப் பட்டுப்புடைவைகளின் ஆலயம்

**Alayam of Silks**

ஆடவர்கள், சிறுவர், சிறுமியருக்கான
அனைத்துத் தெரிவுகளும் ஒரே இடத்தில்

ஆண், பெண்களுக்கான
திருமண பட்டுப் புடைவைகள்
மற்றும் மங்கலகரமான
நிகழ்வுகளுக்கான அனைத்து
புடைவைகளும்

NEW COLLECTION

NEW STYLE

காரியாலயத்துக்குரிய
புடைவைகள்
**(Office wear sarees)**

ஒரே நிறத்திலும் ஒரே
கூரையின்கீழ்
பெற்றுக் கொள்ளலாம்.



இல. 27, 28, கஸ்தூரியார் வீதி,
(புதிய மாநகரசபைக் கட்டடம்)
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 5464



ICBT
CAMPUS
JAFFNA

www.icbt.lk



# CIVIL ENGINEERING
# QUANTITY SURVEYING

Qualified Lecture Panel | Library, Laboratory, Modern Lecture Hall facilities
Cafeteria | Recreation Area | Student Friendly Environment | Easy Payment

**Accredited by:**
Cardiff Metropolitan University, UK | European Quality Assurance Agency | NAARIC

580,Hospital Rd., Jaffna | Tel: -0214 777 888

**0770 746 553 | 0769 289 784**



# நொதேண் சென்றல் வைத்தியசாலையில்

நீங்கள் மூட்டுக்களில் நோவு, இறுக்கம், வீக்கம் போன்ற உபாதைகளால் அவதிப்படுகிறீர்களா?
தகுந்த வைத்திய ஆலோசனைகளின் பின்னர் காலதாமதமின்றி உங்களுக்கு
ஏற்ற நேரத்தில் சத்திர சிகிச்சைகளை மேற்கொள்ள முடியும்.
உலகத்தரம் வாய்ந்த எலும்பியல் சத்திர சிகிச்சைகள் உங்கள் காலடியில்!







- யாழ். நொதேண் சென்றல் வைத்திய சாலையில் நவீன தொழில்நுட்பங்களுடன் கூடிய எலும்பியல் சத்திரசிகிச்சைக் கூடங்கள்
- அனைத்து வகையான எலும் பியல் பிரச்சினைகளுக்குமான ஆலோசனைகளும் சிகிச்சைகளும்

- *Total Knee replacement (TKR)*
- *Total Hip replacement (THR)*
- *Open reduction internal fixation (ORIF- plates and screws)*
- *Dynamic hip screw fixation (DHS)*
- *Proximal femoral nailing (PFN)*
- *External fixation*
- *Austin moor prosthesis of hip (AMH)*
- *Anterior cervical decompression and fusion (ACDF)*
- *Lumbar microdectomy and screw fixation*
- *L4-L5 microdissectomy*
- *Intramedullary nailing*
- *Arthroscopy*

## Northern Central Hospitals (PVT) LTD

342, Palaly Road, Thirunelvely, Jaffna.

T.P:021 320 2611, 021 221 9977, 021 222 2263

E.mail: nchjaffna@gmail.com

**Web: www.nchjaffna.com**

(e/27309) (13.18)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜன,21
வடக்கு மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் 2017ஆம் ஆண்டுக்கான வேலைத்திட்டங்கள் தொடர்பிலான கலந்துரையாடல் மற்றும் அமைச்சு மட்ட ஆலோசனைக்குழுக்கூட்டம்நாளை மறுதினம் பி.பகல் 1 மணிக்கு குருநகரில் அமைந்துள்ளதிணைக்கள மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. (வ-ரி)

## மெய்வல்லுநர் போட்டிகள்

தென்மராட்சி,ஜன.21
மட்டுவில் தமிழ்க் கலவன் வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டிகள் எதிர்வரும் 26ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப. 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.
வித்தியாலய அதிபர் வே.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறும் போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராகத் தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சி.சிவநாதனும், சிறப்பு விருந்தினராக வித்தியாலயத்துக்கான மைதானத்தை அன்பளிப்பாக வழங்கிய பழைய மாணவர்களான ராதாகிருஷ்ணன் தம்பதியினர் கலந்து கொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-9)

++++++++++++

தென்மராட்சி,ஜன.21
கச்சாய் அரசினர் தமிழ்க் கலவன் வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டிகள் எதிர்வரும் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.
அதிபர் கா.குணசிங்கம் தலைமையில் நடைபெறும் போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட சமுதாயத்துறையைச் சேர்ந்த யோசேப்பின் திருமகள் சிவசங்கர் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் செல்வி பிரதீபா கிருஷ்ணபிள்ளை கலந்து கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது.
(வ-9)

++++++++++++

தென்மராட்சி, ஜன.21
கைதடி - நுணாவில் அ.த.க. பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் எதிர்வரும் 24ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.
பாடசாலை அதிபர் ஆ. தங்கவேலு தலைமையில் நடைபெறும் போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராகத் தென்மராட்சி கல்வி வலயப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் திருமதி சி.சிவநாதனும், சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணம் மேர்க்கண்டைல் பாதுகாப்பு சேவை நிலைய முகாமைத்துவப் பணிப்பாளர் வி.சுகுமார், பாடசாலை பழைய மாணவன் பொன்.கந்தையா ஆகியோரும் கலந்து கொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-9)

### வாட்டும் வறட்சியில் குடிதண்ணீர் விநியோகத்துக்கு

# 15 பவுசர்கள், 500 நீர்த் தொட்டிகள் வடக்குக்கு உடனடியாகத் தேவை

### *அரச தலைவரிடம் கோரினர் மாவட்டச் செயலர்கள்*

யாழ்ப்பாணம், ஜன. 21
வடக்கின் வறட்சி நிலையை எதிர் கொள்வதற்கு 15 நீர்த்தாங்கி பாரவூர்திகளும் 400 நீர் விநியோகத் தொட்டிகளும் உடனடியாகத் தேவை என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் மாவட்டச் செயலாளர்கள் கோரிக்கை முன்வைத் துள்ளனர்.
நாட்டில் நிலவும் வறட்சியை எதிர்கொள்வதற்கு உடனடியாக மாவட்டங்களின் தேவை மற்றும் எதிர்காலத் தேவைகள் குறித்து 25 மாவட்டச் செயலாளர்களையும் அழைத்து அதுதொடர்பில் கலந்துரையாடியதோடு, மாவட்டத்தின் உடனடித் தேவைகள் தொடர்பிலும் அரச தலைவர் கேட்டறிந்தார்.
வடக்கின் சார்பில் கலந்து கொண்ட 5 மாவட்டச் செயலாளர்களும் வறட்சி தொடருமானால் அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பில் இரு வகையான தேவைகள் முன் வைக்கப்பட்டன. இதில் குடிதண்ணீர் மற்றும் விவசாயம் தனித் தனியே முன்வைக்கப்பட்டன.
இந்த நிலையில் உடனடியாக குடிதண்ணீர் தேவையை நிவர்த்தி செய்வதற்காக 15 பார ஊர்தியுடன் கூடியதான நீர்த் தாங்கிகளும் 400 நீர் விநியோகத் தொட்டிகளும் கோரப்பட்டுள்ளதுடன், வறட்சி நீடிக்குமாயின் மேலும் 26 உழவு இயந்திரங்களுடன் கூடிய நீர்த்தாங்கிகளும் 300 நீர் விநியோகத் தொட்டிகளும் தேவை என்று பட்டியலிடப்பட்டுள்ளது.
இதில் யாழ்ப்பாண மாவட்டத்துக்கு 5 பார ஊர்தி நீர்த்தாங்கி பவுசர்களும், 25 நீர் விநியோகத் தொட்டிகளும், முல்லைத்தீவுக்கு 2 பார ஊர்தி நீர்த்தாங்கி பவுசர்களும் 40 நீர் விநியோகத் தொட்டிகளும், கிளிநொச்சிக்கு 5 பார ஊர்தி நீர்த்தாங்கி பவுசர்களும் , 200 நீர்விநியோகத் தொட்டிகளும், மன்னாருக்கு 6 பார ஊர்தி நீர்த்தாங்கி பவுசர்களும் 50 நீர்விநியோக தொட்டிகளும் மற்றும் வவுனியா மாவட்டத்துக்கு 3 பார ஊர்தி நீர்த்தாங்கி பவுசர்களும் 100 நீர் விநியோகத் தொட்டிகளும் நீர் வடிகட்டிகளும் கோரப்பட்டுள்ளன.
இதேபோன்று வறட்சி தொடருமாயின் யாழ்.மாவட்டத்துக்கு மேலும் 15 உழவு இயந்திர நீர்த்தாங்கியும் முல்லைத் தீவுக்கு 4 உழவு இயந்திர நீர்த்தாங்கியும் கோரப்பட்டுள்ளதுடன் மேலதிக நீர்விநியோகத் தொட்டிகள் 5 மாவட்டங்களுக்கும் கோரப்பட்டுள்ளன. இதேபோன்றே விவசாய நடவடிக்கைக்காக நீர்ப்பம்பிகள், கால் நடைகளுக்கான நீர்த் தொட்டிகள் மற்றும் குழாய்க் கிணறுகள் அமைத்தல் போன்ற பல்வேறு திட்டங்களும் அரச தலைவரிடம் முன்வைக்கப்பட்டன.
உடனடித் தேவையாகக் கண்டறியப்பட்டுள்ள நீர் விநியோக பார ஊர்திகளும் நீர் விநியோகத் தொட்டிகளும் மாவட்டங்களுக்கு விரைவில் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.
(வ -10)

## தைப்பொங்கல் கலை விழா

யாழ்ப்பாணம், ஜன. 21
காலையடி மறுமலர்ச்சி மன்ற இளைஞர் கழகத்தின் ஏற்பாட்டில் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4 மணியளவில் தைப்பொங்கல், கலை விழா மன்றத்தின் தியாகராஜா மகேந்திரன் குடும்ப ஞாபகார்த்த உள்ளரங்கில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.
மறுமலர்ச்சி மன்ற இளைஞர் கழ கத்தின் தலைவர் செல்வன் என். சிந்துஜன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில், முதன்மை விருந்தினராகச் சங்கானை பிரதேச கலாசார உத்தியோகத்தர் த. அமலதாசனும், சிறப்பு விருந்தினராக பனிப்புலம் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெ. யூபினும் கலந்து சிறப்பிப்பர்.
சிறுவர்கள், இளைஞர்களின் கலை நிகழ்வுகளும், விவாத அரங் கமும் இடம்பெறவுள்ளன. பிரதேச மக்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு மறுமலர்ச்சி மன்ற இளைஞர் கழகத்தினர் கேட்டுள்ளனர். (வ)

## வடக்கின் உழவர் பெருவிழா நாளை

யாழ்ப்பாணம், ஜன.21
வடக்கு விவசாய அமைச்சின் 2017 ஆம் ஆண்டுக்கான உழவர் பெருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்குக் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.
இதில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கலந்து கொள்வார். 2016ஆம் ஆண்டின் சாதனை உழவர்கள் 120 பேருக்கு மதிப்பளித்தல்நிகழ்வும்நடைபெறும். இந்த மைதானத்தில் அன்றைய தினம் பி.ப. ஒரு மணிக்கு 'வறட்சியை எதிர்கொள்ளவல்ல விவசாய முறைமைகள்' என்ற காட்சியும் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ)

## கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி உயர்தரப் பரீட்சைப் பெறுபேறு

*கணிதப் பிரிவு*
பா.பாலகிரி ஏ, 2சி, ம.பிரவீண் 3சி, கி.டெலக்சன் சி, 2எஸ், நா.நிரூஜன் 2சி, எஸ், இ.சுயந்தன் சி, 2எஸ், சி.திருமகள் சி, 2எஸ்
*வர்த்தகப் பிரிவு*
கு.நிலாவினி 2பி, சி, யோ.தனுசியா 2பி, சி, ர.தரணிகா 2பி, சி, கு.தீபிகா பி, 2சி
*கலைப்பிரிவு*
தி.சசிகலா ஏ, பி, சி, ந.சதுஷா ஏ, பி, சி, செ.மயூரிகா ஏ, பி, சி, வ.குயின்ஸ்டாலியா 3பி, ச.றொபின்சன் ஏ, 2சி, ப.ஜெயந்திரன் ஏ, சி, எஸ், இ.சரத்குமார் ஏ, சி, எஸ், பி.சாரு ஜன் ஏ, சி, எஸ், ச.பிரியங்கா பி; 2சி, து.ஜென்சிகா பி, 2சி (வ)

## இலத்திரனியல் வாகன வரி அறவீடு ஆரம்ப விழா

யாழ்ப்பாணம், ஜன. 21
வடக்கு மாகாணத்தில் இலத்திரனியல் முறையிலான வாகன வருமான வரி அனுமதிப்பத்திரம் வழங்கலின் தொடக்க நிகழ்வு நாளை மறுதினம காலை 9.30 மணிக்கு யாழ். பொது நூலக மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. (வ-ரி)

## கால்நடைகள் நீர் நிலைகளை தேடி அலையும் நிலை ஏற்படும்

### *தென்மராட்சி தெற்கு மக்கள் தெரிவிப்பு*

தென்மராட்சி, ஜன.21
குளங்களில் நீர் முழுமையாக வெளியேற்றப்பட்டு வருவதால் நெல் அறுவடையின் பின்னர் மேய்ச்சலுக்கு விடப்படும் கால்நடைகள் நீருக்காக அலைய வேண்டிய நிலை ஏற்படும் என்று தென்மராட்சி தெற்குப் பிரதேச மக்கள் தெரிவித்தனர்.
தென்மராட்சி தெற்கு பிரதேசத்தின் மறவன்புலோ அறுகுவெளி, தனங்களப்பு போன்ற பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட காலபோக நெற் செய்கைக்கு போதிய மழை வீழ்ச்சியின்மையால் குளங்களை அண்டியுள்ள விவசாயிகள் குளங்களிலிருந்து நெற்பயிருக்கு நீர் பாய்ச்சி வருகின்றனர். இதனால் குளங்கள் நீரின்றிக் காணப்படுகின்றன. இந்த முறை நெல் அறுவடை மார்ச் மாதமளவில் ஆரம்பிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.
குளங்கள் நீர் வெளியேற்றப்பட்டு நீரின்றி வற்றிய நிலையில் காணப்படுகின்றன. அறுவடைக் காலம் கடும் வெய்யில் என்பதால் குளங்கள் நீரின்றி முற்றாகக் காய்ந்து விடும். தற்போது மேய்ச்சல் தரவைகளில் விடப்படும் கால்நடைகள் அறுவடை முடிந்த பின்னர் நெற்செய்கை செய்யப்பட்ட வயல்களில் மேய்ச்சலுக்கு விடப்படும். கோடை காலம் என்பதால் குளங்கள் நீரின்றிப்போகும் நிலையில் மேய்ச்சலுக்குச் செல்லும் கால்நடைகள் தண்ணீர் அருந்துவதற்கு அலையும் நிலை ஏற்படுமென மக்கள் தெரிவித்தனர்.
கோடை காலத்தில் வயல் நிலங்களில் மேய்ச்சலுக்கு விடப்படும் கால்நடைகள் மட்டுமல்ல ஏனைய உயிரினங்களும் குளங்களில் நீர் இல்லாத நிலையில் குடியிருப்புக்களை நாடி வரலாமெனவும் அவர் கூறுகின்றனர்.
குளங்களில் நீர் வற்றிக் காணப்படுவதால் தற்போது இந்த பிரிவுகளில் உள்ள குடியிருப்புக் கிணறுகளில் நீர்மட்டம் வெகுவாக குறைந்து வருகிறது. கோடைகாலத்தில் தென்மராட்சி தெற்குப் பகுதியில் பொதுமக்களும் குடிதண்ணீருக்கு அலைய நேரிடுமெனக் கூறப்பட்டது. (வ-9)

## வயோதிபர்களை அச்சுறுத்தி நகைகள், பணம் கொள்ளை

### நீர்வேலி தெற்கில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜன. 21
நீர்வேலி தெற்கு வில்லுமதவா பிரதேசத்தில் வீடு புகுந்த கொள்ளையர்கள், வயோதிபப் பெண்கள் இருவரை அச்சுறுத்தி அவர்களின் நகைகள் மற்றும் பணத்தைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச்சம்பவம்நேற்று முன்தினம் இரவுநடைபெற்றது. வீட்டில் நின்றிருந்த நாய்க்கு மயக்க மருந்து கலந்த உணவைக் கொடுத்துள்ளனர். நாய் மயங்கியதும் வீட்டின் கதவை உடைத்துக் கொள்ளையர்கள் புகுந்துள்ளனர். சத்தம் கேட்டு விழித்துக் கொண்ட வயோதிபப் பெண், அபயக் குரல் எழுப்பியதும், கொள்ளையர்கள் அவரைத் தாக்கியுள்ளனர். அவருக்கு கையில் காயம் ஏற்பட்டது.
மற்றைய பெண், கொள்ளையர்கள் முகத்தை மூடிக் கட்டியிருந்த துணியை அவிழ்ப்பதற்கு முயன்றுள்ளார். கொள்ளையர்கள் அவரை ரீப்பையினால் தாக்கியுள்ளனர். அவர் அணிந்திருந்த தங்க நகைகளையும், அங்கிருந்த ஒரு தொகைப் பணத்தையும் கொள்ளையிட்ட கொள்ளையர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.
கொள்ளைச் சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது என்று பொலிஸார் கூறினர். (வ-5-17)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன.21
பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய நல்லூர்ப் பிரதேச செயலகப் பிரிவுச் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று சனிக்கிழமை மு.ப. 10 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. இதில் முதன்மை விருந்தினராக நல்லூர்ப் பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி கலந்து கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ)

## ஆன்மீக மாநாடு

கிளிநொச்சி, ஜன.21
யெகோவாவின் சாட்சிகளின் ஆன்மீக மாநாடு நாளை ஞாயிற்றுக் கிழமை கிளிநொச்சிக் கூட்டுறவு கலாசார மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.(வ)

## மகிந்தவை நாளை சந்திக்கின்றனர் 7 முதலமைச்சர்கள்

வடக்கு-கிழக்கு மாகாண முதலமைச்சர்கள் தவிர்ந்த ஏனைய 7 முதலமைச்சர்களுக்கும், முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவுக்கும் இடையிலான சந்திப்பு நாளை காலை 8 மணிக்கு, முன்னாள் அரசதலைவரின் உத்தியோக பூர்வ இல்லத்தில் நடைபெற வுள்ளது.

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பங்களிப்பு மற்றும் அந்தக் கட்சியின் ஐக்கியம் போன்ற விடயங்கள் இந்தச் சந்திப்பில் முக்கியமான இடத்தை வகிக்கும் எனவும் தெரிய வருகின்றது.

கடந்த 11 ஆம் திகதி ஏழு மாகாண முதலமைச்சர்களும் ஒன்றுகூடி மகிந்த ராஜபக்சவைச் சந்திப்பதெனத் தீர்மானம் எடுத்தமைக்கு அமைவாக நாளை ஞாயிற்றுக்கிழமை இந் தச் சந்திப்பு நடைபெறவுள்ளது. (த-5)

### லசந்த படுகொலை

# அமைச்சர் பொன்சேகாவிடம் 5 மணி நேரம் விசாரணை

கொழும்பு, ஜன. 21
சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலை தொடர்பில், முன்னாள் இராணுவத் தளபதியும் அமைச்சருமான சரத் பொன்சேகாவிடம் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நேற்று 5 மணி நேரம் விசாரணை மேற்கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க 2009ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8ஆம் திகதி கொழும்பு நகரில் வைத்துப் படுகொலை செய்யப்பட்டார். அப்போது இராணுவத் தளபதியாக சரத் பொன்சேகா பதவி வகித்திருந்தார். லசந்த படுகொலை தொடர்பான வழக்கு தற்போது நடைபெற்று வருகின்றது. லசந்தவின் வாகனச் சாரதியைக் கடத்தி கொலை அச்சுறுத்தல் விடுத்த குற்றச்சாட்டில் இராணுவப் புலனாய்வுப் பிரிவின் உயர் அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். லசந்தவை, முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவே கொலை செய்ததாக, லசந்தவின் மகள் பொலிஸா ருக்கு வாக்குமூலம் வழங்கியிருந்தார்.

இந்த நிலையிலேயே, முன்னாள் இராணுவத் தளபதியும், அமைச்சருமான சரத் பொன்சேகாவிடம் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நேற்றைய தினம் 5 மணி நேரம் தீவிர விசாரணை நடத்தி வாக்குமூலத்தைப் பதிவுசெய்துள்ளனர். (வ-5)

## அனைத்துப் பல்கலை. மாணவர் ஒன்றிய 7 உறுப்பினர்கள் கைது

கொழும்பு, ஜன. 21
அனைத்துப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் உறுப்பினர்கள் 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு, கொள்ளுப்பிட்டியில் நேற்று முன்தினம் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் நடத்திய போராட்டத்தில் பங்கேற்ற மாணவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 4 பேர் பிக்கு மாணவர்கள் எனவும், ஏனையவர்களில் ஒரு மாணவியும், இரண்டு மாணவர்களும் உள்ளடங்குகின்றனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

(த-5)



### போகம்பரச் சிறையில் தடுப்பிலுள்ள

# தமிழ் அரசியல் கைதிகளை சந்தித்தார் செல்வம் எம்.பி.

மன்னார், ஜன. 21
கண்டி போகம்பர சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் நேற்று வெள்ளிக்கிழமை மாலை நேரில் சென்று பார்வையிட்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனுடன் சிவன் அறக்கட்டளையின் நிறுவுனர் கணேஸ்வரன் வேலாயுதமும் சென்றிருந்தார்.

இதன் போது கண்டி, போகம்பர சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 18 தமிழ் அரசியல் கைதிகளையும் சந்தித்து அவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் குறித்து செல்வம் அடைக்கலநாதன் கேட்டறிந்தார். யாழ்ப்பாணம், கிளிநொச்சி, கண்டி உட்பட பல பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் பல வருடங்களாக விசாரணைகள் இன்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று அவரிடம் சுட்டிக்காட்டப்பட்டது. எங்களை விசாரணைக்காக அழைத்துச் செல்லப்படும் நீதிமன்றங்களில் உள்ள நீதிபதிகள் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள். எனவே எமக்கு நீதியான தீர்ப்பு கிடைப்பதில்லை. எமது வழக்கு விசாரணைகள் தமிழ் நீதிபதிகள் முன்னிலையில் இடம்பெறவேண்டும் என்று போகம்பர சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 18 தமிழ் அரசியல் கைதிகளும் கோரிக்கை விடுத்தனர்.

மேலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியல்வாதிகள் யாரும் இது வரை தங்களை வந்து பார்வையிடாத நிலையில், தாம் உள ரீதியாகப் பாதிக்கப்பட்டிருந்த நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் சிவன் அறக்கட்டளையின் நிறுவுநர் ஆகியோர் நேற்றைய தினம் வந்து தங்களைப் பார்வையிட்டு தமது பிரச்சினைகளைக் கேட்டறிந்தமை மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாக அரசியல் கைதிகள் தெரிவித்தனர். (வ- 56)

# யாழ். குடாநாட்டில் 3 பேர் அவலச் சாவு

யாழ்ப்பாணம், ஜன. 21
யாழ்ப்பாணத்தில் கிணற்றுக்குள் விழுந்தும் விபத்திலும் போதையாலும் 3 பேர் அவலச் சாவடைந்தனர்.

அச்சுவேலி சிறுப்பிட்டி கிழக்கில் 20 வயது மாணவி தோட்டக் கிணற்றிலிருந்து நேற்றுமுன்தினதிரவு மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். எனினும் அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவ சோதனையில் தெரிவிக்கப்பட்டது.

சுந்தரலிங்கம் அபிநயா என்ற மாணவியே இவ்வாறு உயிரிழந்தார். கடந்த ஜீ.சி.ஈ. உயர்தரப் பரீட்சையில் இவர் சித்தியடையாததால் மனமுடைந்து காணப்பட்டார். அதனால் அடுத்த தவணைப் பரீட்சைக்கு அவரை முயற்சிக்குமாறு பெற்றோரால் கூறப்பட்டது என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினமிரவு 8 மணியளவில் அவரைக் காணவில்லை என்று தேடியபோது அருகிலுள்ள தோட்டக் கிணற்றிலிருந்து உணர்வற்ற நிலையில் மாணவி மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அதற்கிடையில் அவர் உயிரிழந்தமை பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டது.

நோர்வே நாட்டிலிருந்து வந்திருந்தவர் அதிக மது அருந்தி வந்ததால் ஈரல், இருதயம் பாதிக்கப்பட்டு நேற்றுமுன்தினமிரவு உயிரிழந்தார்.

கொழும்பு சொய்சாபுரத்தில் வசிக்கும் அவர் நோர்வேயிலிருந்து வந்து யாழ்ப்பாணம் உரும்பிராயிலுள்ள நண்பர் வீட்டில் சில நாள்களாகத் தங்கியிருந்தார். அளவுக்கதிமாக அவர் மது அருந்துபவர் என்று விசாரணையில் கூறப்பட்டது. உரும்பிராயிலுள்ள நண்பரின் வீட்டில் கட்டிலில் படுத்தவர் எழுந்திருக்கவில்லை. யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்த்த போது அவர் உயிரிழந்தமை உறுதிப்படுத்தப்பட்டது.

அச்சுவேலியில் இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்தவர் சிகிச்சை பயனளிக்காது நேற்று உயிரிழந்தார். யாழ்ப்பாணம் நாவலர் வீதியைச் சேர்ந்த எம்.இராமலிங்கம் (வயது - 72) என்பவரே உயிரிழந்தார். அச்சுவேலியில் கடந்த 16ஆம் திகதி இடம்பெற்ற விபத்தில் வீதியைக் கடந்தபோது மோட்டார் சைக்கிள் மோதியதில் அவர் படுகாயமடைந்திருந்தார். யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பயனளிக்காது நேற்றுமுன்தினம் அவர் உயிரிழந்தார்.

பொலிஸார் மற்றும் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந. பிறேமகுமார் விசாரணைகள் மேற்கொண்டனர். சடலங்கள் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. (வ-4)

# ஜல்லிக்கட்டுக் காய்ச்சல் கொழும்புக்கும் நகர்வு

*காலிமுகத் திடலில் இன்று கவனவீர்ப்பு*

யாழ்ப்பாணம், ஜன. 21
தமிழரின் பாரம்பரிய விளையாட்டான ஜல்லிக்கட்டு மீதான தடையை நீக்கக் கோரித் தமிழகத்தில் நடைபெற்றுவரும் ஆர்ப்பாட்டங்களுக்கு ஆதரவாகக் கொழும்பு காலி முகத்திடலில் இன்று மு.ப 11மணிக்கு கவனவீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளது. தமிழகத்தில் ஜல்லிக்கட்டு நடத்துவதற்குத் தடைவிதித் துள்ள நிலையில், அதற்கெதிராக தமிழகத்தின் பல பகுதிகளில் ஆர்ப்பாட்டங்கள் வெடித்துள்ளன. தமிழ் மரபைக் காக்க உலகளாவிய ரீதியில் வீதிகளில் இறங்கி போராடும் தமிழக உறவுகளுக்காகச் சமூக வலைத்தளங்கள் மூலமாக இந்தப் போராட்டத்தை முன்னெடுத்து, நடத்தவுள்ளதாக இளைஞர்கள் தெரிவித்துள்ளனர்.(த-5)

# அதிகாரப் பகிர்வுக்கு சு.கட்சி முழு ஆதரவு

*இப்படிச் சொல்கிறார் டிலான் பெரேரா*

உச்ச அளவில் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும். சிறிலங்கா சுதந்திரக் கட்சி இதில் தெளிவாக உள்ளது. நாம் பன்னாட்டுச் சமூகத்துக்கு அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்கவில்லை. எமது நாட்டில் உள்ள மக்களுக்கே அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்கப் போகின்றோம். அதனை எதிர்ப்பவர்கள் ஜனநாயக விரோதவாதிகளாவார்கள்.

இவ்வாறு இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

ஹலிஎல பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

யார் என்ன சொன்னாலும் புதிய அரசமைப்பில் உச்சளவில் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என்பதில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி தெளிவாக உள்ளது. தமது பிரதேசத்தில் காணப்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் அதிகாரம் அந்தப் பிரதேச மக்களின் கைகளில் ஒப்படைக்கப்பட வேண்டியது அவசியமானது.

கொழும்பில் மட்டும் அதிகாரங்களை மட்டுப்படுத்தி வைத்துக் கொண்டால் எவ்வாறு ஏனைய பிரதேசங்களின் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ள முடியும்.

நாம் அதிகாரத்தை அமெரிக்காவுக்கோ அல்லது இந்தியாவுக்கோ அல்லது பன்னாட்டுக்கோ பகிர்ந்தளிக்கவில்லை. எமது நாட்டின் மக்களுக்கே அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்கப் போகின்றோம். அதனை எதிர்ப்பவர்கள் ஜனநாயகத்திற்கு விரோதமானவர்கள் - என்றார். (வ-5)

# அலங்கார மின்குமிழ்களை அணைத்து மின்சாரத்தை சிக்கனமாகப் பாவியுங்கள்

*மைத்திரி கோரிக்கை*

கொழும்பு, ஜன. 21
தனியார் வர்த்தக நிறுவனங்களில் விளம்பரம் மற்றும் அலங்கரிப்புக்காகப் பயன்படுத்தப்படும் மின்விளக்குகளை அணைத்து மின்சாரத்தைச் சிக்கனப்படுத்த இணைந்து கொள்ளுமாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அனைத்துத் தனியார் நிறுவனங்களிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அரச தலைவரின் ஊடகப் பிரிவினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள பத்திரிகைச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய வறட்சியுடன் மின்சார நெருக்கடிக்கு முகம்கொடுக்க வேண்டியுள்ளதால், தற்போதிருந்தே மின்சாரத்தை சிக்கனமாகப் பாவிப்பது அனைவரினதும் பொறுப்பாகும்.

தமது பரப்புரைச் செயற்பாடுகளுக்காகப் பெரும்பாலான தனியார் நிறுவனங்களில் பயன்படுத்தப்படும் விளம்பரப் பலகைகள் அலங்கார மின் கட்டமைப்புகளுக்காகப் பெருமளவு மின்சாரம் செலவிடப்படுகிறது. அதனை மட்டுப்படுத்துவதன் மூலம் நாட்டின் பாவனையைக் கணிசமானளவு சேமிக்க முடியும். வறட்சி நீங்கும்வரை மின்சாரத்தைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் திட்டத்துக்கு வழங்கும் ஒத்துழைப்பாக இந்தச் செயற்பாட்டைப் பின்பற்றுமாறு அனைவரிடமும் அரச தலைவர் கேட்டுக் கொள்வதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-5)

## புகுமுக மாணவர்களுக்கான வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டம்
## கல்வியாண்டு 2015 / 2016

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடத்துக்குக் கல்வி ஆண்டு 2015 / 2016 இல் கலைமாணிப்பட்ட கற்கை நெறிக்குத் தெரிவு செய்யப்பட்டு பதிவை மேற்கொண்ட புகுமுக மாணவர்களுக்கான வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டம் (Orientation Programme) 2017.01.30 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறும். மாணவர்கள் குறிப்பிட்ட திகதியில் காலை 8.30 மணிக்கு சமுகமளிக்குமாறு கலைப்பீட சிரேஷ்ட உதவிப்பதிவாளர் கேட்டுக்கொள்கின்றார்.

விடுதி வசதி வழங்கப்பட்டுள்ள வெளிமாவட்ட மாணவர்கள் 2017.01.29 ஆம் திகதி முதல் விடுதிக்கு சமுகம் தருமாறு கேட்கப்படுகின்றீர்கள்.

மாணவர்கள் நிகழ்ச்சி நிரலை கலைப்பீடாதிபதி அலுவலக விளம்பரப் பலகையிலோ , www.jfn.ac.lk/arts எனும் இணையத் தளத்திலோ பார்வையிடலாம்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
(IN/00257) (11,17,18)

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழக 2015/2016 ஆம் ஆண்டுக்கான புதுமுக மாணவர்களுக்கான வருடாந்த விளையாட்டுப் போட்டி பிற்போடப்பட்டது

இம்மாதம் 20,21 மற்றும் 22 ஆகிய திகதிகளில் நடைபெறவிருந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக 2015/2016 ஆம் ஆண்டுக்கான புதுமுக மாணவர்களுக்கான பீடங்களுக்கிடையிலான வருடாந்த தடகள விளையாட்டுப்போட்டிகள் தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப்பட்டுள்ளது.

**பதிவாளர்.**

## புதிய ஏற்பாட்டு அறிமுகம்

மத்தேயு நற்செய்தி நூலின் சிறப்பு பார்வையுடன் புதிய ஏற்பாட்டு அறிமுகம் எனும் பாடநெறியை கிறிஸ்தவ இறையியல் கல்லூரி நடத்தவுள்ளது. புதிய ஏற்பாடு எண்பிக்கும் இயேசுவை அறிய, அவர் சமைக்க வந்த புதிய மானிடத்தின் பங்காளராக விரும்புவோருக்கு இக்கருத்தரங்கானது பொருத்தமானதாயிருக்கும். சனவரி 30 முதல் பெப்ரவரி 4 வரையான ஆறு நாள்களில் காலை 8.30 மணிமுதல் மாலை 5. 30 வரை வகுப்புகள் இடம்பெறும்.

அருட்கலாநிதி **டயான்சந்த் கார்** (முன்னாள் அதிபர், தமிழ்நாடு இறையியல் கல்லூரி, மதுரை, தமிழ்நாடு)
இத்தொடர் விரிவுரைகளை ஆற்றுவார்.

**இடம்:** கிறிஸ்தவ இறையியல் கல்லூரி, மருதனார்மடம்.
**காலம்:** சனவரி 30 தொடக்கம் பெப்ரவரி 4, 2017 காலை 8.30 மணி
**வாசிப்புக்குரிய நூல்கள்:** விவிலியவிளக்கம், மத்தேயு,
**வெளியீடு:** அருள்வாக்குமன்றம், - திருச்சி.

**பதிவுக் கட்டணம்:** ரூபா 1200- (6 மதியவுணவுகளுடன் காகிதாதிகள், வகுப்புக்குறிப்புகள், தேநீர் மற்றும் சிற்றுண்டிகள் உள்ளடங்கலாக.)

விண்ணப்பிக்க விரும்புவோர் தமது விண்ணப்பங்களை கல்லூரி முகவரிக்கு அனுப்பிவைக்கவும். தங்குமிட வசதிகள் தேவைப்படுவோர் குறிப்பிட்ட அளவிலான வசதிகளே இருப்பதால் முன்பதிவு செய்ய கல்லூரியுடன் அலுவலக நேரத்தில் தொலைபேசியிலும் மற்றும் ஈமெயிலிலும் தொடர்புகொள்ளலாம். விண்ணப்பிக்கப்படின், தேவையுடையோருக்கு கல்வி உபகாரம் (Scholarship) வழங்கப்பட ஏதுண்டு.

***மேலதிகவிவரங்களுக்கு:***

**கிறிஸ்தவ இறையியல் கல்லூரி,மருதனார்மடம்.**
தொலைபேசி: 021 3213210 -
principalcts@gmail.com
(ff:7803) (13,18)

### வேலையாள்கள் தேவை

வவுனியாவில் தனியார் தொழில் நிறுவனம் ஒன்றுக்கு வேலைக்கு பெண்கள் தேவை.

தொடர்பு: 077 637 7575

### சிறுநீரகம் தேவை

20 வயதுடைய மாணவர் ஒருவருக்கு சிறுநீரகம் செயலிழந்தமையால் O+ அல்லது O- இரத்தவகையைச் சேர்ந்த சிறுநீரகம் உடன் தேவை.

021 222 7263, 077 979 7403, 077 391 1406

### பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலையின் ஆசிரியை
திருமதி
**தர்சினி வசந்தமாறன்**
அவர்கள் தரம்III அதிபர் பரீட்சையில் சித்தியடைந்து யா/ மீசாலை வீரசிங்கம் ஆரம்பப் பாடசாலையின் பிரதி அதிபராக பதவியேற்றுள்ளமையினை இட்டு மகிழ்ச்சியடைவதுடன் அவர் மேலும் பல உயர் பதவிகளைப் பெற்று சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றோம்.
பாடசாலைச்சமூகம்
யா/கைதடி குருசாமி வித்தியாலயம்

### படவரைஞர் பதிவு செய்தல் - 2017

மாநகரசபையில் கட்டட அனுமதிக்கான வரைபடங்களை வரைந்து சமர்ப்பிக்க விரும்பும் படவரைஞர்கள் மற்றும் பதிவைப் புதுப்பித்துக் கொள்ள விரும்புவோர் எதிர்வரும் 31.01.2017 ஆம் திகதிக்கு முன்னர் தங்கள் பதிவுகளை மேற்கொள்ளலாம் என்பதனை சகல படவரைஞர்களுக்கும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**குறிப்பு :- மேற்குறிப்பிட்ட திகதிக்குள் பதிவுகளைப் புதுப்பிக்கத் தவறும் படவரைஞர்களது பதிவுகள் இரத்துச் செய்யப்படும்.**

ஆணையாளர், மாநகரசபை,
யாழ்ப்பாணம்.
(IN/00260) (11,17,18)

### வேலைக்கு ஆள்கள் தேவை

காட்வெயார் கடை ஒன்றுக்கு வேலையாள்கள் தேவை. அனுபவம் உள்ளவர்கள் பழகவிரும்புபவர்கள் விரும்பத்தக்கது.

077 252 8957

### கணித ஆசிரியர் தேவை

தரம் 6-8 வரையான மாணவர்களுக்கு **பரிகார கற்பிக்கும்** மாலை நேர ஆசிரியர் தேவை. மேற்படி மாணவர்களுக்கு தகைமையுடைய ஆசிரியர் தேவை.
Email: ygrojed@gmail.com

077 250 8751, 077 711 2261

### விற்பனைக்கு உண்டு

செப்பிறேற் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.

077 234 9930

### காணி விற்பனைக்கு

திருநெல்வேலி மருத்துவ பீடத்துக்கு அண்மையில் பிரம்படி லேனில் விற்பனைக்குண்டு.
I) 2 பரப்பு/6 குளி II) ஒரு பரப்பு/4 குளி III) ஒரு பரப்பு/2 குளி

தொடர்பு: 076 697 2287

### தேவை

- விற்பனையாளர், சிட்டை எழுதுநர்
- கணக்காளர்
- காசாளர்
- காசு வசூலிப்பவர்

(கணக்காளர், காசாளர், காசு வசூலிப்பவர்: அனுபவமுள்ளவர்கள் மட்டும்)

ஆர்வமுள்ளவர்கள் ஆண், பெண் இருபாலாரும் நேரில் வரவும்.
300, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

### அனெக்ஸ் வீடு வாடகைக்கு

நல்லூர் பின்புற வீதியில் அமைந்துள்ள வீட்டின் முன்பக்க ஒரு அறையும் பின்பக்க ஒரு அறையும் மொத்தம் இரண்டு அறைகள் வாடகைக்கு உண்டு. இரண்டு, மூன்று பேர் கொண்ட சிறிய குடும்பத்துக்கு வாடகைக்குக் கொடுக்கப்படும்.

076 921 6707

### விற்பனைக்கு

NP XE தொடரிலக்கம் கொண்ட HERO HONDA PLEASURE மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.

077 958 1741

### பெயர்மாற்றம்

மயிலிட்டியைச் சேர்ந்த **செல்லையா யேசுராஜா** ஆகிய நான் எனது பெயரை இன்றிலிருந்து **செல்லையா யேசுதாஸ்** எனப் பெயர்மாற்றி சகல ஆவணங்களிலும் கையொப்பம் இடுவேன் என இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன்
செ.யேசுதாஸ்

### பாராட்டி வாழ்த்துகின்றோம்





யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற **32 ஆவது பட்டமளிப்பு நிகழ்வில் தொழில்நிர்வாகமாணி பட்டத்தைப்** பெற்ற எங்கள் அன்பு மச்சாள்
**மயூரி துரைராஜசிங்கம்** (BBA Hons 1st Class Gold Medal Batch Topper)
அவர்களையும் அத்துடன் அந் நிகழ்வில் **தொழில்நிர்வாகமாணி பட்டத்தைப்** பெற்ற எங்கள் அன்புச் சகோதரி **திருச்செல்வம் விதூஷ்ஹரினி** (BBA Hons 1st Class)
அவர்களையும் வாழ்க்கையில் மேன்மேலும் பல சிறப்புகளைப் பெற வாழ்த்துகின்றோம்.
அன்புடன் **பொன்னுத்துரை சுந்தரலிங்கம் குடும்பத்தினர்** (கனடா)
(கி.27863) (13)

# சிறு கட்சிகளுக்கு அநீதி இழைக்கப்பட்டால் எல்லை நிர்ணயம் குறித்து மீள் பரிசீலனை

கொழும்பு,ஜன.21
சிறு கட்சிகளுக்கு அநீதி இழைக்கப்பட்டால் எல்லை நிர்ணயம் குறித்து மீள் பரிசீலனை செய்யப்படும் என உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாணசபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
எல்லை நிர்ணய அறிக்கையின் ஊடாக சிறு கட்சிகளுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக சந்தேகம் எழுந்தால், அது தொடர்பில் மீளவும் பரிசீலனை செய்ய முடியும்.

எல்லை நிர்ணய அறிக்கையின் ஊடாக சிறு கட்சிகளின் தலைவர்கள் சிலர் தமது கட்சிகளுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாகக் கூறியுள்ளனர். இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண கருத்துக்கள் கோரி நடவடிக்கை எடுக்கப்படும்.

தற்போது எல்லை நிர்ணய அறிக்கையின் அச்சுப்பிழைகள் மற்றும் எழுத்துப் பிழைகள் சரி செய்யப்பட்டு வருகின்றன. அறிக்கை தொடர்பில் எதிர் வரும் 23ஆம் திகதி பிரதமர் தலைமையில் கூடி ஆராயப்பட உள்ளது- என்றார். (ஐ)

## பூநகரி கோட்டப் பாடசாலைகளின் வருடாந்த விளையாட்டுப் போட்டி

கிளிநொச்சி, ஜன.21
கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி கோட்டத்துக்குட்பட்ட பாடசாலைகளின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் தினங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

அதன்படி, முழங்காவில் ம.வி. ஜனவரி 26, நல்லூர் ம.வி. ஜன.25, வலைப் பாடு றோ.க.த.க.பா ஜன.31, பூநகரி ம.வி. ஜன.24, விநாசியோடை அ.த.க.பா. ஜன.26, முட்கொம்பன் மவி. ஜன.27, குமுழமுனை அ.த. க.பா. ஜன.30, செல்லையாத்தீவு அ.த.க.பா. பெப்.01, நாச்சிக்குடா அ.மு. க.பா. பெப்.01, ஸ்ரீவிக்னேஸ்வரா பெப்.02, ஜெயபுரம் மவி. பெப்.03, கறுக்காய் தீவு ம.வி. பெப்.07, இரணைதீவு றோ.க. த.பா. பெப்.07, பள்ளிக் குடா அ.த.க.பா. பெப்.09, கரியாலை நாகபடுவான் இல. 02: பெப். 07, செம்மன் குன்று அ.த. க.பா. பெப். 07, பரமன் கிராய் அ.த. க. பா. பெப்.14, முழங்காவில் ஆ.வி. பெப்.14, சாமிப்புலம் அ.த.க.பா. பெப்.17, மட்டுவில் நாடு அ.த. க.பா. பெப்.13, கரியாலை நாகபடுவான் இல. 03: பெப். 16 ஆகிய தினங்களில் இல்ல விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் என பூநகரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் சு.தர்மரத் தினம் அறிவித்துள்ளார். (யு)



## மீன்பிடி, போக்குவரத்து அமைச்சின் திட்டங்கள் தொடர்பான மீளாய்வு

### அமைச்சர் டெனீஸ்வரன் தலைமையில்

மன்னார், ஜன.21

வடக்கு மாகாண மீன்பிடி, போக்குவரத்து அமைச்சின் கடந்த ஆண்டின் திட்டங்கள் தொடர்பான மீளாய்வும், 2017ஆம் ஆண்டுக்கான திட்டங்கள் தொடர்பான சிறப்புக் கலந்துரையாடலும் மன்னார் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலை வடக்கு கிராம அபிவிருத்தி அமைச்சர் பா. டெனீஸ்வரன் தலைமையேற்று நடத்தினார், அத்தோடு இந்தச் சிறப்பு ஒன்றுகூடலில் கடந்த ஆண்டு நிறைவுற்ற திட்டங்கள் தொடர்பான மீளாய்வையும் புதிய ஆண்டுக்கான திட்டங்கள் தொடர்பான சாதக பாதகங்கள் குறித்தும் அமைச்சின் கீழ் செயற்படும் திணைக்களத் தலைவர்களும் அதிகாரிகளும் அமைச்சருக்கு எடுத்துரைத்தனர், கடந்த அரசின் காலத்தில் வழங்கப்பட்ட திட்டங்களில் சில மக்களால் சரியான முறையில் பயன்படுத்தப்படாமல் இருப்பதை இனங்கண்டு அவற்றை மீண்டும் பயனுள்ளதாக மாற்றுவது தொடர்பாகவும் அங்கு கலந்துரையாடப்பட்டது. அதே வேளை அமைச்சரால் கடந்த பாதீட்டில் மாகாண சபையின் முதலமைச்சர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அடங்கலாக 38 உறுப்பினர்களுக்கும் தனது வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் ஒதுக்கீட்டில் தலா 05 மில்லியன் நிதி வழங்கி அவர்களால் தெரிவுசெய்யப்படும் வீதிகளைப் புனரமைப்பதாகக் கூறியதற்கு அமைவாக அவர்களுடனான சிறப்புக் கலந்துரையாடல் நாளை மறுதினம் 23 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் என்றும் அதில் அவர்களது வீதிக் கோரிக்கைகள் தொடர்பாகப் பரிசீலிக்கப்பட்டு வேலைத்திட்டங்கள் விரைவில் ஆரம்பிக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளதாக அறியமுடிந்தது. (சு-21)

# கிளிநொச்சியில் 50 வீத நெற்செய்கை வறட்சியால் அழிவு

### மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களம் தகவல்

கிளிநொச்சி, ஜன 21

கிளிநொச்சி மாவடத்தில் மேற்கொள்ளப்பட்ட கால போகப் பயிர்ச் செய்கை வறட்சி காரணமாக 50 வீத அழிவைச் சந்தித்துள்ளதாக கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ஆயகுலன் தெரிவித்தார் .



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், 'நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள வறட்சி காரணமாகப் பயிர்நிலங்கள் அழிவடைந்து வருகின்றன. கிளிநொச்சி மாவட்டத்திலும் அதன் தாக்கம் காணப்படுகின்றது. கிளிநொச்சி மாவட்டத்தில் கால போகச் செய்கையாக 64ஆயிரத்து 835 ஏக்கரில் நெல் பயிரிடப்பட்டது. இதில் பெரிய நீர்ப்பானத்தின் கீழும், சிறிய நீர்ப்பாசனத்தின் கீழும், மழை வீழ்ச்சியை நம்பியும் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டது. இதில் பெரிய நீர்பாசனத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பயிர்ச்செய்கையில் 10ஆயிரத்து 405 ஏக்கர் அழிவடைந்துள்ளது. இது 30 வீத அழிவாகும். சிறிய நீர்ப்பாசனத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட செய்கையில் 977 ஏக்கர் அழிவடைந்துள்ளது இது 53 வீத அழிவாகும். மழை வீழ்சியை நம்பி மானாவாரியாக மேற்கொள்ளப்பட்ட செய்கையில் 18 ஆயிரத்து 645 ஏக்கர் அழிவடைந்துள்ளது. இது 67 வீத அழிவாகும். மொத்தமாக மேற்கொள் ளப்பட்ட விதைப்பில் 50 வீதமான பயிர்கள் அழிவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. பயிரிடப்பட்ட நிலங்களில் 30ஆயிரத்து 25 ஏக்கர் நிலம் அழிவடைந்துள்ளதாக விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. இதில் பகுதியளவில் மற்றும் முழுமையான அழிவுகள் தொடர்பான தகவல்கள் திரட்டப்படுகின்றன. இந்தக் கால நிலை தொடருமானால் மேலும் அழிவுகளின் தொகை அதிகரிப்பதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றன-என்றார். (சு-21,6)



Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# அச்சுவேலி சந்தையின் வரி அறவீடு; முதலமைச்சருக்கு முறைப்பாடு

அச்சுவேலி, ஜன.21

அச்சுவேலி பொதுச்சந்தையில் இந்தவருடம் நடைமுறைப்படுத்தப்படும் வரி அறவீடுகள் மற்றும் நடைமுறைச் செயற்பாடுகள், சந்தையில் தங்கியிருந்து வியாபாரம் செய்வோர் மற்றும் நுகர்வோர், விவசாயிகளுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்துவதாக பாதிக்கப்பட்டவர்கள் குற்றஞ் சாட்டினர்.

இது தொடர்பாக வடக்கு மாகாண முதலமைச்சருக்கு 104 கையொப்பங்களோடு கூடிய முறையீட்டு மனு சமர்ப்பிக்கப்பட்டு உடனடியாக இந்த விடயத்தில் தலையிட்டு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

அச்சுவேலி பொதுச்சந்தையின் குத்தகை கோரல், கடந்த சில வருடங்களாகப் போட்டி நிலையில் அதிகரித்து இந்த வருடக் குத்தகை ஒரு கோடியே 16 லட்சம் ரூபாவுக்கு பெறப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. இந்த வருடம் கூடிய தொகைக்குச் சந்தையைக் குத்தகைக்குப்பெற்றவர்கள், பிரதேசசபையினால் அறிவித்தல் செய்யப்பட்ட வரி அறவீட்டு நடைமுறைகளுக்கு மேலதிகமாக வரி அறவீடுகள், மற்றும் சந்தையில் தங்கி இருந்து வியா பாரம் செய்வோரிடம் மேற்கொள்ளப்படும் இடவாடகை போன்றவற்றை மேலதிகமாக அறவீடு செய்கின்றனர். இதனால் விவசாயிகள், சந்தையில் தங்கியிருந்து வியாபாரம் செய்வோர் மற்றும் நுகர்வோர், பொதுமக்கள்பெரும்நெருக்கடிக்கு உள்ளாகின்றனர் எனப் பலரும் குற்றஞ்சாட்டி வருகின்றனர். அச்சுவேலிப் பொதுச் சந்தையில் தற்பொழுதுமேற்கொள்ளப்படும் நடைமுறைச் செயற்பாடுகள் தொடர்பானவிடயத்தில்தலையிட்டுப் பொருத்தமான நடவடிக்கை எடுக்குமாறு வடக்கு மாகாண முதலமைச்சரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.

அச்சுவேலிப் பொதுச்சந்தையில் இந்த வருடம் நடைமுறைப்படுத்தப்படும் வரிஅறவீடுகள் மற்றும் நடைமுறைச்செயற்பாடுகள் சபையின் நடைமுறைக்கு அமைவாகஇடம்பெறாது விட்டால், சந்தையைக் குத்தகை எடுத்தவர்களின் ஒப்பந்தம் இல்லாது செய்யப்படும். இந்த விடயம் தொடர்பாக வருமான பரிசோதகர்கள் மூலமாக அறிக்கை எடுக்கப்பட்டு சபையின் நடைமுறைச் செயற்பாடுகளைப் பின்பற்றுமாறு குத்தகைகாரர்களுக்கு கால அவகாசம் கொடுக்கப்பட்டது. முதற்கட்டமாக அந்த அறிவுறுத்தலை நடைமுறைப்படுத்தாது விட்டால், இரண்டாவது கட்ட ஆய்வு நடவடிக்கையில் அந்த விடயங்கள் அவதானிக்கப்பட்டால், சந்தையைக் குத்தகை எடுத்தவர்களின் ஒப்பந்தம் நீக்கம் செய்யப்படும் என்று பிரதேச சபைச் செயலாளர் தெரிவித்தார். (க-11,ரி)

## பால் உற்பத்தி அதிகரிப்பு

முல்லைத்தீவு, ஜன. 21

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தில் இந்த வருட ஆரம்பத்தில் பால் உற்பத்தி அதிகரித்து உள்ளதாக சங்கத்தினர் தெரிவித்தனர்.

பால் உற்பத்தி, ஆண்டின் தொடக்க மாதங்களில் குறைவாகவே காணப்படும். இந்தவருடம் உற்பத்தியானது கடந்த வருடத்தை விட அதிகரித் துள்ளது.

இந்தச் சங்கத்தால் கடந்த 2016ஆம் ஆண்டு தை மாதம் 3 ஆயிரத்து 394 லீற்றர் பசுப்பாலும், 4 ஆயிரத்து 781 லீற்றர் எருமைப் பாலும் உற்பத்தி செய்யப்பட்டிருந்தது. இந்த ஆண்டு தை மாதம் 19ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 3 ஆயிரத்து 315 லீற்றர் பசுப்பாலும், 4 ஆயிரத்து 178 லீற்றர் எருமைபாலும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என கரைத்துறைப்பற்று கால்நடைவளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-7)

## அரசமைப்புத் தொடர்பாக விளக்கமளிக்கும் கருத்தரங்கு

மன்னார், ஜன.21

வடமாகாணத்தின் கீழ்வரும் ஐந்து மாவட்டங்களிலும் உள்ள பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு உத்தேச அரசமைப்புத் தொடர்பாக விளக்கமளிக்கும் விசேட கருத்தரங்கை கல்வி அமைச்சும்,அரசமைப்புப் சபையும் இணைந்து நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஏற்பாடு செய்திருந்தன.

மன்னார் மாவட்டத்தில் குறித்த நிகழ்வு மன்னார் சித்திவிநாயகர் இந்துக்கல்லூரியில் இடம் பெற்றது.

-மன்னார் வலயக்கல்வி திணைக்களத்தின் சமூக,விஞ்ஞான பிரிவுக்கான பொறுப்பதிகாரி எம்.ஆர்.பிரின்ஸ் டயஸ் தலைமையில் இது இடம் பெற்றது.

இதன் போது அரசமைப்புச் சபை உறுப்பினர்கள் சார்பாக சட்டத்தரணி எம்.எஸ்.நவாஸ் மற்றும் மூத்த அதிகாரி கிருஸ்ணானந்தன் ஆகியோர் கலந்து கொண்டு விரிவுரைகளை வழங்கினர்.

உத்தேச அரசமைப்புத் தொடர்பாக விளக்கமளிக்கும் குறித்த கருத்தரங்கில் மன்னார் பாடசாலைகளில் உயர்தர வகுப்பில் அரசறிவியல் பாடம் கற்கின்ற மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் என 130 பேர் தெரிவு செய்யப்பட்டு உத்தேச அரசமைப்புத் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க)



# ஆரோக்கியபுரம் கிராமத்தில் குடிதண்ணீர்த் திட்டம் ஆரம்பம்



முல்லைத்தீவு, ஜன.21

வறட்சியைப் போக்கும் வகையில், 20 லட்சம் ரூபா நிதியில் முல்லைத்தீவு ஆரோக்கியபுரம் கிராமத்தில் அமைக்கப்பட்ட குடி தண்ணீர்த் திட்டம் மக்கள் பாவனைக்காகக் கையளிக்கப்பட்டது.

முல்லைத்தீவு துணுக்காய் ஆரோக்கியபுரம் கிராமத்தில் குடி தண்ணீர்த் திட்டத்துக்கான நீர்த்தாங்கியின் திறப்பு விழா நிகழ்வு நேற்று முன்தினம் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்றது. துணுக்காய் பிரதேச சபையின் செயலாளர் க.தனபாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாண சபையின் பிரதி அவைத் தலைவர் வ.கமலேஸ்வரன் கலந்து கொண்டு குடி தண்ணீர்த் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் துணுக்காய் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் வீ.இராசரத்தினம், கிராம அலுவலர் ந.நாகபாதம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

துணுக்காய்ப் பிரதேச செயலர் பிரிவில் 125 வரையான குடும்பங்கள் வாழ்கின்ற அமதிபுரம் கிராம அலுவலர் பிரிவிலுள்ள ஆரோக்கியபுரம் கிராமத்தில் 20 இலட்சம் ரூபாசெலவில் ஆரம்பிக்கப்பட்ட இந்தக் குடிதண்ணீர்த் திட்டத்தின் மூலம் 60 வரையான குடும்பங்கள் பயன்பெறஉள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

நிகழ்வில் வடக்கு மாகாண பிரதி அவைத்தலைவர் உரையாற்றும் போது: "இந்தக் கிராமத்துக்கு வரும் போதே அதன் நிலையை அறிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது. புனரமைக்கப்படாத வீதிகள் இந்தக் கிராமத்தின் நிலையை எடுத்துக் காட்டுகின்றன. ஆனாலும் மாவட்டத்தில் குடிதண்ணீர் நெருக்கடியை எதிர் கொண்டுள்ள கிராமங்களில் ஒன்றான ஆரோக்கியபுரம் கிராமத்துக்கான குடிதண்ணீர்த் திட்டத்தை ஆரம்பித்து வைப்பதில் மகிழ்வடைகின்றேன்.

வறட்சியான காலத்தில் துணுக்காய் பிரதேச சபையின் முயற்சியினால் இக்கிராமத்தில் குடிதண்ணீர்த் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவது மகிழ்வுக்குரியது. ஆரம்பிக்கப்படும் இத்திட்டத்தைச் சிறந்த முறையில் இந்த கிராம மக்கள் பயன்படுத்த வேண்டும். மாவட்டத்திலுள்ள கிராமங்களின் அபிவிருத்தியில் அக்கறை கொண்டு செயலாற்றி வருகின்றேன். எதிர்காலத்தில் ஆரோக்கியபுரம் கிராமத்தை அபிவிருத்தி செய்வதற்கு முயற்சி எடுப்பேன்" என்று தெரிவித்தார். (க-21)

## வவுனியா பேருந்து நிலையக் கலவரம்; மூவருக்கு விளக்க மறியல்

வவுனியா, ஜன.21

வவுனியா மத்திய பேருந்து நிலையத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை தனியார் மற்றும் அரசபேருந்துச் சாரதிகளிடையே ஏற்பட்ட கலவரம் காரணமாக பொலிஸாரால் கைது செய்யப்பட்டவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்களை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது.

கடந்த செவ்வாய்க்கிழமை வவுனியா மத்திய பேருந்து நிலையத்தில் அரச மற்றும் தனியார் பேருந்து சாரதிகளிடையே குழப்ப நிலை ஏற்பட்டது. இதனை அடுத்து பொலிஸார் அரச பேருந்து நிலையத்தில் பணியாற்றிய நேரக்கணிப்பாளர் ஒருவரையும் அன்றைய குழப்ப நிலையின் போது வீதியில் அமர்ந்து பேருந்தை செலுத்த இடம் கொடுக்காத, மற்றும் பேருந்தின் கண்ணாடி மீது தாக்குதல் நடத்தியதாகக் கூறி தனியார் பேருந்து சாரதிகள் இருவரையும் கைது செய்து அவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்தனர்

கைது செய்யப்பட்டவர்கள் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர். வழக்கை விசாரித்த நீதிவான் சந்தேக நபர்களை 14நாள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (க-21)

# வாழ்வின் எழுச்சிப் பிரிவினரால் பயனாளிகளுக்கு உதவிகள்

தென்மராட்சிப் பிரதேச வாழ்வின் எழுச்சிப் பிரிவினரால் கடந்த வருடம் பல்வேறு திட்டங்கள் மூலம் 11 ஆயிரத்து 24 பயனாளிகளுக்கு உதவிகள் வழங்கப்பட்டதாகப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட காடு வளர்ப்புத் திட்டத்துக்கென 3 ஆயிரத்து 300 மரக்கன்றுகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. பிரதேச வாழ்வாதார உதவித் திட்டத்தின் கீழ் 54 பயனாளிகளுக்கு எட்டு லட்சத்து 36 ஆயிரத்து 600 ரூபா செலவிடப்பட்டுள்ளது. 9 பேருக்கு கனரக வாகனப் பயிற்சியும், 22 பேருக்கு விவசாயப் பயிற்சியும், இருவருக்கு கடல் உணவுகள் பதனிடல் உபகரணங்களும், 12 பேருக்கு சிறுகைத் தொழில் உபகரணங்களும், 5 பேருக்கு கோழி வளர்ப்புக்கான கூடுகளும், 4 பேருக்கு வீடு திருத்தத்துக்கான உதவிகளும் வழங்கப்பட்டன.

சமூக பாதுகாப்புக் கொடுப்பன வாக பிரசவம், விவாகம், மருத்துவச் சிகிச்சை, இறப்பு போன்றவற்றுக்கு 755 பேருக்கும், வாழ்வின் எழுச்சித் திட்டத்தின் கீழ் 210 மாணவர்களுக்கு நிதி உதவியும் வழங்கப்பட்டன.

வாழ்வின் எழுச்சி நிவாரண மாதாந்தக் கொடுப் பனவு 6 ஆயிரத்து 222 பேருக்கு வழங்கப் பட்டுள்ளது. சமூக அபிவிருத்தி மன்ற நிதியிலிருந்து 420 மாண வர்களுக்கும், சிசுதிரிய புலமைப் பரிசில் திட்டத்தில் 98 மாணவர்களுக்கும் தலா ஆயிரம் ரூபா வீதமும் நிதி வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடப்பட்டுள்ளது. (க- 9)

# ஆயிரத்துக்கும் மேற்பட்ட பிணக்குகளுக்குத் தீர்வு

*கோப்பாய் பிரதேச மத்தியஸ்தர் சபையினால்*

அச்சுவேலி,ஜன.21

கோப்பாய் பிரதேச மத்தியஸ்தர் சபை கடந்த வருடம் ஆயிரத்து 690 பிணக்குகளுக்குத் தீர்வு கண்டுள்ளது. இடைக்காடு வாதரவத்தை மக்களின் வசதியை கருத்தில் கொண்டு வலி.கிழக்கு பிரதேச செயலக பிரிவின் நடுவிடமான புத்தூர் ஆரம்பப் பாடசாலையில் வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமைகளில் சபை அமர்வுகளைநடத்தி,பொதுமக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை மேற்கொண்டு வருகின்றது.

குடும்பப் பிணக்குகள், காணிப் பிரச்சினைகள், கொடுக்கல் வாங்கல் பிணக்குகள், வங்கிகளில் பெறப்பட்டு, உரியகாலப்பகுதியில் திருப்பிச் செலுத்தி முடிக்காத தவணைதப்பிய கடன் பிரச்சினைகள், உள்ளூர் சீட்டுக்கள் தொடர்பான பிரச்சினைகள், கைகலப்புக்கள் தொடர்பான பிரச்சினைகள் என்பவற்றுக்குத் தீர்வு காண்பதில் சபை ஈடுபட்டுள்ளது. அத்துடன் அச்சுவேலி, கோப்பாய் பொலிஸ் நிலையங்களில் முறையீடு செய்யப்படும் சிவில்பிணக்குகளில் இணக்கப்பாடு காண்பதற்காக சமர்ப்பிக்கப்படுபவை முதலாம் இரண்டாம் தரப்பினருடன் கலந்துரையாடப்பட்டு தீர்வு காணப்படுகின்றன.

கோப்பாய் பிரதேச மத்தியஸ்தர் சபையின் செயற்பாடுகள் தொடர்பாக அதன் தவிசாளர் இ.கிருஷ்ண பிள்ளை தகவல் தெரிவிக்கையில், கடந்த ஆண்டு காலப்பகுதியில் 1690 பிணக்குகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது- எனத் தெரிவித்தார்.(க-11)

# அமைச்சுப் பதவிக்காக அலையும் மகிந்த அணி

கொழும்பு, ஜன 21

அரசை விமர்சிக்கும் மகிந்த அணியிலுள்ள பலர், அமைச்சுப் பதவி வழங்கினால் இன்றே அரசில் இணையத் தயாராகவுள்ளனர் என சபை முதல்வர் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித் ததாவது:

அரசியல் செய்ய எது வும் இல்லாதவர்கள் மக்கள் பேரணிக் கூட்டம் என்ற பெயரில் நுகேகொடையில் கூட்டம் நடத்தப் போகின்றனர்.

வரவு–செலவுத் திட்டத்திலேயே அரசைக் கவிழ்க்கப்போவதாக புரளியைக் கிளப்பிவந்த கூட்டு எதிரணியினர், அதன் பின்னர் அப்போது வீழ்த்துவோம், இப்போது வீழ்த்துவோமென அடிக்கடி கூறி வருகின்றனர். அரசோடு இணைந்து கொள்ள அவர்களில் 15 முதல் 20 பேர் தயாராக உள்ளனர்.

அமைச்சர் பதவி வழங்கினால் உடனடியாகவே அவர்கள் வந்துவிடுவர். எனினும் அமைச்சர் பதவி வழங்கக் கூடிய கால எல்லை முடிந்துவிட்டது –என்றார். (தி)

ரம்புக்வெலவின் கண்டுபிடிப்பு

## அரசமைப்புத் தயாரிப்பு முடிவடைந்து விட்டதாம்



யாழ்ப்பாணம், ஜன. 21

புதிய அரசமைப்பு தயாரிக்கும் பணிகள் முடிவடைந்து விட்டன. அந்த வெளியிடுவதற்கான உரிய தருணத்தை அரசு எதிர்பார்த்துக் காத்திருக்கின்றது. இவ்வாறு மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த நாட்டுக்கு புதிய அரசமைப்பு, தேவை இல்லை. தற்போதைய அரசமைப்பு, தேவைக் கேற்ப திருத்தப்பட்டால் போதும் என்பதே எமது நிலைப்பாடாகும். இந்தியாவில்கூட நூற்றுக்கு மேற்பட்ட தடவைகள் அரசமைப்பு திருத்தப் பட்டுள்ளது. அங்கு புதிய அரசமைப்பு கொண்டு வரப்படவில்லை. தமிழீழ விடுதலைப் புலிகளினதும், பன்னாட்டுச் சக்திகளினதும் தேவையை நிறைவேற்றும் விதத்தில் அரச மைப்பை திருத்தியே தீரவேண்டும் என்று அரசு நிற்கின்றது.

நாம் அறிந்த வரை புதிய அரசமைப்புத் தயாரிப்புப் பணிகள் முடிவடைந்துவிட்டன. அதை வெளியிடுவதற்கான சரியான தருணத்தை அரசு எதிர்பார்த்திருக்கின்றது. எமது யோசனைகள் எவையும் அதில் உள்வாங்கப்படவில்லை. நாட்டுக்கு விரோதமான முறையில் அது தயாரிக்கப்பட்டுள்ளது.

புலிகள் கேட்டதை எதுவித சிக்கலும் இல்லாமல் கொடுக்கும் வகையில்தான் அரசின் செயற்பாடுகள் அமைந்துள்ளன. இந்த அரசு தொடர்ந்தும் நாட்டுக்கு விரோதமாகவே செயற்படுகின்றது. இந்த நாட்டை விடவும், இந்த நாட்டு மக்களை விடவும் பன்னாட்டுச் சமூகமும் அதன் நிகழ்ச்சி நிரலும்தான் இந்த அரசுக்கு முக்கியம் – என்றார். (த-5)

# இந்திய அரசே தமிழர்களை அடக்காதே

## ஜல்லிக்கட்டுக்கு ஆதரவு தெரிவித்து கிழக்கிலும் போராட்டம்





களுவாஞ்சிகுடி, ஜன 21

ஜல்லிக்கட்டுக்கு விதிக்கப்பட்டுள்ள தடைக்கு எதிராகத் தமிழகத்தில் நடைபெற்றுவரும் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து மட்டக்களப்பு வாழைச்சேனையில் நேற்றுமுன்தினம் வியாழக் கிழமை மாலை பெரும் கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.

'தமிழர்களை அடக்காதே இந்திய அரசே' என இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்ட இளைஞர்கள் உரத்துக் குரல் எழுப்பினர்.

வாழைச்சேனை – கோறளைப்பற்று பிரதேச இளைஞர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தக் கவனவீர்ப்புப் பேரணி கிண்ணையடிச் சந்தியில் ஆரம்பமாகி, வாழைச்சேனை பிரதான வீதி வழியாக வாழைச்சேனை பொலிஸ் நிலையச் சந்தியை அடைந்து அங்கு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்தப் பேரணியில் நூற்றுக்கணக்கான இளைஞர்கள் கலந்து கொண்டு தமிழரின் பண்பாட்டு மரபை அழிக்காதே, தமிழரை அடக்காதே என இந்திய அரசுக்கு எதிராகக் கோசங்களை எழுப்பினர்.

சோழனின் கொடி பறக்கும், சோழியின் குடும்பி அறும், அலங்கா நல்லூர் ஆடும் வரை ஈழம் அடங்காது, ஜல்லிக்கட்டு எம் உரிமை அள்ளிக்கட்டு அரசை, போராட்டம் எம் இனக் குணம், சீண்டாதே சிதறுவாய், எமது மொழி எமது பண்பாடு, எமது தனித்துவம், நாங்கள் தமிழர்கள் எனப் பல வாசகங்கள் அடங்கிய பதாகைகளை போராட்டக் காரர்கள் கையில் தாங்கியிருந்தனர்.

அத்துடன் மட்டக்களப்பு நகரிலும் ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாக இளைஞர் களால் போராட்டம் முன்னெடுக்கப் பட்டது. (தி)

## சோபித தேரரின் வாகனம் மாயம்

கொழும்பு,ஜன.21

காலம் சென்ற மாதுலுவாவே சோபித தேரர் பயன்படுத்திய ரூ.2 கோடி பெறுமதியான அதி சொகுசு மோட்டார் வாகனம் காணாமல் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். சம்பவம் தொடர்பில் கிடைத்த முறைப்பாட்டிற்கமைய மிரிஹான பொலிஸார், விசாரணைகளில் ஈடுபட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

கோட்டை நாக விகாரையின் உடதலகந்தே ஆரியரத்ன தேரர் உட்பட குழுவினர் இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளனர்.

கடந்த 7 மாதங்களுக்கு முன்னர் குறித்த மோட்டார் வாகனம் காணாமல் போயுள்ளதாக முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.(ஐ)

# புலித் தொப்பியை லண்டனுக்கு அனுப்ப முயற்சி

## மூவரின் பிணை மனு 25 இல் விசாரணைக்கு

கொழும்பு, ஜன.21

தமிழீழ விடுதலைப் புலிகளின் இலச்சினை பொறிக்கப்பட்ட தொப்பியைச் சூட்சுமமான முறையில் லண்டனுக்கு அனுப்ப முயற்சித்தமை தொடர்பான வழக்கை 25ஆம் திகதி வரை ஒத்தி வைத்ததுடன், சந்தேகநபர்களின் பிணை மனு குறித்து 25ஆம் திகதி அறிவிக்குமாறு பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த வருடம் விடுதலைப் புலிகளின் இலச்சினை பொறிக்கப்பட்ட தொப்பி ஒன்றை நாரஹேன்பிட்டியிலுள்ள விரைவு அஞ்சல் நிறுவனத்தினூடாக லண்டனுக்கு அனுப்ப முயற்சித்த குற்றத்துக்காக மூவர் கைது செய்யப்பட்டனர்.

குறித்த மூவர் சார்பிலும், பிணை மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பிணை மனு தொடர்பிலான நிலைப்பாட்டை இம்மாதம் 25ஆம் திகதி அறிவிக்குமாறு பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினருக்கு உத்தரவிட்டதுடன், வழக்கையும் 25ஆம் திகதிக்கு ஒத்திவைத்து கொழும்பு நீதிவான் மன்றபதில் நீதிவான் அருணி ஆட்டிகல, நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

இதில் ஜேசுரத்னம் ஜெகசம்சன், மகாதேவா பிரசன்னா, சுப்பிரமணியம் நகுலராசா ஆகியோரே கைது செய்யப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (தி)

# கலந்தாய்வுச் செயலணியின் தேசத்துரோக அறிக்கை இது

## சாடுகிறது தேசிய படைவீரர் ஒன்றியம்

யாழ்ப்பாணம், ஜன. 21

நல்லிணக்கப் பொறிமுறைக்கான கலந்தாய்வுச் செயலணியின் அறிக்கையை 'தேசத்துரோக அறிக்கை' என்று விமர்சித்துள்ள தேசிய படைவீரர் ஒன்றியம், அரசு அதைக் குப்பைத் தொட்டியில் போடவேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளது.

நல்லிணக்கப் பொறிமுறைக்கான கலந்தாய்வுச் செயலணியின் அறிக்கை தொடர்பில் படையினரின் நிலைப்பாட்டைத் தெளிவுப்படுத்தி மேற்படி ஒன்றியத்தின் ஏற்பாட்டாளரும், முன்னாள் படை அதிகாரியுமான ரியல் அட்மிரல் சரத் வீரசேகர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஒட்டுமொத்த இராணுவத்தின் நலன்காக்கும் வகையிலேயே எமது அமைப்பு செயற்பட்டு வருகின்றது. இதில் முன்னாள் படையினரும் அங்கம் வகிக்கின்றனர். படையினருக்குக் களங்கம் ஏற்படுத்தும் வகையிலான அறிக்கையொன்றை நல்லிணக்கச் செயலணி எனக் கூறிக்கொள்ளும்தரப்பினர் வெளியிட்டுள்ளனர். இந்தக் குழுவில் அங்கம் வகிப்பவர்கள் எல்லாம் கூட்டாட்சிக்குச் சார்பானவர்கள். இதைச் தேசத்துரோக அறிக்கையாகவே பார்க்கின்றோம். எந்தவொரு கட்டத்திலும் அதிலுள்ள பரிந்துரைகளை அரசு நடைமுறைப்படுத்தக் கூடாது. உடன் குப்பைத் தொட்டியில் போடவேண்டும். அது தேசத்துரோக அறிக்கையாகும்.

ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையைப் பெறுவதற்காக படையினரை அடகுவைக்கும் செயலிலும் அரசு இறங்கக்கூடாது. நாட்டுக்குப் பாதிப்பு ஏற்படும் எந்தவொரு சரத்தையும் அரசு ஏற்கக்கூடாது – என்றார். (த-5)

# மட்டக்களப்பில் 500 பயனாளிகளுக்கு விவசாய உபகரணங்கள் கையளிப்பு

கொழும்பு,ஜன.21

கிராமியப் பொருளாதார அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில், மட்டக்களப்பு மாவட்டத்தின் 3 பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்த 500 பயனாளிகளுக்கு விவசாய உபகரணங்கள் வழங்கப்பட்டன.

ஓட்டமாவடி கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் நிஹாரா மௌஜூத் தலைமையில் கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக பிரதி அமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி கலந்து கொண்டு பயனாளிகளுக்கு விவசாய உபகர ணங்களை வழங்கினார்.

நிகழ்வில் ஓட்டமாவடி கோறளைப் பற்று மத்தி, வாகரை மற்றும் கிரான் பிரதேச செயலக பிரிவுகளைச் சேர்ந்த ஐநூறு விவசாயிகளுக்கு விவசாய உபகரணங்கள் வழங்கப்பட்டன. (ஐ)

## பதுளையில் 103 பேருக்கு டெங்கு

கொழும்பு,ஜன.21
பதுளை மாவட்டத்தில் இந்த மாதம் இதுவரை 103 பேர் டெங்கு நோயாளர்களாக இனங்காணப்பட்டனர் என்று பதுளை மாவட்ட சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் ஜனிதா தென்னக்கோன் தெரிவித்தார்.
இவர்களில் 65 பேர், பதுளைப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள். அதனால் இந்தப் பிரதேசத்தில் டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு வேலைத்திட்டம் ஒன்றை முன்னெடுக்க வுள்ளதாகவும், டெங்குநுளம்பு பரவும் வகையில் சூழலை வைத்திருப்பவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

## குளவி கொட்டியதில் இளைஞன் சாவு

கொழும்பு,ஜன.21
உழவு இயந்திரத்தில் தேயிலைத் தொழிற்சாலைக்குச் சென்று கொண்டிருந்த இளைஞன் ஒருவர் குளவிக் கொட்டுக்கு இலக்காகி உயிரிழந்ததுடன், பாதிக்கப்பட்ட மேலும் இருவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக மஸ்கெலியா பொலிஸார் தெரிவித்தனர்.
மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓல்டன் தோட்டத்தைச் சேர்ந்த செபமாலை ஸ்டீபன் (வயது 28) என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்தார்.
ஓல்டன் தோட்டத் தேயிலைத் தொழிற்சாலைக்கு உழவு இயந்திரத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணியளவில் சென்று கொண்டிருந்த வேளையில், மரத்திலிருந்த கலைந்து வந்த குளவிகள், உழவு இயந்திரத்தில் இருந்த மூவரைக் கொட்டியுள்ளன.
பாதிக்கப்பட்டவர்களை மஸ்கெலியா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வழியிலேயே குறித்த இளைஞன் உயிரிழந்தார் எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ஐ)


# இயற்கையைக் காக்கத் தவறின் இலங்கை மக்களின் இருப்பே சவாலாகிவிடும்

## ஜனாதிபதி எச்சரிக்கை



கொழும்பு,ஜன.21
இயற்கை வளங்களை பாதுகாக்கத் தவறினால், இலங்கை மக்களின் இருப்புக் குறித்த சவால் எழும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எச்சரிக்கை விடுத்தார்.
கண்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போதே ஜனாதிபதி இவ்வாறு எச்சரிக்கை விடுத்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
அபிவிருத்திப் பணிகளுக்காக வளிமண்டலத்தில் தீய வாயுக்களைச் சேர்த்து உலக வெப்ப நிலையை அதிகரித்து மனித குலத்திற்குப் பெரும்பாதிப்பை ஏற்படுத்திய வல்லரசுகள் இலங்கைக்கு ஆலோசனைகளை வழங்கி வருகின்றன.
நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை ஒருபோதும் பிற்போட முடியாது. இந்த நாடுகள் இயற்கைப் பெறுமானங்களைப் புறக்கணித்துச் செயற்படுகின்றன. இதன் காரணமாக மனிதர்களும், ஏனைய உயிரினங்களும் உயிர் வாழ்வது பெரும் சவாலாக மாறியுள்ளது.
இலங்கையை இயற்கை வளங்களைப் பாதுகாக்கும் நாடாக மாற்ற வேண்டுமாயின், வனவள அடர்த்தியை 50 சத வீதம் வரையிலாவது உயர்த்த வேண்டும்.
இயற்கை வளங்களைப் பாதுகாக்கத் தவறும் பட்சத்தில், இலங்கை மக்களின் இருப்புக் குறித்த சவால் எழும். என்றார். (ஐ)

# நிதிக்குற்ற விசாரணைப் பிரிவினரால் ராஜபக்ச அருங்காட்சியகம் சோதனை



கொழும்பு,ஜன.21
மெதமுலனவில் அமைந்துள்ள டி.ஏ.ராஜபக்ச அருங்காட்சியகம் மற்றும் அதனை அண்மித்துள்ள பகுதிகளை பொலிஸ் நிதிக்குற்ற விசாரணைப் பிரிவின் அதிகாரிகள் நேற்று முன்தினம் சோதனையிட்டனர்.
இறுதி மதிப்பீட்டு அறிக்கையைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில், பொலிஸ் நிதிக்குற்ற விசாரணைப் பிரிவு அதிகாரிகள் மற்றும் அரச மதிப்பீட்டு அதிகாரிகள் இணைந்து, குறித்த பகுதியைச் சோதனையிட்டனர்.
வீரகெட்டியதிட்டம் என்ற பெயரில் திட்டமொன்றை ஆரம்பித்து, டி.ஏ. ராஜபக்ச தம்பதிகளின் கல்லறைகளைப் புனரமைத்தல் மற்றும் அருங்காட்சியகமொன்றை நிர்மாணிப்பதற்காக 9 கோடி ரூபா செலவிடப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்காகவே இந்தச் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.
கோத்தபாய ராஜபக்ச பாதுகாப்புச் செயலாளராகச் செயற்பட்ட காலப்பகுதியில், அந்த அமைச்சுக்குச் சொந்தமான காணிகளை நிரப்புதல் மற்றும் அபிவிருத்தி செய்தல் கூட்டுத்தாபனத்தின் ஊடாக குறித்த நிதி ராஜபக்ச அமைப்பிற்கு பயன்படுத்தப்பட்டுள்ளதாக விசாரணைகளின் ஊடாக தெரியவந்துள்ளது.
இதற்கான வாக்குமூலத்தைப் பெறுவதற்காக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச, பொலிஸ் நிதிக்குற்ற விசாரணை பிரிவுக்குப் பல தடவைகள் அழைக்கப்பட்டிருந்தார். (ஐ)

# இலங்கைப் பெண்ணுக்கு பேஸ்புக்கால் அதிர்ச்சி




கொழும்பு,ஜன.21
கம்பஹாவைச் சேர்ந்த பெண்ணொருவரிடம் பெரும் நிதி மோசடியில் ஈடுபட்ட நைஜீரிய இளைஞரை விளக்கமறியலில் வைக்குமாறு கம்பஹா பிரதான நீதிவான் டீ.ஏ.ருவண் பத்திரன உத்தரவிட்டார்.
பேஸ்புக்கில் நண்பராகி குறித்த பெண்ணிடம் 8 லட்சத்து 65 ஆயிரம் ரூபா பணத்தைப் பெற்று மோசடி செய்த குற்றச்சாட்டில் நைஜீரிய இளைஞருக்கு நீதிவான் விளக்கமறியல் உத்தரவிட்டார்.
சந்தேக நபரான நைஜீரிய நாட்டவர், மேற்கொண்ட மோசடி தொடர்பில் கொள்ளுபிட்டிய பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு கோட்டை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.
இதன்போது கம்பஹா மோசடி விசாரணைப் பிரிவினர் கோட்டை நீதிமன்றில் விடுத்த கோரிக்கைக்கமைய சந்தேக நபர் சிறைச்சாலை ஊடாக கம்பஹா நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுள்ளார்.
கம்பஹா டிக்மன் வீதியில் வசிக்கும் 29 வயதுடைய திருமணமான பெண்ணின் கணவர் வெளிநாட்டில் தொழில் புரிகின்றார். இந்த நிலையில் சந்தேக நபரான நைஜீரிய நாட்டவர், பேஸ்புக் ஊடாக குறித்த பெண்ணை அறிந்து கொண்டு, அந்தப் பெண்ணுக்கு நைஜீரிய நாட்டில் இருந்து பரிசு கிடைத்துள்ளதாகக் கூறியுள்ளார்.
அந்தப் பரிசில் உள்ள தங்க நகைகளுக்கு வரி செலுத்துவதற்கு பல முறை இலங்கை வங்கிகள் இரண்டில் பணம் வைப்புச் செய்யுமாறு கூறிவைப்பிலிட்ச் செய்து பணத்தை மோசடி செய்ததாக நீதிமன்றில் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.
அந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் முறைப்பாட்டாளர் வங்கியில் பணம் வைப்பு செய்ததற்கான தகவல்களை வழங்குமாறும், சந்தேக நபரிடம் வாக்குமூலம் பெற்றுக் கொள்ளுமாறும் நீதிவான் உத்தரவிட்டார். சந்தேக நபர் சார்பில் சட்டத்தரணிகளின் ஆதரவு கிடைக்காத நிலையில் சந்தேக நபர் பேஸ்புக் ஊடாக இலங்கைப் பெண்களிடம் நட்பு ஏற்படுத்தி பணம் மோசடி செய்துள்ளதாக நீதிமன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

## ஒரே குடும்பத்தின் அறுவர் மீது அம்பாந்தோட்டையில் வாள்வெட்டு

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த அறுவர் மீது சரமாரியான வாள்வெட்டுத் தாக்குதல் மேற் கொள்ளப்பட்ட சம்பவமொன்று நேற்று முன்தினம் மாலை அம்பாந்தோட்டையில் இடம்பெற்றுள்ளது.
அம்பாந்தோட்டை அம்பலாந்தோட்டைப் பகுதியிலுள்ள மாமடல 8 ஏக்கர் பிரதேசத்தில் இடம்பெற்ற குறித்த சம்பவத்தில் ஆறு பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
இனந்தெரியாத கும்பலொன்று இந்தத் தாக்குதலை நடத்திச் தப்பிச்சென்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.
சம்பவத்தில் 4 பெண்களும், இரு ஆண்களும் படுகாயமடைந்திருப்பதோடு அவர்கள் அம்பலாந்தோட்டை மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவ்வாறு சேர்க்கப்பட்டவர்களில் கவலைக்கிடமாக உள்ள இருவர் மேலதிக சிகிச்சைகளுக்காக காலி கராப்பிட்டிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர். (ஐ)

# பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வாதார நிலையை மாற்றவும்

## இல்லையெனில் பஞ்சம் ஏற்படும் ஜ.தொ.காவின் கொத்மலை அமைப்பாளர் கோரிக்கை

கொழும்பு,ஜன.21
பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வாதார நிலைமைகளை மாற்றியமைப்பதற்காக, போராட்ட குணம் மிக்கவர்களாக நாங்கள் மாற வேண்டும். இல்லையெனில், எமது மக்களின் வாழ்க்கை நிலை மிகமோசமாகப் பாதிக்கப்படலாம். சோமாலியா, எத்தியோப்பியா போன்ற நாடுகளில் ஏற்பட்டதைப் போன்று எமது மக்களும் பஞ்சத்தை எதிர்கொள்ள நேரிடும் என ஜனநாயக தொழிலாளர்காங்கிரஸின் கொத்மலை அமைப்பாளர் ராஜேந்திரன் தெரிவித்தார்.
ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸின் ஏற்பாட்டில், மடக்கும்பர, போர்ட்மோர், பட்டர்வின், மோரார், என்பீல்ட், கர்கஸ்வோல்ட் ஆகிய தோட்டங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விடயத்தில், எமது தலைமைகள் தீர்க்கமானதொரு முடிவை முன்வைக்கத் தவறியதன் காரணமாக, தொழிலாளர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். தற்போதைய நிலையில், கல்வி, போசாக்கு, சுகாதாரம் போன்ற பல்வேறு விடயங்களில் தொழிலாளர்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளதை நினைத்து கவலையடைய வேண்டியுள்ளது.
அமைச்சர் மனோ கணேசன், மலையகத்தின் மீதும் எமது சமூகத்தின் மீதும் அதிக அக்கறை கொண்டவர். அத்துடன் மலையக மக்களுக்காக பல்வேறு நலத்திட்டங்களைச் செய்யுமாறும் அவர் எம்மை வலியுறுத்தி வருகின்றார். எமது மக்களுக்கான தொழிற்சங்க பணிகளை தொடர்ந்து செய்வதில் நாம் முன்னிற்போம் - என்றார். (ஐ)

## வீதியில் குறுக்கே படுத்திருந்து மரக்கறி வியாபாரி போராட்டம்

### வவுனியா நகரசபைக்கு எதிராக

வவுனியா, ஜன.21

வவுனியா இலுப்பையடிப் பகுதியில் வியாபார நட வடிக்கைகளில் ஈடுபடும் வியாபாரி ஒருவர், நேற்று வீதியின் குறுக்கே படுத்திருந்து போராட்டம் ஒன்றைமேற்கொண்டார்.

இலுப்பையடிச் சந்தியிலிருந்து சந்தை சுற்றுவட்ட வீதிக்குச் செல்லும் வீதியின் ஓரத்தில் உள்ள நடைபாதையில் நீண்டகாலமாக காய்கறி வியாபார நட வடிக்கைகளை மேற்கொண்டு வந்த குறித்த வியாபாரியினுடைய பொருள்களை அள்ளிச்சென்றவவுனியா நகர சபையினர், குறித்த இடத்தில் மேற் கொள்ளப்படும்வியா பாரநடவடிக்கைகளை நிறுத்துமாறு கோரியதால் வியாபாரி குறித்த போராட்டத்தை மேற் கொண்டார்.



வவுனியா நகரசபைக் குட்பட்ட பகுதியில் உள்ள நடைபாதையில் வியாபாரம் மேற்கொள்பவர்களுக்கு எதிராக வவுனியா நகர சபையினரால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இலுப்பையடி சந்தியிலிருந்து சந்தை சுற்றுவட்ட வீதிக்குச் செல் லும் வீதியின் ஓரத்தில் காய்கறிகளை வைத்திருந்த குறித்த வியாபாரி உட்பட மேலும்மூவருடைய பொருள் களையும் நகரசபை ஊழியர்கள் அள்ளிச் சென் றனர். இதனால் ஆத்திரமடைந்த வியாபாரி, திடீரென வீதியின் நடுவே படுத்து நகரசபையின் செயற் பாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்தார். அள்ளிச் சென்ற தனது பொருள்களையும் ஒப்படைக்க வேண்டும் என கோரிக்கை விடுத்தார்.

வியாபாரி போராட்டத்தை மேற்கொண்ட வீதி பிரதான வீதி என்பதால் போக்கு வரத்துப் பொலிஸார் உடன் சம்பவ இடத்திற்குச் சென்று வீதியில் படுத்திருந்தவரை எழுந்திருக்குமாறும், நகர சபையினரால் அள்ளிச் சென்ற பொருள்களைப் பெற்றுத்தருவதாகவும் தெரிவித்ததையடுத்து அவ் விடத்திலிருந்து அவர் எழுந்து சென்றார். (க-21)

# வழங்கப்பட்ட அதிகாரங்களை பாவிக்கிறதா மாகாண சபை?

### உள்ளூராட்சி அமைச்சர் பைசர் முஸ்தபா கேள்வி

யாழ்பாணம், ஜன.21

மாகாண சபைகளுக்கான அதிகாரப் பகிர்வு போதாது எனக் கூறப்படுகின்றது. ஆனால் அவர்கள் தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை பயன்படுத்துகின்றனரா என்பதே பெரும் கேள்விக் குறியாகவுள்ளது என. மாகாண சபைகள் உள் ளூராட்சி அமைச்சர் பைசல் முஸ்தபா தெரிவித்தார்.

உலகவங்கி மற்றும் ஆஸ்திரேலிய நாட்டின் உதவியுடன் நெடுந்தீவுக்கான படகுச்சேவை நேற்றைய தினம் ஆரம்பித்து வைக் கப்பட்ட நிகழ்வில் கலந்து கொண்டு உரை யாற்றும்போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு அமைச்சர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

மாகாண சபைகளுக்கான அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்டமை போதாது எனக் கூறப்படுகின்றது. ஆனால் அதே மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை அவர்கள் பயன் படுத்துகின்றனரா என்பதும் பெரும் கேள்விக் குறியாகவுள்ளது.

வடக்கு கிழக்கு மாகாணங்களை அபிவிருத்தி செய்ய வேண்டிய கடப்பாடு அரசுக்கு உண்டு. ஏனெனில் 30 ஆண்டுகாலப் போர் காரணமாக அழிவைச் சந்தித்தவை அந்த மாகாணங்கள். எமக்கிடையில்வேற்றுமைகளும்உண்டு. இருப்பினும் வேற்றுமை யில் ஒற்றுமை காண வேண்டும். நாம் எமது இனங்களின் அடையாளங்களைக் கொண்டுள்ளோம். அதே போன்று நாட்டின் அடையாளமும் முக்கியமானது.

நடந்ததை மறக்கக முயற்சிப்போம். சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளைத் தேசியக் கட்சிகள் கவ னத்தில் கொள்ளாதமையே சிறு பான்மைக் கட்சிகளின் வளர்ச்சிக்கு உதவியது என்பதும்உண்மை. இதே வேளை அதிகாரப் பகிர்வு தொடர்பிலும் கலந்துரையாடல் இடம் பெறுகின்றன- என்றார். (க-101)

## வலி-கிழக்கு பிரதேச செயலகத்தின் விளையாட்டு விழா சனியன்று ஆரம்பம்

அச்சுவேலி, ஜன.21

வலி.கிழக்கு கோப்பாய் பிரதேச செயலக பிரிவு மட்ட விளையாட்டு விழா. ஆண் களுக்கான கிரிக்கெட் போட்டியுடன் இன்று சனிக்கிழமை அச்சுவேலி மத்திய விளையாட்டுகழக மைதானத்தில். காலை 8 மணிக்கு ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்றும், நாளை ஞாயிற்றுக்கிழமையும் அச்சுவேலி மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறும் ஆண்களுக்கான கிரிக்கெட் போட்டிகளில் 29 விளையாட்டுக் கழகங்கள் பங்கு கொள்கின்றன.

இன்று சனிக்கிழமை 15 அணிகளும், ஞாயிற்றுக் கிழமை 14 அணிகளும் மோதுகின்றன. ஆண் களுக்கான கிரிக்கெட் ஆட்டத்தில் கலந்து கொள்ளும் அணிகளின் விவரம் வருமாறு:

தமிழ் நிலாவிளையாட்டு கழகம், கலைவாணி விளையாட்டுக்கழகம், கோப்பாய் விளையாட்டுக் கழகம், புத்தூர் வளர்மதி விளையாட்டுக்கழகம், சென்மைக்கேல் விளையாட்டுக் கழகம், எல்லாளன் விளையாட்டுக் கழகம், கதிரொளிரொக்கட் விளையாட்டுக்கழகம், ஞானவைரவர் விளையாட்டுக் கழகம், ஆவரங்கால் மத்தி ஜனசக்தி விளையாட்டுக் கழகம், நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழகம் புத்தூர் சரஸ்வதி, கலைமதி, புத்தூர் விக்கினேஸ்வரா, எவரெஸ்ட், முத்தமிழ், உரும்பிராய் சரஸ்வதி, சோமஸ்கந்தன், அச்செழு வளர்மதி, ஞானபாஸ்கரோதயா, குமரகுருபரன், வீனஸ், கோப்பாய் ஸ்ரார், அச்சுவேலி மத்திய விளையாட்டுக்கழகம், கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக் கழகம், தொண்டைமானாறு விளையாட்டுக் கழகம், திருக்குமரன் விளையாட்டுக் கழகம், லெவன் ஸ்ரார் விளையாட்டுக் கழகம், முரசொலி விளையாட்டுக் கழகம். (க-11)






# அமெரிக்கக் கடற்படை கப்பல் கொழும்பில்

கொழும்பு,ஜன.21
நல்லெண்ண பயணமொன்றை மேற்கொண்டு அமெரிக்கக் கடற்படை கப்பல் நேற்று முன்தினம் கொழும்புத் துறை முகத்தை வந்தடைந்துள்ளது.
ஹொப்பர் என்ற அமெரிக்கக் கடற்படை கப்பலே கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது. குறித்த கப்பல், எதிர்வரும் 23 ஆம் திகதி வரையில்; கொழும்பு துறை முகத்தில் தங்கியிருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
அமெரிக்க கடற்படை மற்றும் இலங்கை கடற்படையினருக்கு இடையிலான உறவுகளை வலுப்படுத்தும் நோக்கில் குறித்த கப்பல் கொழும்பு துறைமுகத்திற்கு பயணம் மேற்கொண்டுள்ளது. (ஐ)

# ஆசிரியர்களின் சம்பள நிலுவையை உடனடியாக வழங்கக் கோரிக்கை

கல்முனை,ஜன.21
கல்முனைக் கல்வி வலயத்தைச் சேர்ந்த ஆசிரியர்களுக்குச் சம்பள நிலுவையை வழங்குவதற்கு இதுவரையில் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என இலங்கை மகா ஆசிரியர் சங்கத் தலைவர் ஏ.எம்.அஹவர் தெரிவித்தார்.
இவ்வலயத்தில் சுமார் 2 ஆயிரத்து 400 ஆசிரியர்களுக்குச் சம்பள நிலுவை வழங்கப்பட வேண்டியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.
சாய்ந்தமருதில் கடந்த புதன்கிழமை இரவு நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே, அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
கல்முனை வலயப் பாடசாலைகளில் கடமை புரியும் இந்த ஆசிரியர்களுக்கு சம்பள நிலுவை வழங்கும் செயற்பாடு கவனிப்பாரற்று உள்ளது. இப்பிரச்சினைக்கு உரிய தீர்வைப் பெற்றுத்தருமாறு கோரி கடந்த நவம்பர் மாதம் கிழக்கு மாகாண ஆளுநர் ஒஸ்டின் பெர்னாண்டோவுக்கு எமது சங்கத்தால் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது.
உரிய நடவடிக்கையின் பொருட்டு மாகாண கல்விச் செயலாளர் ஊடாக மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு அக்கடிதம் அனுப்பி வைக்கப்பட்டதாக ஆளுநரால் எமக்கு அறிவிக்கப்பட்டது.
எனினும், இந்த ஆசிரியர்களுக்குச் சம்பள நிலுவையை வழங்குவதற்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் இதுவரையில் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. அவரால் ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமாயின், அது பற்றியும் எங்களுக்கு அறிவிக்கப்படவில்லை.
இந்நிலையில், இந்த ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினை தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு கோரி ஆளுநருக்கு மீளவும் மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளோம்.- என்றார். (ஐ)

# 26 வருடங்களின் பின் வீடு திரும்பிய பெண்

*காணாமற் போனதாக நட்ட ஈட்டைப் பெற்றுக் கொண்ட உறவினர்*

கொழும்பு,ஜன.21
1988 - 1989ஆம் ஆண்டு காலப் பகுதியில் நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலைகளின் போது, காணாமற் போனதாகக் கூறப்படும் பெண் ஒருவர் சுமார் 26 வருடங்களின் பின் தற்போது வீடு திரும்பியுள்ளார்.
தற்போது 43 வயதாகும் குறித்த யுவதிக்கு, அப்போது (காணாமற் போனபோது) வயது 18 ஆகும். மேலும், காணாமற் போனவர்களுக்காக வழங்கப்பட்ட நட்ட ஈட்டையும் அந்த யுவதியின் உறவினர்கள் பெற்றுக் கொண்டுள்ளனர்.
தனக்கு 18 வயதாக இருந்த போது, திருமணம் முடித்து தொகோமட பகுதிக்குச் சென்றதாகவும், அங்கு சென்று இரண்டு மாதங்களிலேயே கண்களைக் கட்டியபடி வந்த சிலர் தனது கணவரை இழுத்துச் சென்றதாகவும் கூறும் யுவதி, பின்னர் தேயிலைத் தோட்டத்தில் வைத்து தனது கணவர் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.
அந்தச்; சுமைகளை மனதில் சுமந்தபடி, கணவரின் இறுதிக் கிரியைகளை நிறைவு செய்த அவர் மீண்டும் தாய் வீட்டுக்குச் சென்றுள்ளார்.
அந்தப் பெண் தனது வாழ்க்கையில் நடந்தமை தொடர்பில் தெரிவித்ததாவது:
"நான் வீட்டுக்கு வந்து இரண்டு, மூன்று நாள்களில் கணவரின் பெரியம்மாவின் மகள் ஒருவர் என்னை நாவலப்பிட்டியிலுள்ள அவர்களது வீட்டுக்கு வருமாறு அழைத்தார். அப்போது பெரும் உழைச்சலில் இருந்த நானும் அங்கு சென்றேன். பின்னர் அவர்கள் என்னை விஹாரமாதேவி பூங்காவைப் பார்க்க கொழும்பு செல்வோம் என அழைத்தனர். நானும் சரி என்று அவர்களுடன் சென்றேன். ஆனால் அவர்கள் என்னை கொழும்புக்கு அழைத்துச் சென்று வீடொன்றில் ஒப்படைத்தனர். அவர்கள் என்னை அடைத்து வைத்து வேலைகள் வாங்க ஆரம்பித்தனர். 26 வருடங்கள் எனக்கு சுதந்திரம் இல்லை, அதிகாலை 5 மணிக்கு எழுந்து வேலைகளைச் செய்ய வேண்டும். நான் அந்த வீட்டுக்குச் செல்லும்போது இரு பிள்ளைகள், கணவன் மற்றும் மனைவியும் இருந்தனர். சிறு பிள்ளைக்கு 3 மாதங்களே. நான் பிள்ளைகளை பராமரித்ததோடு, வீட்டு வேலைகளையும் செய்தேன். இவ்வாறு சில வருடங்கள் கழிந்த பின்னர் எனது தந்தை இறந்து விட்டதாக அவர்கள் பேசிக்கொண்டனர். நான் வீட்டுக்குச் செல்ல வேண்டும் என்றேன். ஆனால் அவர்கள் அதற்கு அனுமதிக்கவில்லை.
எனக்கு 13 சகோதர, சகோதரிகள் உள்ளனர். அவர்களில் ஒருவர் கடற்படையில் இருந்தார். அவர் இறந்துள்ளார். மற்றைய சகோதரர் ஒருவரும் உயிரிழந்துள்ளார். நான் இவர்கள் பேசியவற்றில் இருந்து இதனை அறிந்து கொண்டேன். ஆனால் என்னை எதற்கும் செல்ல அவர்கள் அனுமதிக்கவில்லை" என்றார்.
சுமார் 26 வருடங்களில் பின்னர் இந்தப் பெண் கடந்த 17 ஆம் திகதி மீண்டும் கம்பளை - கிராஉல்ல பகுதியிலுள்ள அவரது வீட்டுக்குச் சென்றுள்ளார்.
இந்த நிலையில் தன்னை அடைத்து வைத்திருந்தது தெல்கந்தை மற்றும் கொட்டாவ பகுதியிலுள்ள வீட்டில் எனவும், தன்னை பலவந்தமாக அடைத்து வைத்தவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் குறித்த பெண் நாவலப்பிட்டி பொலிஸில் வழங்கிய முறைப்பாட்டில் கோரியுள்ளார். (ஐ)

# ஜல்லிக்கட்டு எழுச்சி உலகத் தமிழரின் தன்மானப் புரட்சி

*மனோ கணேசன் பாராட்டு*

கொழும்பு,ஜன.21
ஜல்லிக்கட்டுத் தடையை தமிழ் கலாசாரத்தின் மீதான தாக்குதலாகவே உலகம் முழுக்க வாழும் தமிழர் பார்க்கிறார்கள். ஜல்லிக்கட்டு எழுச்சி, தமிழரின் தன்மானப் புரட்சி என்பதை இந்திய அரசு புரிந்துக்கொள்ள வேண்டும் என தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சரும், தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவருமான மனோ கணேசன் தெரிவித்தார்.
தமிழகத்தில் பல்லாயிரக்கணக்கான மாணவர்களால் மெரீனாக் கடற்கரையை மையப்படுத்தி முன்னெடுக்கப்பட்டு வரும் ஜல்லிக்கட்டு தொடர்பான அமைதிப்போராட்டத்தைப் பற்றிய கருத்துகளைத் தனது முகநூல், டுவீட்டர் தளங்களில் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.
தொழிற்சாலைகளில் மிருக வளர்ப்பு, தோலுக்காக மிருகங்களை வேட்டையாடுவது, தந்தத்துக்காக யானைகளைக் கொல்வது, பிராணிகளில் நிகழ்த்தப்படும் பரிசோதனைகள் என்ற வரிசையில் ஜல்லிக்கட்டைப் பார்க்க கூடாது. அப்படியானால் உலகில் மாமிச உணவைத்



தடை செய்ய வேண்டும். மிருகக்காட்சி சாலைகளையும் மூடிவிட வேண்டும்.
தமிழகத்துக்கு காவிரி நீரைத் திறந்துவிட வேண்டும் என்ற நீதிமன்றத் தீர்ப்பை கர்நாடக அரசு தூக்கி எறியும் போதும், அந்தத் தீர்ப்பு வலியுறுத்தும் தேவைப்பாட்டை எதிர்த்து கர்நாடகத்தில் வன்முறை கலவரம் நடைபெறும் போதும் வராத கோபம், இப்போது ஜல்லிக்கட்டுத் தீர்ப்பை மாற்றி எழுது என்று அமைதியாக போராடும் தமிழக மாணவர்களைப் பார்த்து வருவது எப்படி என்ற தமிழ்நாட்டு மக்களின் கேள்வியில் நியாயம் இருப்பதை மனோ கணேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.
ஸ்பெயின் நாட்டில் உருவாகி இன்று தென் அமெரிக்க நாடுகளிலும் நடைபெறும் மாட்டுச்சண்டை என்பதற்கும், ஜல்லிக் கட்டுக்கும் இடையில் உள்ள வேறுபாட்டை 'பீடா' போன்ற விலங்குரிமை அமைப்புகள் புரிந்து கொண்டு, அவசியமானால் புதிய நெறிமுறைகளை உருவாக்க ஒத்துழைக்க வேண்டும். ஜல்லிக்கட்டை இன்னமும் நெறிப்படுத்தி, காளைகளுக்கு துன்பம் விளைவிக்கப் படக்கூடிய உத்தேச சந்தர்ப்பங்களுக்கு எதிராக முன்னர் உருவாக்கப்பட்ட விதிகளை இன்னமும் நவீனப்படுத்தி நடைமுறை செய்து, ஜல்லிக்கட்டை அனுமதிப்பதையே இன்று இந்திய அரசு செய்ய வேண்டும்.
சமூக ஊடகங்களின் மூலம் தகவல்களை உடனுக்குடன் பெறும் உலகத் தமிழர்கள், இன்று ஜல்லிக்கட்டு சாத்வீக போரில் குதித்துள்ள தமிழக மாணவர்களை, தன்மான தமிழ் சின்னங்களாக பார்க்கத் தொடங்கி விட்டார்கள் என்றும், ஜல்லிக் கட்டு என்ற விவகாரம், இன்று உலகெங்கும் தமிழரின் தன்மான புள்ளி ஆகி விட்டது என் றும், ஆகவே அதில் கைவைப்பவர்கள், யாராயினும் இனி கொஞ்சம் மாற்றி யோசிக்க வேண்டும் என்றும் மனோ கணேசன் சமூக ஊடக தளங்களில் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# கொழும்பில் 40 வீதம் தண்ணீர் வீண் விரயம்

கட்டுப்படுத்தினால் வறட்சியை எதிர்கொள்ள முடியும்

கொழும்பு,ஜன.21
கொழும்பு நகரில் 40 வீதம் தண்ணீர் வீண் விரயமாக்கப்படுவதாக நீர் வழங்கல் மற்றும் நகர திட்டமிடல் அமைச்சின் செயலாளர் நிமால் ஹெட்டியாராச்சி குறிப்பிட்டார்.
முழு இலங்கையிலும் 28 தொடக்கம் 30 வீதத் தண்ணீர் வீண் விரயமாக்கப்படுவதாகவும், இதனைக் கட்டுப்படுத்தினால் தான் எதிர்காலத்தில் வறட்சியை எம்மால் எதிர்கொள்ள முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.
வறட்சியினால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பைக் குறைப்பதற்கு ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைய நியமிக்கப்பட்ட அமைச்சின் செயலாளர்கள் அடங்கிய குழு ஊடகவியலாளர் சந்திப்பொன்றை ஏற்பாடு செய்து தற்போதைய நிலை தொடர்பில் தெளிவூட்டியது.
அனைத்து நீர்த்தேக்கங்களிலும் நீர்மட்டம் 50 வீதத்தை விடக் குறைவாகவே காணப்படுவதாக மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலாளர் உதய ஆர். செனவிரத்ன குறிப்பிட்டார்.
அடுத்த மூன்று மாதங்கள் மிகவும் சவால் மிக்கதாக அமையும் எனவும் உணவு உற்பத்தி குறைவடையும் எனவும் இவ்வாறான சூழ்நிலையை எதிர்நோக்க நாம் தயாராக இருப்பது அவசியம் எனவும் அவர் தெரிவித்தார். (ஐ)

# இரத்தினபுரியில் நால்வருக்கு மூளைக்காய்ச்சல்

கொழும்பு,ஜன.21
இரத்தினபுரி வைத்தியசாலையில் மூளைக் காய்ச்சல் நோயாளர்கள் நால்வர் அடையாளம் காணப்பட்டுள்ளதாக, சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது
கடந்த மூன்று வாரங்களில் குறித்த வைத்தியசாலையில் மூளைக் காய்ச்சல் என சந்தேகிக்கப்படுவோர் 10 பேர் அனுமதிக்கப்பட்டதாகவும் அந்த அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.
எது எவ்வாறு இருப்பினும், இவர்களில் நால்வருக்கு மட்டுமே இந்த நோய்த் தாக்கம் இருப்பது அடையாளம் காணப்பட்டுள்ளது. அத்துடன், இவர்களின் நிலை கவலைக்கிடமாக இல்லை.
ஒவ்வொரு வருடமும் நவம்பர் தொடக்கம் ஜனவரி மாதம் வரை இதுபோன்று நோய்கள் அதிகமாக பதிவாகியுள்ளதாகக் கூறியுள்ள அந்த அமைச்சு, எனினும் அது பரவும் நிலையில் இல்லை எனவும் தெரிவித்துள்ளது. (ஐ)

நுட்பம்

# காணொலி பதிவேற்ற வசதியுடன் வருமான ஈட்டம்

## பேஸ்புக் நிறுவனம் அறிமுகப்படுத்த தீர்மானம்

உலகின் மிகப் பிரபலமான சமூக வலைத்தள முன்னிலைப் பெறுதியாக கருதப்படும் பேஸ்புக் நிறுவனம் காணொலிகளை பதிவேற்றம் செய்யும் வசதியுடன் பயனர்களுக்கு வருமான ஈட்டம் கிடைக்கக் கூடியதான புதிய வசதியை அறிமுகம் செய்யவுள்ளதான தகவல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

உலகின் முன்னணிக் காணொலி களின் பகிர்தளமாக விளங்கும் யூடியூப் நிறுவனம் தற்போது காணொலிகளிடையே விளம்பரங் களையும் காட்சிப்படுத்தி வருகின்றது. இந்த செயற்பாட்டின் மூலமாக பதி வேற்றம் செய்வோருக் கான வருமான ஈட்டம் கிடைக்கப் பெறுகிறது.

இந்த நிலையிலே இதை ஒத்ததான செயல்நிலை வசதியினை பேஸ்புக் நிறுவனமும் விரைவில் வழங்க வுள்ளதாக கூறப்பட்டுள்ளது.குறிப்பாக முகப் புத்தகத்தில் பதி வேற்றம் செய்யும் வீடியோக் களின் இடையேயாக குறிப்பிடத் தக்க சிறப்பியல்புகளை கொண்ட தான விளம்பரங்களை வெளியிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி பதிவேற்றம் செய்யப்படும் காணொலிகள் குறைந்தது 90 விநாடிகள் காட்சிதரக் கூடியதாக இருக்க வேண்டும் எனவும் இவ் வாறான காணொலிகளின் இடையே 15 விநாடிகள் காட்சி தரக்கூடியதான விளம்பரங்கள் காட்சிப்படுத்தப்படும் எனவும் தெரி விக்கப்பட்டுள்ளது.

மேற்படி விளம்பரங்கள் அனைத் தும் பாரம்பரியமான தொலைக் காட்சிகளில் வெளிப்படுத்தப்படும் விளம்பரங்களைப் போன்று இருக்கு மெனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

விளம்பரப்படுத்தல்களின் ஊடாக கிடைக்கப்பெறும் இலாபத்தின் 55 சதவீதத் தொகையானது காணொ லியை வெளிப்படுத்தும் நபர் களுக்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பேஸ்புக் நிறுவனத்தின் மொத்த வருவாயில் விளம்பரம் மூலமாக 700 கோடி டொலர்கள் தற்போது ஈட்டப்படுவதாகக் கூறப்படுகிறது. இந்தத் தொகை மதிப்பீடானது, 96 சதவிகித மாகக் காணப்படுகிறது.

கடந்த ஆண்டில் நாளொன்றுக்கு 5 கோடி வரையான மக்கள் முகப் புத்தக காணொலிகளை கண்டு கொண் டுள்ளனர்.நாளாந்தம் சராசரியாக 10 கோடி மணிநேரத்தை செலவிட் டுள்ளனர். ஆக, இந்தப் பயன்படு தி றனை சாதகமாக்கிக் கொண்டு வரு மானமானத்தை ஈட்டுவதற்கான முயற்சியில் பேஸ்புக் நிறுவனம் தற்போது களமிறங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வணிகம்




## சணச அபிவிருந்தி வங்கியின் 89 ஆவது கிளை மன்னாரில் ஆரம்பித்து வைக்கப்பட்டது



சணச அபிவிருத்தி வங்கியின் 89 ஆவது கிளை நேற்று முன்தினம் வியாழக்கிழமை மன்னார் பிரதான வீதியில் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் அமையப் பெற்றுள்ள சணச அபிவிருந்தி வங்கியின் இரண்டாவது கிளையாக இது அமைந்துள்ளது.

சணச அபிவிருத்தி வங்கியின் முகாமையாளர் ஏ.நாகேந் திரன் தலைமையில் இடம்பெற்ற ஆரம்ப நிகழ்வில், சணச அபிவிருத்தி வங்கியின் தலைவி சாமதானி கிரிவந்தனியா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு குறித்த வங்கியின் செயற்பாடுகளை ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதி காரி அஜந்த றொற்றிகோ, சர்வ மதத்தலைவர்கள், சணச அபிவிருத்தி வங்கியின் கிளை முகாமையாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கெதரட தேகி ஊக்குவிப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்தியது கொமர்ஷல் வங்கி

## அதிக பணப் பரிசுகளை வாடிக்கையாளர்கள் பெற்றுக்கொள்ள முடியும்

இலங்கையின் தனிச்சிறப்பு மிக்க தனி யார் வங்கியான கொமர்ஷல் வங்கி அதிக பணப் பரிசுகளை வாடிக்கையாளர்கள் பெற்றுக்கொள்ளும் விதமாக கெதரட தேகி ஊக்குவிப்புத் திட்டத்தை அறி முகம் செய்துள்ளதாக அறிவித்துள்ளது.

இதன்படி, ஊக்குவிப்புத் திட்டமானது கடந்த 18 ஆம் திகதி முதல் நடைமுறைப் படுத்தப்பட்டுகிறது. வங்கியானது அதன் ஊடாக வெளிநாடுகளில் இருந்து பணத்தைப் பெறுகின்றவர்களுக்கென 101 வகையான பெறுமதிமிக்க பரிசு களை வழங்கிக் கௌரவிக்கவுள்ளது. ஒரு கார், நான்கு ஸ்கூட்டர்கள், 12 எல்.இ.டி தொலைக்காட்சிகள், 84 பணப்பரிசுகள் என்பவை மேற்படி ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

கொமர்ஷல் வங்கியின் சொந்தப் பணப்பரி மாற்றத் தளத்தைப் பாவிப்பவர்கள், அல்லது மணிகிராம், எக்ஸ்பிரஸ் மணி, றியா ஆகிய சேவைகளை 2017 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் டிசம்பர் 31 ஆம் திகதி வரை பயனுறுதியாக்குபவர்கள் தாமா கவே இந்தத் திட்டத்துக்குள் உள்வாங் கப்படவுள்ளனர். மேலும் ஒவ்வொரு காலாண்டின் இறுதியிலும் பரிசுகளை வெல்லத்தக்கதாக தொடரான வெற்றியாளர் தெரிவுகள் இடம்பெறவுள்ளதாகவும் வங்கி அறிவித்துள்ளது.

மேலும் 2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 17 ஆம் திகதி மாபெரும் பரிசிழுப்பு இடம் பெறவுள்ளது. அந்தச் சந்தர்ப்பத்தில் மேற் படி பரிசுகளுடன் வெற்றியாளர் ஒருவருக்கு 'டெட்ஸன் ரெடி கோ கார்' ஒன் றும் பரிசாக வழங்கப்படவுள்ளது.

இதுதொடர்பில் கருத்துரைத்துள்ள பங்கிங் மற்றும் வெளிநாட்டு பணம் பெறுகை பிரிவின் பிரதான முகாமையாளர் பிரதீப் பந்துவன்ஸ,

"பண உள்வருகையின் இந்தப் பெறுமா ணங்களை மேலும் அதிகரிப்பதற்கான புதிய வழிகளை நாம் ஒவ்வொரு ஆண்டும் கையாண்டு வருகின்றோம். அந்த வகையில் வாடிக்கையாளர்களுக்கு அர்த்தமுள்ள வகையில் நாம் வெகுமதிகளையும் வழங்கி வருகின்றோம்.நடப்பாண்டில் இந்த கெதரட தேகி ஊக்குவிப்புத் திட்டம் சந்தையில் அதிக வெற்றியளிக்கும் என்றும் நம்புகின்றோம்." என்றார்.

வெளிநாடுகளில் இருந்து பணம் அனுப்பு வோருக்கான சேவைகளை வழங்குவதில் கொமர்ஷல் வங்கி இலங்கையில் பிரதான பங்கு வகிக்கின்றது. வங்கிக்கு சொந்தமான அதி நவீன இணைய வழி பணப்பரிமாற்றச் சேவையான ஈ- எக்ஸ்சேஞ்ச் மற்றும் மணி கிராம், றியா, எக்ஸ்பிரஸ் பணப் பரிமாற்ற சேவைகள் தற்போது வழங்கப்பட்டு வருகின் றமை குறிப்பிடத்தக்கது.

"

கொமர்ஷல் வங்கியின் ரெமிட்டன்ஸ் அட்டையைக் கொண்டுள்ளவர்கள் இந்த ஊக்குவிப்புக் காலத்தின்போது வெளி நாட்டில் இருந்து பணத்தைப் பெற்றால் இரட்டிப்புப் பரிசை வெல்லும் வாய்ப்புக் கிடைக்கப்பெறும்.

எதிர்வரும் ஏப்பிரல், ஜூலை மற்றும் ஒக்ரோபர் மாதங்களில் வருகின்ற 17 ஆம் திகதிகளில் மூன்று காலாண்டுக் குரித்தான பரிசிழுப்புக்கள் இடம்பெற வுள்ளன. குறித்த காலப்பகுதியில் பணத்தைப் பெற்றுக் கொள்பவர்கள் இந்தப் பரிசிழுப்பில் உள்வாங்கப் படுவர். ஒரு ஸ்கூட்டர், மூன்று எல்.இ.டி. தொலைக்காட்சிகள், ஒவ் வொன்றும் பத்தாயிரம் ரூபா பெறுமதி யான 21 பணப்பரிசுகள் காலாண்டு சீட்டிழுப்பின்போது வழங்கப்படவுள்ளன.

## எந்த நேரத்திலும் ஏவுகணையைச் செலுத்தலாம் வடகொரியா

### தென்கொரியா அச்சம்

சியோல், ஜன. 21
வடகொரியாவின் ஏவுகணைக் கட்டுமானம் முழுமையடைந்துள்ளது என்றும், அந்த நாடு எந்த நேரத்திலும் ஏவுகணையை பரிசீலித்துப் பார்க்கலாம் என்றும் அச்சம் வெளியிட்டது தென்கொரியா.



பன்னாட்டு சட்டதிட்டங்களை மீறி வடகொரியா அவ்வப்போது பல்வேறுபட்ட அணுவாயுத சோதனைகளை நடத்தி வருகிறது. இதனால் அந்த நாட்டின் மீது ஐக்கிய நாடுகள் சபை பல பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது. வடகொரியாவின் முக்கிய ஆதாரமான நிலக்கரி விற்பனையை முடக்கும் வகையில் எந்தவொரு நாடும் வடகொரியாவிடமிருந்து நிலக்கரியை இறக்குமதி செய்யக்கூடாது என்று சில மாதங்களுக்கு முன்னர் தடையுத்தரவு பிறப்பித்தது. இதன் மூலம் வடகொரியா தனது முக்கிய வருவாயை இழந்து அணுவாயுதச் சோதனையைக் கைவிடும் என்பது ஐக்கிய நாடுகள் சபையின் நோக்கம். ஆனால் வடகொரியா இற்குக் கட்டுப்படவில்லை. தற்பொழுது, புதிய ஏவுகணையொன்றின் கட்டுமானத்தையும் வடகொரியா தீவிரமாக முன்னெடுத்து வருகிறது. இதைத் தனது புதுவருட உரையில் வடகொரிய ஜனாதிபதி கிம் யோங் உன் உறுதிப்படுத்தினார். தற்போது தயாரிக்கப்படும் ஏவுகணை வடகொரியாவிலிருந்து அமெரிக்காவரை பாயவல்லது என்று கருதப்படுகிறது. இந்த நிலையில் வடகொரியாவின் ஏவுகணைக் கட்டுமானம் முழுமையடைந்துள்ளது என்று தென்கொரியா தெரிவித்தது. அமெரிக்காவும் இதனை உறுதிப்படுத்தியது.

வடகொரியாவின் ஏவுகணைத் தளத்தில் நவீனதொழில்நுட்பத்துடன் கூடியஇரு ஏவுகணைகள் பொருத்தப் பட்டுள்ளன. அவை கடந்த காலங் களில் அந்த நாடு பரிசீலித்த ஏவுகணைகளின் மேம்பட்ட தரமாக இருக்கலாம் என்று அமெரிக்கா தெரிவித்தது. முன்னதாக வடகொரியாவின் ஏவுகணைகள் அமெரிக்க எல்லையையோ அல்லது அமெரிக்காவின் நட்பு நாடுகளின் எல்லைகளையோ நெருங்கினால் அவை வீழ்த்தப்படும் என்று அமெரிக்கா எச்சரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)



## ஈரானில் சரிந்து விழுந்தது கட்டடம் 30 தீயணைப்புப் படையினர் சாவு

### விபத்தையடுத்து அவலம்

டெஹ்ரான், ஜன. 21
ஈரான் தலைநகர் டெஹ்ரானில் உள்ள 17 மாடிக் கட்டடமொன்று இடிந்து விழுந்ததில் தீயணைப்புப் படையினர் 30 பேர் உயிரிழந்தனர். பிரபல தொழில் அதிபர் ஹபீப் எல்கானியன் என்பவருக்குச் சொந்தமான கட்டடமே இவ்வாறு இடிந்து விழுந்தது. குறித்த கட்டடத்தில் ஏற்பட்ட தீ, அத்தனை மாடிகளுக்கும் விரைவாகப் பரவியதை அடுத்து தீயைக் கட்டுக்குள் கொண்டுவருவதற்காக விரைந்து சென்று போராடிக் கொண்டிருந்த தீயணைப்புப் படையினர் மீது கட்டடம் திடீரென இடிந்து விழுந்தது. இதனையடுத்து 30 தீயணைப்புப் படையினர் உடல்நசுங்கி உயிரிழந்தனர். மேலும் 38 பேர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் பலரின் நிலமை கவலைக்கிடமாக உள்ளதால் உயிரிழப்புக்கள் மேலும் அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. (ம)



## நீரிழிவு நோயாளிக்கு ஆயுள் குறையும்

சீனாவில் நடத்தப்பட்ட ஆய்வு ஒன்றில் நீரிழிவு நோயாளிக்கு 9 வருடங்கள் ஆயுள் குறையும் என்ற தகவல் வெளிப்பட்டது. பிரிட்டனின் ஒக்ஸ்போட் பல்கலைக்கழகம், சீனாவின் பெக்கிங் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் ஆய்வாளர்கள், 30 வயது முதல் 79 வயது வரையிலான 5 லட்சம் மக்களின் சாவுக்கும் நீரிழிவு நோய்க்கும் உள்ள தொடர்பு குறித்து ஆய்வு தொடங்கினர். 2004 ஆம் ஆண்டு முதல் 2008 ஆம் ஆண்டு வரை சீனாவில் 5 நகர்ப்புறங்கள் மற்றும் 5 கிராமப்புறங்களில் இருந்த 5 லட்சம் பேர் தேர்வு செய்யப்பட்டு, இவர்களில் யாரேனும் சாவடைந்தால் என்ன காரணத்துக்காக இறக்கின்றனர் என 2014 ஆம் ஆண்டு வரை ஆய்வு செய்யப்பட்டது. இந்த ஆய்விலேயே குறித்த தகவல் வெளிப்பட்டது. (ம)

## அணுவாயுதத்தைக் கைவிட அழைக்கிறார் ஜின்பிங்

ஜெனீவா, ஜன. 21
சுவிட்சர்லாந்து நாட்டுக்கு உத்தியோகபூர்வ பயணமாக சென்றுள்ள சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங், அணுவாயுதத்தைக் கைவிட உலக நாடுகளுக்கு அழைப்பு விடுத்தார்.



ஜெனீவாவில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் ஐரோப்பிய தலைமையகத்தில் நேற்றுமுன் தினம் நடந்த கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றினார்.
அதன்போது ஜின்பிங் இவ்வாறு தெரிவித்தார்.
எதிர்காலத்தில் அணு ஆயுதங்கள் மனித சமுதாயத்திற்கு பெரும் அச்சுறுத்தலாக இருக்கும். எனவே அனைத்து நாடுகளும் அணு ஆயுதங்களை நிராகரிப்பதுடன் உலகத்தில் இருந்து அணு ஆயுதங்களை முற்றிலும் அழித்திட முன்வர வேண்டும். வல்லரசு நாடுகள், தமக்கென உள்ள அடிப்படைச் சித்தாந்தங்களை மதித்து நடக்க வேண்டும், ஒரு நாட்டின் மீது ஒன்றோ அல்லது பல நாடுகளோ ஆதிக்கம் செய்வதைத் தடுக்க வேண்டும். மேலும், பெரிய நாடுகள் தங்களது கொள்கைகளைச் சிறிய நாடுகளின் மீது திணிக்கக் கூடாது. இது ஜனநாயகத்துக்குப் புறம்பானது என ஜின்பிங் மேலும் தெரிவித்தார் என்று பன்னாட்டு ஊடகங்கள் குறிப்பிட்டன. (ம)

## ஜல்லிக்க... அவசர ச...

### போராட்ட... அரங்கேறி...

சென்னை, ஜன. 21
தமிழ்நாட்டில் ஜல்லிக்கட்டுக்கு ஆதரவு தெரிவித்து இளைஞர்களால் மேற்கொள்ளப்பட்ட போராட்டம் ஐந்தாவது நாளாக நேற்றும் தொடர்ந்தது. அலங்காநல்லூர், மெரீனா பகுதிகள் மாணவர் மற்றும் இளைஞர் வெள்ளத்தில் மிதந்தன. தமிழ்நாட்டு அரசு ஜல்லிக்கட்டை நடத்த அவசரச்சட்டம் இயற்றவுள்ளது. எனவே போராட்டத்தை இளைஞர்கள் கைவிட வேண்டும் என்று முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் வேண்டுகோள் விடுத்தார். ஆனால் உறுதியான நிலைப்பாட்டை வழங்கினால் அல்லது ஜல்லிக்கட்டு நடந்தால் மட்டுமே போராட்டம் கைவிடப்படும் என்று இளைஞர்கள் தெரிவித்தனர்.
மிருகவதை என்று தெரிவித்து இந்தி



யாவில் ஜல்லிக்கட்டு தடைசெய்யப்பட்டுள்ளது. தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டாதலால் அதைத் தடைப்பட்டியலில் இருந்து நீக்க

## ஐ.எஸ்ஸிடமிருந்து கிழக்கு மோசூல் விடுவிப்பு

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் பிடியில் உள்ள மோசூல் நகரின் கிழக்குப் பகுதி ஈராக் படையினரால் மீண்டும் கைப்பற்றப்பட்டது. ஈராக், சிரியா நாடுகளின் சில பகுதிகளைக் கைப்பற்றி அவற்றை ஒரு தனிநாடு என்று அறிவித்திருந்தது ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு. ஈராக்கின் இரண்டாவது பெரிய நகரான மோசூல் ஐ.எஸ். அமைப்பின் பிடியிலேயே இருந்தது. நகரை மீட்கும் போரில் கடந்த ஒகஸ்ட் மாதம் களமிறங்கியது ஈராக் படை. ஈராக்குக்கு ஆதரவாக அமெரிக்கா உள்ளது. இந்த நிலையில் மோசூலின் கிழக்குப் பகுதி ஈராக் படையினரால் நேற்றுமுன்தினம் முழுவதுமாக மீட்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.
கிழக்கு மோசூல் எமது கட்டுப்பாட்டுக்குள் வந்தமை சிறப்பானது. இது கொண்டாடப்பட வேண்டிய வெற்றி. இன்றும் சில இடங் களிலேயே ஐ.எஸ். பயங்கரவாதிகள் உள்ளனர். விரைவில் அவர்களும் விரட்டியடிக்கப்பட்டு மோசூல் முழுவதும் ஈராக் கொடி ஏற்றப்படும். தமது பின்னடைவை ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு முழுமையாக உணர்ந்துள்ளது. இதனால் எஞ்சியுள்ள (ஐ.எஸ். அமைப்பின் கட்டுப்பாட்டில் உள்ள) பகுதிகளில் வாழும் மக்களை அவர்கள் மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்த அதிக வாய்ப்புள்ளது. இதனால் போர் மிகவும் சவாலாக அமையலாம் என ஈராக் படைத்தளபதி தலித் சங்காதி தெரிவித்தார்.
ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பிடமிருந்து விடுவிக்கப்பட்ட பகுதிகளில் பெருங்கிராமமான குவையாரா, பழைமைகளை உள்ளடக்கிய நிம்ரூட் நகர், தைகிரீஸ் நதிக்கரை, மோசூல் பல்கலை, மோசூல் ஆளுநர் மாளிகை ஆகியவை உள்ளடங்குகின்றன. (ம)



# ..கட்டை வலியுறுத்தி இளைஞர்கள் விடாப்பிடி;
# .. சட்டத்தை இயற்றிட தமிழ்நாடு அரசு முடிவு

## ..டத்தைக் கைவிடுமாறு கோரினார் ஓ.பி.எஸ்.
## ..றியபின்னரே சாத்தியம் என்றனர் மாணவர்கள்



வேண்டும் என்று பல அரசியல் கட்சிகள் வலியுறுத்தின. ஆனால் பொங்கல் முடிந்த பிற்பாடும் ஜல்லிக்கட்டு விவகாரத்தில் உறுதியான எந்த முடிவும் வழங்கப்படவில்லை. டெல்லி அரசின் இந்த நிலைப்பாட்டைக் கண்டித்து தமிழ்நாட்டில் பரவலான கண்டனங்களும், ஆர்ப்பாட்டங்களும், ஊர்வலங்களும் இடம்பெற்று வருகின்றன.

அலங்காநல்லூரில் ஐந்தாம் நாள் இந்த வருடத்தின் ஆரம்பத்தில் இருந்து பல ஆர்ப்பாட்டங்களும் கவனவீர்ப்புக்களும் இடம்பெறுகின்ற போதிலும், அலங்காநல்லூரே மிகப்பெரும் புரட்சியைத் தோற்றுவித்தது. அங்கு கடந்த திங்கட்கிழமை மிகப்பெரும் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 200 இற்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களை விடுவிக்க வலியுறுத்தி சாலை மறியல்கள் இடம்பெற்றன. பின்னர் காட்டுத்தீயைப் போல் போராட்டங்கள் மிக விரைவாகப் பரவின,

**மெரீனாவில் மேலும் தீவிரம்**

சென்னையின் முக்கிய இடங்களில் ஒன்றான மெரீனாவில் கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பித்த போராட்டம் மேலும் வலுவடைந்து வருகிறது. நேற்று, கிட்டத்தட்ட ஒரு லட்சம் இளைஞர்கள் அங்கு திரண்டிருந்தனர்.



பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டதன் காரணத்தால் கூட்ட நெரிசல் மேலும் அதிகரித்தது.

**முழு அடைப்பு**

ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாகப் போராடிவரும் இளைஞர்களுக்கு ஆதரவாகவும் அந்தப் போராட்டத்தில் தாமும் இணைவதற்காகவும் தமிழ்நாட்டு வணிகர் சங்கங்களின் பேரவை மற்றும் பல வணிகர் அமைப்புக்கள் நேற்று முழு அடைப்பை அறிவித்தன. இதன்படி நேற்று 40 லட்சம் கடைகள் அடைக்கப்பட்டன. ஒரு லட்சத்து 50 ஆயிரம் லொறிகள் இயங்கவில்லை. காலை 6 மணி முதல் மாலை 6 மணிவரை பால் விநியோகம் இருக்கவில்லை. முச்சக்கர வண்டிகள் இயங்க வில்லை. சில பேருந்துக்கள் இயங்கவில்லை. இதனால் தமிழ் நாட்டின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

**திரையுலகு ஆதரவு**

தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டான ஜல்லிக்கட்டை அனுமதிக்க வேண்டி போராட்டத்தில் ஈடுபடுள்ள இளைஞர்களுக்கு தமிழகமெங்கும் பொதுமக்களின் ஆதரவு பெருகி வரும் நிலையில், பிரபலங்களும் சினிமா நட்சத்திரங்களும் ஆதரவு தெரிவித்து வருகின்றனர். தமிழ்சினிமாவில் முன்னணி நடிகர்களான கமலகாசன், ரஜினி, விஜய், சூர்யா, ஜி.வி.பிரகாஸ், சிம்பு, சிவகார்த்திகேயன், தனுஸ் எனப் பலரும் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளனர். நடிகர்சங்கம் சார்பில் நேற்று உணவு ஒறுப்புப் போராட்டமும் அறிவிக்கப்பட்டது. ஜல்லிக்கட்டுக்கு எதிர்ப்பும் பீட்டாவுக்கு ஆதரவையும் தெரிவித்த நடிகை திரிசா, ஜல்லிக்கட்டுக்கு ஆதரவு தெரிவித்து உணவு ஒறுப்பில் ஈடுபட்டார். குறித்த விடயம் இணையத் தளங்களில் விரைவாகப் பரவி வருகிறது. திரைப்படக் காட்சிகளும் நேற்று முழுவதுமாகக் கைவிடப்பட்டன. (ம)





# இத்தாலியில் கடும் பனிச்சரிவு; புதையுண்டது நட்சத்திர விடுதி

உரோம், ஜன. 21



இத்தாலி மத்திய பகுதியில் உள்ள அப்ருஸோவில் கடும் பனிச்சரிவு காரணமாக 4 நட்சத்திர விடுதியொன்று நேற்றுக் காலை புதையுண்டது. இதில் 30 பேர் சிக்கியிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. ரிகோபியானோ என்ற இந்த விடுதிக்கு மீட்பு வாகனங்கள் அனுப்பப்பட்டன. ஆனால் சாலை முழுவதும் பனிப்பொழிவு இருந்ததன் காரணமாக போக்குவரத்தில் பெரும் சிக்கல் இருந்தது. உயிரிழப்பு கள் இருக்கும் என்றும் அச்சம் தெரிவிக்கப்பட்டது. கடும் பனிப்பொழிவு தொடர்கின்ற காரணத்தினால் மந்த கதியில் மீட்புப் பணி இடம்பெற்று வருகிறது. (ம)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## வாய்ப்பைத் தவறவிடாதிருப்பதன் மீதான நியாயங்கள் என்ன?

அரசியல் தீர்வு ஒன்றைப் பெறுவதற்கு இது சிறந்ததொரு சந்தர்ப்பம் என்று மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வருகிறார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன். அதனைத் தமிழர்கள் முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறுகின்றார்.

2015ஆம் ஆண்டு கொழும்பில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது முதல் இரா.சம்பந்தன் இதனைத் தொடர்ந்து கூறிவருகின்றார். வரலாற்றில் முன்னெப்போதும் கிடைத்திராத சந்தர்ப்பம் என்று இதனை வர்ணிக்கவும் அவர் தயங்கவில்லை. கடந்த 70 வருடங்களாகத் தமிழர்கள் மேற்கொண்ட முயற்சிகள் எவையும் வெற்றியளிக்காத நிலையில், இந்தச் சந்தர்ப்பத்தை அவர்கள் தவறவிட்டுவிடக் கூடாது என்று தமிழர்களிடம் மீண்டும் மீண்டும் அழுத்திச் சொல்லி வருகிறார் அவர்.

சம்பந்தனின் இந்த உறுதியும், அழுத்தமும், நம்பிக்கையும் உச்சபட்ச வியப்பையும் ஆச்சரியத்தையும் அளிப்பவை.

வடக்கு – கிழக்கு மாகாணங்களின் இணைப்பு, சுூட்டாட்சி, தமிழர்களின் இறைமையை ஏற்றுக்கொள்ளுதல் போன்ற விடயங்களில் விட்டுக்கொடுப்புக்கு இடமில்லை என்கிற நிலைப்பாட்டை வெளிப்படுத்தி வருகிறார் சம்பந்தன். மறுபுறத்திலோ, தீர்வு குறித்துக் கலந்துரையாடி வரும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் சம்பந்தன் விடாப்பிடியாகக் கூறிவரும் அனைத்தையும், விட்டேத்தியாக நிராகரித்தே வருகின்றன.

ஒற்றையாட்சிக்குள்தான் அதிகாரப் பகிர்வு என்று இந்த இரு முக்கிய அரசியல் கட்சிகளும் தொடர்ந்தும் வலியுறுத்துகின்றன. வடக்கு – கிழக்கு இணைப்புக் குறித்துப் பேசக்கூடிய ஒரு நிலமையே இல்லை என்பதை சம்பந்தனே அண்மையில் ஏற்றுக் கொண்டிருந்தார். இறைமை, சுயநிர்ணய உரிமை என்கிற சொற்கள் தெற்கில் உடனடியாகவே ஒவ்வாமையை ஏற்படுத்துகின்றன.

இப்படி, தெற்கின் நிலமை தமிழர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வு ஒன்றை அடைவதற்குச் சாதகமில்லாமல் இருக்கின்றபோதிலும், தீர்வுக்கான மிகச் சிறந்ததொரு சந்தர்ப்பம் இது என்று சம்பந்தன் மீண்டும் மீண்டும் வலியுறுத்துவது வியப்பைத் தருவதில் ஆச்சரியம் ஏதுமில்லை.

எல்லாவற்றுக்கும் மேலாக உத்தேச புதிய அரசமைப்பு பொது வாக்கெடுப்பு ஒன்றின் மூலம் அனைத்து மக்களாலும் அங்கீகரிக்கப்படவேண்டும் என்றும் கூட்டமைப்பின் தலைவர் அழுத்தம் திருத்தமான நிலைப்பாட்டில் உள்ளார். ஏற்கக்கூடிய தீர்வு ஒன்றைக் காண்பதிலேயே தெற்கின் – பௌத்த சிங்களப் பேரினவாதத்தில் மூழ்கித் திளைத்திருக்கும் – கட்சிகள் இணக்கம் ஒன்றுக்கு வரும் சாத்தியக்கூறுகள் தென்படாத நிலையில், அப்படிப்பட்ட தீர்வு ஒன்று பொதுவாக்கெடுப்பு என்கிற மாபெரும் தடையைத் தாண்டுவது சாத்தியம்தானா என்கிற நியாயமான சந்தேகமும் எழாமல் இல்லை.

இவையெல்லாம் நிகழவே முடியாதவைகள் அல்ல என்பது நிதர்சனமானதுதான். ஆனால், தற்போதிருக்கும் களச் சூழலில், தற்போதிருக்கும் அனைத்து இன அரசியல்வாதிகளினதும் உதவியுடன் இவை சாத்தியம்தானா என்பதுதான் இங்குள்ள கேள்வி.

இப்படி இமாலயமாகத் தெரியும் பல தடைகளைத் தாண்டவேண்டிய நிலையிலும், தமிழர்கள் இந்தச் சந்தர்ப்பத்தைத் தவறவிட்டுவிடாமல் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று மக்களிடம் வலியுறுத்தும் இரா.சம்பந்தனின் நம்பிக்கை பாராட்டப்படவேண்டும். அதில் சந்தேகம் இல்லை. தமிழர்களுக்குள்ளேயே ஒரு தரப்பினர் தற்போதைய அரசியல் நகர்வுகளில் அவநம்பிக்கைகொண்டு, நம்பிக்கையீனம்கொண்டு அதனைப் போராட்டங்கள் ஊடாக வெளிப்படுத்திவரும் நிலையிலும், அவர் இதனை வலியுறுத்துகிறார் என்பதும் கவனத்தில்கொள்ளப்படவேண்டும். அதிருப்திகொண்டிருப்பவர்களையும் ஒற்றுமையோடு இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த வருமாறு அவர் அழைப்பு விடுக்கிறார்.

களச் சூழல், ஒரு தமிழனுக்கு எந்தவிதத்திலும் நம்பிக்கையளிக்கும் விதத்தில் அமைந்திருக்காதபோதிலும், நம்பிக்கையோடு காத்திருங்கள் என்கிற சம்பந்தனின் அறைகூவலுக்கு அவன் செவிமடுப்பது சந்தேகத்திற்கு உரியதே! அப்படி நம்பிக்கை கொள்வதற்கு ஏதாவது சிறப்பான காரணங்கள் இருந்தால், அவற்றை சம்பந்தன் பூடமாகத்தானும் வெளிப்படுத்துவதே அவர் எதிர்பார்க்கும் ஒற்றுமைக்கான அடிப்படையாக இருக்க முடியும். அப்போது தான் மக்களும் நம்பிக்கையும் எழுச்சியும் பெறுவர்.



வடக்கு–கிழக்கில் தமிழ்பேசும் மக்களது பாரம்பரியப் பூர்வீக நிலங் களில், பௌத்த விகாரைகளைக் கட்டுவதன் மூலமும், புத்தர் சிலைகளை வைப்பதன் மூலமும் இவர்கள் பௌத்த மதத்துக்கு அவமானத்தை உண்டு பண்ணுகின்றனர்.

# பௌத்தமதக் கோட்பாடுகளுக்கு மாறாக அரசியல் சன்னதம் ஆடும் பிக்குமார்

■ மு.ஈழத்தமிழ்மணி

பௌத்த மதம், உலகிலேயே புனிதமானதொரு மதமாகக் கருதப்படுகிறது. அதனைக் கடைக்கொண்டோர், ஒழுக்க சீலர்களாக வாழ்ந்து வந்தார்கள். அத்தகு சிறப்பு வாய்ந்த பௌத்த மதத்தைச் சீரழிக்கின்ற நடவடிக்கையில் பௌத்த மதத்தவரில் ஒரு தரப்பினர் கடந்த சில ஆண்டுகளாக ஈடுபட்டு வருகின்றனர். பௌத்த மதத்தின் கோட்பாடுகளைத் தூக்கியெறிந்து விட்டுச் செயற்படும் பிக்குமார் தரப்பொன்று நாட்டில் உருவாகி யுள்ளதால், இலங்கை அரசியலின் தரமும் தாழ்ந்து போயுள்ளது.

நாட்டில் இன்று பௌத்தமதம் தலைகுனிந்து அவமானப்பட்டு நிற்கின்றது.கௌதம புத்தரையும் அவரது கோட்பாடுகளையும் சந்தி சிரிக்க வைத்து, நாட்டின் அரசியலில் மூக்கை நுழைத்து வரும் பௌத்த பிக்குகளால் நாட்டின் அமைதி, நல்லிணக்க முயற்சிகள் பின்னடைவைச் சந்திக்க நேர்ந்துள்ளது.

உலகில் அமைதி நிலவ வேண்டும் என்று விரும்பிய கௌதம புத்தர், இந்த நாட்டின் பௌத்த பிக்குமாரால் நாட்டின் அமைதிக்குச் சவால் விடும் ஒருவராக மாற்றப்பட்டிருக்கின்றார். வடக்கு–கிழக்கு மாகாணங்களில் திடீர் திடீரென முளைக்கும் புத்தர் சிலைகள், நாட்டின் அமைதி நிலைக்கு இன்று சவாலாக உருவெடுத்துள்ளன.

### பௌத்த மதத்துக்கு அவமானம் ஏற்படுத்தும் பிக்குமார்

வடக்கு–கிழக்கில் தமிழ்பேசும் மக்களது பாரம்பரியப் பூர்வீக நிலங்களில், பௌத்த விகாரைகளைக் கட்டுவதன் மூலமும், புத்தர் சிலைகளை வைப்பதன் மூலமும் இவர்கள் பௌத்த மதத்துக்கு அவமானத்தை உண்டு பண்ணுகின்றனர். பௌத்த பிக்குமார், பௌத்தமதக் கோட்பாடுகளைக் கடைக்கொண்டு, ஏனைய மதம், இனம் சார்ந்த வர்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்க வேண்டியவர்கள். நல்ல சிந்தனைக் கோட்பாடுகள், பழக்க வழக்கங்களை மற்றவர்களுக்குப் போதிக்க வேண்டியவர்கள். ஆனால் இலங்கையில் உள்ள பௌத்த பிக்குமார் இதற்கு மாறாக, பேராசை கொண்டவர்களாகவும், இனத்துவேசத்தை வெளிப்படுத்துபவர்களாகவும் இருக்கின்றனர். இலங்கை ஒரு சிங்கள நாடு. தமிழர்கள் இங்கு வந்தேறுகுடிகள், சிறுபான்மையினத்தவர்கள்; என்ற கருத்தைச் சிங்கள மக்கள் மத்தியில் பரப்பி, சிங்கள மக்கள் மனங்களில் இனத்துவேசத்தை வளர்ப்பதில் இவர்கள் மகா கெட்டிக்காரர்கள்.

பௌத்த சிங்களப் பேரினவாதமும், மதவெறியும் சேர்ந்தே முள்ளிவாய்க்காலில் இறுதிப் போரில் பல்லாயிரக்கணக்கான தமிழர்களைக் கொன்றொழித்தன. எந்தவொரு இனத்தையும் மதத்தையும் பிரித்து நோக்குமாறும், அடக்கி ஆளுமாறும் புத்தபிரான் போதித்ததில்லை. உன்னதமான வழிகாட்டியான அவரது போதனைகளைச் சில பிக்குமாரின் நடவடிக்கைகள் அவமானப்படுத்துவதாக அமைந்துள்ளன,

இலங்கை பல்லின சமூகத்தைக் கொண்டுள்ள ஒருநாடாக இருந்தாலும், அரசமைப்பில் பௌத்த மதத்துக்கே முன்னுரிமை வழங்கப்பட்டிருப்பதால், பௌத்த பிக்குமாரது மேலோங்கித்தனமான நடவடிக்கைகள் இலங்கையில் அரச அனுசரணை பெற்றவைகளாக ஆகி உள்ளன. போர் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து சில பௌத்த பிக்குமார்,

காடைத்தனம் புரிந்தும் பிற இனத்தவர்களையும், மதங்களையும் இழிவுபடுத்தும் கேவலமான செயற்பாடுகளையும் கைக்கொண்டு வருகின்றனர். பௌத்த மதம், பணம், பட்டம், பதவி போன்ற ஆசைகளை நிராகரிக்கின்றது. பௌத்த துறவிகள் அவற்றை அறவே நாடக்கூடாது என்கிறது. இருப்பினும் அவர்களில் ஒரு தரப்பினர் அரசியலில் ஈடுபடவே செய்கின்றனர்.

பௌத்த மார்க்கத்தைத் தோற்றுவித்தவரான புத்தபிரான் அதனை ஒரு மதம் என்ற கட்டத்துக்குள் வரையறுக்கவில்லை. அவர் இந்துமதம் சார் அரச குடும்பத்திலிருந்து வந்தவர். அவர் சமுதாயத்தின் உயர் நிலையில் இருந்தவர்களைக் கவனத்திலெடுக்காது, கீழ்மட்டத்தில் புறக்கணிக்கப்பட்ட, நலிவுற்ற சாதாரண மக்களை மையப்படுத்தியே தனது போதனைகளை மேற்கொண்டிருந்தார்.



**இன, மதத் துவேசத்தை வளர்ப்பதில் பிக்குமார் தரப்பு அக்கறை**

பௌத்த தர்மம் பற்றிப் போதிப்பவர்கள், அண்மைக் காலமாக, சந்திக்குச் சந்தி புத்த பெருமானது சிலைகளை நிறுவுவதோடு, இனத்துவேசத்தையும் தூண்டி வருகின்றனர். அந்த வகையில் மட்டக்களப்பு மங்களராம விகாரைக்குப் பொறுப்பான சுமணரத்தின தேரர், பொதுபலசேனாவைச் சேர்ந்த ஞானசாரதேரர், நயினாதீவிலுள்ள சின்னசாது என்ற தேரர் ஆகியோர் இதற்கு விதிவிலக்கல்ல. தீவிரவாதப் போக்குடைய இத்தகைய பிக்குமாருக்கு வசதி வாய்ப்புக்களும் பிரபல்யமும் தேவையாக உள்ளன.

பௌத்த மத பீடங்களுடன் அரசியல் அதிகாரமும், மதமும் பின்னிப்பிணைந்து இருப்பதனால், எமது நாடு அதிலிருந்து மீளவே முடியாது தவிக்கிறது. மதத்தின் பெயரால் ஏனைய மக்களை ஒடுக்கும் அரசியலுக்கு, முண்டு கொடுக்கும் பௌத்த துறவிகள் பௌத்த மார்க்கத்துக்கு மாறுபட்ட வகையிலேயே செயற்படுகின்றனர்.

சுதந்திரக்கட்சியை நேசித்த பிக்குமாரால் 1956ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 11 ஆம் திகதி கொழும்பு ஆனந்த வித்தியாலயத்தில் வைத்து சிறிலங்கா பௌத்தசங்கமும், அகில இலங்கை பிக்கு சமித்தி சம்மேளனமும் இணைந்து ஐக்கிய பிக்குகள் முன்னணி ஆரம்பிக்கப்பட்டது. இவ்விரு அமைப்புகளதும் பிரதிச் செயலாளராக விருந்த "புத்த ரக்கித்த தேரர்" என்பவரே அப்போதைய பிரதமராக இருந்தவரான எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டார நாயக்காவைச் சுட்டுக் கொன்றிருந்தார்.

1956 ஆம் ஆண்டு மார்ச் 3 ஆம் திகதி ஐக்கிய பிக்கு முன்னணியால் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்துக்கு முதன்மை அதிதியாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் பண்டாரநாயக்கா அழைக்கப்பட்டிருந்தார். அந்தக் கூட்டத்தில் தாம் பதவிக்கு வந்தால், தனிச் சிங் களச் சட்டத்தைக் கொண்டு வருவ தாக அங்குள்ள பிக்குகளுக்கு வாக் குறுதி அளித்திருந்தார் பண்டாரநாயக்கா.

1956 ஆம் ஆண்டு சுதந்திரக்கட்சி பொதுத்தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சி அமைப்பதற்கு பௌத்த அமைப்புகள் வழங்கிய ஆதரவு, மிக முக்கியமானதாக அமைந்தது.

இவ்வமைப்புகள் யாவும் பேரினவாத நடவடிக்கைகளில் தீவிரமாகப் பங்கேற்றிருந்தன.

ஆட்சியமைக்கும் சகல தரப்புக்களும், பௌத்த பிக்குமாருக்கு கௌரவமும், மரியாதையும் கொடுக்கப் பின்நிற்பதில்லை.

**மதத்தை முன்னிலைப்படுத்தி தமிழினத்தை நலிவுறச் செய்யும் முயற்சி**


1972 ஆம் ஆண்டு அரசமைப்பின் மூலம் பௌத்த மதத்துக்குக் கொடுக்கப்பட்ட முன்னுரிமை, பௌத்தமத அரசியலை உறுதி செய்ததுடன் பலத்தையும் கொடுத்திருந்தது. தமிழர் தாயகத்தில் சிங்கள பௌத்த விகாரைகளையும், புத்தர் சிலைகளையும் அமைத்து, தமிழர்களின் தாயகப் பிர தேசம் என்ற குறியீட்டை நிரந்தரமாக அழித்துவிடுவதே இந்தப் பிக்குமார் தரப்பின் எதிர்பார்ப்பாகும். அது மட்டுமன்றி தமிழர்களின் பூர்வீக நிலங்களைச் சிங்கள பௌத்த மயமாக்கும் திட்டங்களை, இராணுவ பின்புலத்துடன் மேற்கொள்ள முன்னின்று செயற்படுகின்றனர்.


தமிழர் பிரதேசங்களில் புத்தர் சிலைகளை இவர்கள் அமைப்பதன் மூலம் தமது கலாசாரம் அழிக்கப்பட்டுத் தமிழர்கள் என்றொரு இனம் இங்கு வாழ்ந்ததில்லை என வரலாற்றில் பதிவாகும் என்ற அச்சம் தமிழ் மக்கள் மத்தியில் தோன்றியுள்ளது.

பிக்குமார்களின் இனரீதியான அத்துமீறல்கள், நல்லாட்சி அரசின் காலத்தில் மோசமடைந்து வருவதை இவ்வரசு தடுத்து நிறுத்தாமலிருப்பது தமிழர்களை மட்டுமன்றி முஸ்லிம்களையும் நல்லாட்சி அரசின் மீது நம்பிக்கை இழக்க வைத்து வருகின்றது.

இந்த வருடத்திலும் தமிழ் மக்கள் செறிந்து வாழுகின்ற வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பிக்குமார் திட்டமிட்டு மேற்கொள்கின்ற விகாரைகளை நிறுவுதல்,புத்தர் சிலைகளை அமைத்தல் என்பவற்றை இன நல்லிணக்கம் பற்றி பேசுகின்ற நல்லாட்சி அரசு இன்று வரையில் தடுத்து நிறுத்தவுமில்லை, வைத்த சிலைகளை அகற்ற நடவடிக்கை எடுக்கவுமில்லை. நயினாதீவு கடற்பரப்பில் அங்குள்ள பௌத்த விகாராதிபதி புத்தர் சிலையை நிறுவுவதற்கு முயற்சி செய்தல், திருகோணமலை, யாழ்ப்பாண வீதியில் ஆத்திமோட்டை என்ற இடத்தில் புத்தர் சிலை நிறுவப்பட்டமை,அம்பாறை மாவட்டத்திலுள்ள மிகவும் தொன்மை வாய்ந்த கிராமமான இறக்காமம் மாணிக்க மடுவில் நிறுவப்பட்டுள்ள புத்தர் சிலை , முல்லைத் தீவு மாவட்டத்தில் நிறுவப்பட்டுள்ள புத்தர் சிலைகளும், விகாரைகளும் கிண்ணியா பாலத்துக்கு அருகிலும் புத்தர் சிலை நிறுவப்பட்டிருப்பதும், வில்லங்கமான பிரச்சினைகளா கவே தமிழ் மக்களால் நோக்கப்படு கின்றது.

நல்லாட்சி அரசில் தமிழ் மக்கள் தமக்கான தீர்வை எதிர்பார்த்துள்ள நிலையில், பிக்குமாரது பௌத்த ஆதிக்கத்தை விரிவாக்கும் நடவடிக்கைகளும், ஒருசில பிக்குமாரது அடாவடித்தனமான நடவடிக்கை களும் நீண்டு செல்லுமாக இருந்தால் , தமிழர்களின் இலக்கு நோக்கிய அரசியல் என்பது பிக்குமாரது அரசியலுக்குள் மூழ்கிவிடும். ஏனென்றால் பௌத்த அடிப்படைவாதம், பௌத்த மேலாதிக்கப்போக்கு தமிழர்களை மட்டுமன்றி முஸ்லிம்களையும் மிரள வைத்துள்ளது.





# வாசகர் திருமுகம்

## நகராட்சி மன்றம் நடவடிக்கை எடுக்குமா?

இன்று எமது இளம் தலைமுறையினர் மத்தியில் மதுப்பாவனைப் ப்ழக்கம் அதிகரித்து வருவதால் எமது இனத்துக்கான பாரம்பரிய கலாசார நிலை கேள்விக்குறியாக ஆகியுள்ளது.

அந்த வகையில் சாவகச்சேரி நகராட்சி மன்ற சந்தைக் கட்டடத் தொகுதியில் அமைந்துள்ள கழிப்பறையை மது அருந்துவதற்கான தமது மறைவிடமாக மது அருந்துவோர் பயன்படுத்தி வருகின்றனர். நாற்றமெடுக்கும் இந்த இடத்தில் வைத்து மதுபானம் அருந்தும் செயற்பாடு அருவருக்கத் தக்கதொன்று. இங்கு கடமை புரியும் ஊழியர்கள் இது குறித்துக் கண்டும் காணாத போக்கில் நடந்து கொள்வதால், கழிப்பறையைத் தேவை கருதிப் பயன்படுத்த முனைவோரும் சிரமத்துக்கு உள்ளாக நேரிடுகிறது. சில சந்தை வியாபாரிகளும் கழிப்பறையைத் தமது மது பாவனைக்கான மறைவிடமாகப் பயன்படுத்துகின்றனர். நகராட்சி மன்றச் செயலாளர் இது குறித்துக் கவனமெடுத்து இத்தகைய அநாகரிக, சட்ட விரோத செயற்பாட்டைத் தடுத்து நிறுத்த வேண்டுமெனக் கோரி நிற்கின்றோம்.

*நலன்விரும்பிகள்*
*சாவகச்சேரி*

## சிரமங்களை வெளிப்படுத்தி உதவியதற்கு நன்றி

புதுக்குடியிருப்பு பிரதான வீதியிலிருந்து பேராறு, பண்டாரவன்னி கிராமங்கள் ஊடாக முல்லைத்தீவு பிரதான வீதியைச் சென்றடையும் வீதியிலுள்ள விரால்மடு ஆறு மற்றும் குருவிச்சை ஆறு என்பவற்றில் மழைகாலங்களில் வெள்ளப் பெருக்கு ஏற்படுவது வழக்கமானதொன்று. அத்தகைய வெள்ளப் பெருக்கு ஏற்படும் சந்தர்ப்பங்களில் நாம் எமது இடங்களிலிருந்து பாதுகாப்புக் கருதி வெளியேற இயலாத நிலை ஏற்படுவதால், பல தரப்பட்ட சிரமங்களுக்கு உள்ளாகி வந்தோம். குறித்த ஆறுகளைப் புனரமைப்புச் செய்து வெள்ளப் பெருக்கு ஏற்படாது செய்து தருமாறு உதயன் பத்திரிகையூடாக கோரிக்கை முன்வைத்தோம். அதற்கமைய ஒரு ஆற்றின் கரைகள் ஏற்கனவே புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன. மற்றைய ஆற்றின் புனரமைப்பு வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

எமது வேண்டுகோளைச் செயலுருப் பெற வைப்பிக்கும் விதத்தில் குறித்த எமது சிரமநிலை குறித்து உதயன் பத்திரிகை விரிவான விதத்தில் செய்தி வெளியிட்டு உதவியமைக்காக எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

*பேராறு, பண்டாவன்னி*
*கிராம மக்கள்*

# அழகானவர் யார்?



ஓரிடத்தில் இருந்த எலி, முயல், குரங்கு, வெட்டுக்கிளி ஆகியவை ஒன்றுடன் ஒன்று நன்றாகப் பழகி வந்தன. ஆனாலும் அவைகளுக்குள் அழகு குறித்து அடிக்கடி விவாதங்கள் எழும். ஒவ்வொன்றும் தன் பெருமையைப் பறைசாற்றும் விதத்தில் பேசும். முயல் மட்டும் மௌனமாக இருக்கும்.

“நம் நால்வரில் நான் தான் மிக அழகு! மனிதர்கள் கூட எங்கள் இனத்திலிருந்துதான் தோன்றியதாகச் சொல்வார்கள்!” குதித்துக் குதித்து நடன மாடியபடி சொல்லியது குரங்கு.

“நாங்கள் மனிதர்களின் வீட்டுக்குள்ளே புத்திசாலித்தனமாக ஒளிந்து வாழ்கிறோம்! எங்களிடம் அழகும் அறிவும் இருக்கிறது. எனவே நான்தான் அழகு தேவதை!” என்றது எலி.

“மனிதர்கள் திட்டும்போது குரங்கு முகம், எலி முகம் என்று கூட உங்களைப் பற்றிக் கூறுவார்கள்! நான் சிறிய உருவமாக இருந்தாலும் கிளியின் நிறத்தில் அதைப் போன்றே அழகாக இருக்கிறேன்”! பெருமிதம் பொங்கக் கூறியது வெட்டுக்கிளி.

“நான் இந்த அழகுப் போட்டிக்கே வரவில்லை!” முயல் சொல்ல, மூன்றும் சேர்ந்து சிரித்தன. முயல் மெதுவாக அவ்விடத்தை விட்டு அகன்றது.

“என்ன இருந்தாலும் வெள்ளை வெளேரென்று முயல் ஓடி வரும் அழகே தனி தான்!” குரங்கு சொல்லியது.

“ஆமாம்... ஆமாம்...!” ஒப்புக் கொண்டது வெட்டுக்கிளி.

“நிறமும் அழகும் மட்டும் இருந்தால் போதுமா? அறிவு, புத்திசாலித் தனம் எல்லாம் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் அழகியாக ஏற்றுக்கொள்ள முடியும்” என்றது எலி.

“எனக்கொரு யோசனை தோன்றுகிறது! எமக்குள்ளே ஓர் அழகிப் போட்டி நடத்தினால் என்ன?” கேட்டது வெட்டுக்கிளி.

“போட்டி நடத்தலாம். ஆனால் நடுவர் யார்?” சந்தேகம் எழுப்பியது எலி.

“நடுவராக நானிருக்கிறேன்!” திடீரென்று ஒரு குரல் கேட்டது. அனைத்தும் மேலே பார்க்க, மரத்தின் மீது ஒரு காகம் இருந்தது.

“நீங்கள் எப்படி?” ஆச்சரியப்பட்டது குரங்கு.

“நீங்கள் மூவரும் பேசிக் கொண்டிருந்ததை நான் கேட்டேன். முயலையும் அழைத்துக் கொண்டு நாளை என் இருப்பிடம் தேடிவாருங்கள். ஆனால் நான் தேர்ந்தெடுப்பவரை அழகு ராணியாக அனைவரும் ஒரு மனதாக ஏற்றுக் கொள்ள வேண்டும்!” என்று காகம் கூறியது.

“அப்படியே செய்கிறோம்...” அனைத்தும் சேர்ந்து குரல் கொடுத்தன.

மறுநாள் அனைத்தும் அழகிய அழகு ராணி கனவில் மிதந்து காகத்தைத் தேடிப்போய்க் கொண்டு இருந்தன.

அப்பொழுது குருவி ஒன்று வலியால்துடித்துக்கொண்டிருந்தது. அதன் கால்களில் காயம் தெரிந்தது.

“எனக்கு எவராவது ஒருவர் உதவி செய்யுங்களேன். ஒரு சிறுவன் கல்லெடுத்து எறிந்து காலில் காயப்படுத்தி விட்டான்!” குருவி பலவீனமாக உதவி கேட்டது.

“நாங்கள் அழகிப் போட்டிக்குப் போய்க்கொண்டு இருக்கிறோம். அபசகுனமாகப் பேசாதே!” கடுமையாகக் கூறியது குரங்கு.

குருவியைப் பார்த்த எலியும், வெட்டுக்கிளியும் முகம் திருப்பிச் சென்றுவிட்டன. முயல் குருவி அருகே தயங்கி நின்றது. பின்னர் அவசர அவசரமாக மருந்து தேடிக் காலில் வைத்துவிட்டு அழகிப் போட்டிக்குச் சென்றது.

அழகிப் போட்டி தொடங்கியது. குறித்த நேரத்துக்கு முயல் மட்டும் செல்லவில்லை. மீதி மூன்றும் மனசுக்குள் மகிழத் தொடங்கின.

“அழகுக்கும் அறிவுக்கும் மதிப்பெண் போட்டுவிட்டேன். இனி உங்கள் நல்ல குணம் பார்த்து மதிப்பெண்கள் கொடுப்பேன்! இதற்குத்தான் அதிக மதிப்பெண் கள் ஒதுக்கி இருக்கிறேன்!” காகம் கூறியதும் குருவிக்கு உதவாத மூன்றும் ஒன்றையொன்று பார்த்துக் கொண்டன.

அப்பொழுது முயல் ஓடி வந்தது.

“முயல்தான் அழகு ராணி! இதை அழகு ராணியாகத் தேர்வு செய்வதற்காக நான் பெருமைப்படுகிறேன்! குருவி என் நண்பன் தான்! ஓர் ஆபத்திலிருந்து முயல் காப்பாற்றியதாக சற்று முன்பு குருவி கூறியது. அப்பொழுது மூவரும் உதவாமல் சென்றது பற்றியும் சொல்லி வருத்தப்பட்டது. உதவும் நல்ல மனசு உள்ளவர்கள்தான் உண்மையில் அழகானவர்கள்!” காகம் கூறியதும் எலி, வெட்டுக்கிளி, குரங்கு ஆகியவற்றின் முகங்கள் சுருங்கிப் போயின.

*நீதி – நாம் எவருக்காவது உதவி செய்தால் அது ஒரு நாள் எமக்கு எதிர்பாராத பயனைத் தரும்.*

## சர்வதேச தினங்கள்

**பெப்ரவரி**

02 - புனித வாழ்வுக்கான தினம்
சதுப்பு நிலதினம்
08 - பரிநிர்வாண நாள் - பௌத்த வழிபாட்டு நாள்
12 - டார்வின் நாள்
14 - காதலர் தினம்
21 - தாய் மொழிகள் தினம்
24 - கலால் வரி தினம்
28 - அறிவியல் தினம்

(தொடரும்)



## அறிவோமா நாம்

- எது மதிப்புக்கு மூலம்
  எதையும் எவரிடமும் கேட்காமல் இருப்பது.
- எது துக்கம்
  மனநிறைவு இல்லாமல் இருப் பது.
- எதை உயர்ந்த வாழ்வென்று சொல்வது
  குற்றங்கள் புரியாமல் வாழ்வது.
- எவை தாமரையிலை மேல் தண்ணீரைப்போல நிலையில்லாதவை
  இளமை, செல்வம், ஆயுள் போன்றவை.
- எவர் சந்திரனுடைய ஒளியைப் போல்பிறருக்குஇன்பம்தருவார்கள்
  நல்லவர்கள்.
- எது சுகமானது
  அனைத்தையும் தியாகம் செய்துவிட்டு பற்றின்றி வாழ்வது.
- எது இன்பம் தருவது
  நல்ல மனதுடையோர்களின் நட்பு.
- எது மரணத்துக்கு இணையானது
  அசட்டுத்தனம்.
- எதை விலை மதிப்பற்றதெனச் சொல்லலாம்
  காலமறிந்து செய்யும் உதவி.
- எது இறக்கும் வரை உறுத்தும்
  ரகசியமாகச் செய்த பாவம்.
- எவர் சாது
  ஒழுக்கமான நடத்தை உள்ளவர்.
- எவரால் உலகத்தை வெல்ல முடியும்
  சத்தியமும், பொறுமையும் உள்ளவரால்.
- எவர் நண்பன்
  பாவ வழியில் போகாமல் தடுப்பவன்.

## இலங்கையின் 25 மாவட்டங்கள்


1. கொழும்பு 2. கம்பகா 3. களுத்துறை
4. கண்டி 5. மாத்தளை 6.நுவரெலியா
7.காலி 8.மாத்தறை 9.அம்பாந்தோட்டை
10.யாழ்ப்பாணம் 11.மன்னார் 12.வவுனியா
13.முல்லைத்தீவு 14.கிளிநொச்சி 15.குருநாகல்
16.மட்டக்களப்பு 17.அம்பாறை 18.கேகாலை
19. திருகோணமலை 20. புத்தளம்
21. அனுராதபுரம் 22. பொலன்னறுவை
23. பதுளை 24. மொனராகலை
25. இரத்தினபுரி

## வர்ணம் தீட்டுவோம் வாங்க....

உயர்ந்த எண்ணங்களை உடையோர்
ஒருநாளும் தனித்தவராகார்.

- காந்தியடிகள்





## வரலாற்றில் இன்றைய தினம்

1994 - காமினி கட்சி முழுமையாக ஐ.தே.கவுடன் இணையும் என ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் பொதுச் செயலாளர் ஜி.எம்.பிரேமச்சந்திரா கூறுகின்றார்.

1995 - பாப்பரசரின் சமய ஆராதனையில் 3 லட்சம் பேர் திரண்டனர்.

2004 - காணாமற் போனோர் தொடர்பான ஆள் கொணர்வு மனு விசாரணையில் அரசுக்கு காலஅவகாசம் வழங்கப்பட்டது.


2006 - கடவுச் சீட்டை வழங்கும் அதிகாரம் பிரதேச செயலர்களிடம் ஒப்படைப்பு.

2008 - யாழ். பல்கலைக்கழக வளாகத்தினுள் இளைஞன் சுடப்பட்டு உயிரிழந்தார்.

## நாளை தை-09

ஞாயிற்றுக்கிழமை -22.01.2017
திதி: தசமி மு.இ.11.24
நட்சத்திரம்: விசாகம் பி.ப. 12.38
ராகுகாலம்:05.05-06.35 வரை
சுபநேரம்:09.35-11.05 வரை

| ஜனவரி | 2017 | | JANUARY | | |
|---|---|---|---|---|---|
| SUN | 1 | 8 | 15 | 22 | 29 |
| MON | 2 | 9 | 16 | 23 | 30 |
| TUE | 3 | 10 | 17 | 24 | 31 |
| WED | 4 | 11 | 18 | 25 | |
| THU | 5 | 12 | 19 | 26 | |
| FRI | 6 | 13 | 20 | 27 | |
| SAT | 7 | 14 | 21 | 28 | |



# ஜனவரி மாத ராசி பலன்

## மேடம்

எதைப் பற்றியும் கவலைப்படாமல் நடப்பது நடக்கட்டும், எல்லாம் அவன் செயல் என்று எண்ணும் மேட ராசியினரே! இந்தக் காலகட்டத்தில் ராசிநாதன் செவ்வாய் லாபஸ்தானத்தில் இருந்து விரய ஸ்தானத்துக்கு மாறுகிறார். மறைந்திருந்தாலும் அவர் குரு சாரம் பெற்றிருப்பதால் சுப பலன் உண்டாகும்.

எந்த ஒரு வேலையையும் மனத் திருப்தியுடன் செய்வீர்கள். புத்தி சாதுரியமும், வாக்கு வன்மையும் அதிகரிக்கும். முக்கிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும். ராசிக்கு 10 இல் சூரியன் இருக்கிறார். அவரைக் குரு பார்க்கிறார். பணவரவு அதிகமாகும். தொழில் ஸ்தானத்தை பூர்வ புண்ணியாதிபதி சூரியன் அலங்கரிக்கிறார். தொழில் ஸ்தானத்தைக் குரு பார்க்கிறார். தொழில், வியாபாரத்தை மாற்றலாமா என்ற எண்ணம் உண்டாகும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் இடமாற்றம், பதவி உயர்வு கிடைக்கப் பெறுவார்கள்.

குடும்ப ஸ்தானத்தை குரு, சனி பார்க்கிறார்கள். குடும்ப உறுப்பினர்களுக்குத் தேவையானவைகளை வாங்குவீர்கள். கணவன், மனைவிக்கிடையே இருந்து வந்த கருத்து வேற்றுமை குறையும். உங்களைப் பற்றி யாராவது வீண் அவதூறு பேசினால் கண்டுகொள்ளாமல் ஒதுங்கி விடுவது நல்லது. விருந்து, கேளிக்கை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு ருசியான உணவை உண்பீர்கள். பெண்கள் எந்த ஒரு வேலையையும் மனதிருப்தியுடன் செய்வீர்கள். சாமர்த்தியமான பேச்சின் மூலம் காரிய வெற்றி உண்டாகும். பணவரத்து கூடும். கலைத்துறையினர் மனதில் திடீர் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். வாகனங்களில் செல்லும் போதும் வெளியூர்களுக்குச் செல்லும் போதும் கூடுதல் கவனம் தேவை. சூரியனின் சஞ்சாரத்தால் முன் கோபம் ஏற்பட்டு அதனால் வீண் தகராறு ஏற்படலாம். நூதானமாகச் செயற்படுவது நல்லது. அரசியல் துறையினருக்கு வளர்ச்சி பெற மிகவும் கவனமாக இருப்பது நல்லது. செலவைக் குறைப்பதன் மூலம் பணத் தட்டுப்பாடு குறையலாம். பேச்சில் கடுமையைக் காட்டாமல் இருப்பது நன்மை தரும். மேலிடத்தின் மூலம் மனம்மகிழும் படியான சூழ்நிலை உருவாகும். நண்பர்கள் உறவினர்களுடன் கவனமாகப் பேசிப் பழகுவது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டாகும். விளையாட்டு மற்றும் போட்டிகள் சாதகமான பலன் தரும். சக மாணவர்களின் ஒத்துழைப்பும் இருக்கும்.

**பரிகாரம்:**
செவ்வாய்க் கிழமையில் முருகனுக்கு தீபம் ஏற்றி வணங்கி கந்தர் சஷ்டி கவசம் படிக்க எல்லா பிரச்னைகளும் தீரும். காரிய வெற்றி உண்டாகும்.

## இடபம்

உலக அனுபவ ஞானம் உடைய இடப ராசியினரே! நீங்கள் கொடுத்த வாக்கைக் காப்பாற்றப் பாடுபடுவீர்கள். இந்தக் காலகட்டத்தில் ராசிநாதன் சுக்கிரன் பத்தாமிடத்தில் சஞ்சாரம் செய்கிறார். எதிலும் சாதகமான பலன் கிடைக்கும். கடுமையான முயற்சிகள் மேற்கொள்வது குறையும். வீண் வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. எதிர்பாராத செலவு உண்டாகும். ராசியை சனி பார்ப்பதால் உடற்சோர்வு உண்டாகலாம். ராசிக்கு 9 இல் சுகாதிபதி சூரியன் இருப்பதால் பூர்வீகச் சொத்துகள் மூலம் வரும் வருமானம் தாமதப்படும். திருமணம் தொடர்பான முயற்சிகளில் சாதகமான நிலை இருக்கும்.

தொழில் ஸ்தானத்தில் ராசிநாதன் சுக்கிரன் கேதுவுடன் இணைந்து சஞ்சாரம் செய்கிறார். தனஸ்தானத்தை தனாதிபதி புதன் பார்க்கிறார். தொழில், வியாபாரம் தொடர்பான காரியங்களில் எதிர்பாராத தடை ஏற்பட்டு நீங்கும். பணவரத்து அதிகரிக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது. அலுவலகம் தொடர்பான பணிகள் தாமதப்படும். எதிலும் கவனம் தேவை. குடும்ப அதிபதி புதன் தனது ஏழாம் பார்வையால் குடும்ப ஸ்தானத்தைப் பார்க்கிறார். குடும்பத்தில் இருப்பவர்களுடன் வீண் வாக்குவாதங்களைத் தவிர்த்து சாதாரணமாகப் பேசுவது நல்லது. வாழ்க்கைத் துணையுடன் இருந்த மனஸ்தாபங்கள் விலகும். நண்பர்கள், உறவினர்கள் வருகை இருக்கும். பிள்ளைகள் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

பெண்கள் வீண் வாக்கு வாதங்களைத் தவிர்ப்பது நல்லது. கடும் முயற்சிகள் பலன் தரும். செலவு அதிகரிக்கும். கலைத்துறையினர் எந்த விவகாரத்தில் சிக்கினாலும் சாமர்த்தியமாக மற்றவரை முன் நிறுத்திதான் தப்பித்துக் கொள்ள வேண்டி வரும். ராசிநாதன் சுக்கிரனின் சஞ்சாரத்தால் நல்ல பலன்களே வரும். எதிர்பார்த்த பணம் வந்து சேரும். விருந்து கேளிக்கை நிகழ்ச்சிகளில் பங்கேற்க நேரிடும். சாதுரியமான பேச்சின் மூலம் காரிய வெற்றி கிடைக்கும். அரசியல் துறையினருக்கு வளர்ச்சியில் இருந்த முட்டுக் கட்டைகள் நீங்கும். பயணங்கள் செய்ய நேரலாம். பணவரத்து திருப்தி தரும். கடினமாக உழைக்க வேண்டி இருக்கும். அதன் மூலம் நல்ல பலன்கள் கிடைக்கப் பெறுவீர்கள். மேலிடத்தின் கனிவான பார்வை உங்கள் மீது விழும். மாணவர்களுக்கு படிப்பில் கவனம் செலுத்துவீர்கள். மேற்படிப்பு படிக்கும் ஆர்வம் உண்டாகும். கல்விக்குத் தேவையான உதவிகள் கிடைக்கும்.

**பரிகாரம்:**
வெள்ளிக்கிழமைகளில் மகாலட்சுமியை தீபம் ஏற்றி வழிபட்டு வர செல்வம் சேரும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

# பலத்த எதிர்பார்ப்புக்களுடன் டொனால்ட் ட்ரம்பின் வரவு

உலகின் மிகப் பெரும் வல்லரசான அமெரிக்காவின் 45ஆவது அதிபராக டொனால்ட் ட்ரம்ப் நேற்றுப் பதவியேற்றார்.

புதிய அமெரிக்க அதிபராக ஒருவர் பதவி ஏற்கிறார் என்றால் அமெரிக்காவே விழாக்கோலம் பூணும். புதிய அதிபரை வாழ்த்த நாடு முழுவதிலும் இருந்து வந்து மக்கள் வொஷிங்டனில் குவிவது வழக்கம். எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் பராக் ஒபாமாவின் பதவி ஏற்பு நிகழ்வுக்கு ஏறத்தாழ 18 லட்சம் பேர் கூடியிருந்தார்கள்.

ஆனால், அதிபராக டொனால்ட் ட்ரம்ப் பதவி ஏற்கும் போது நிலைமை தலைகீழாக மாறி இருக்கிறது. அவருக்கு எதிர்ப்புகளே அதிகம் கிடைத்தன.

தேர்தலில் கருத்துக்கணிப்பு, வாக்குக்கணிப்பு நடத்துவதுபோல, அமெரிக்காவில் அதிபர்கள் பதவி ஏற்கும்போது, மக்களிடம் அங்கீகாரக் கணிப்பு நடத்துவார்கள். புதிய அதிபர் குறித்த எதிர்பார்ப்பு மக்கள் மத்தியில் எப்படி இருக்கிறது, எந்த அளவுக்கு அவர் மக்களின் மனதில் நம்பிக்கை ஏற்படுத்தி இருக்கிறார் போன்றவற்றை இந்த அங்கீகாரக் கணிப்பு பிரதிபலிக்கும். பில் கிளிண்டனுக்கு 68 வீதம், ஜார்ஜ் புஷ்ஷுக்கு 61வீதம், பராக் ஒபாமாவுக்கு 83 வீதம் என மக்களின் அங்கீகாரம் கிடைத்திருந்தது.

இப்போது அதிபர் டொனால்ட் ட்ரம்புக்கு மக்களின் அங்கீகாரத்தைவிட எதிர்ப்பு மனநிலைதான் அதிகமாகக் காணப்படுகிறது. 44வீதமானவர்கள் அவர் அதிபராவதை அங்கீகரித்திருக்கிறார்கள். அதாவது 56 வீதமானவர்கள் எதிர்க்கிறார்கள். அவர்மீது நம்பிக்கை வைக்க மறுக்கிறார்கள்.

முன்னாள் அமெரிக்க அதிபர் பராக் ஒபாமாவின் எட்டாண்டு வெள்ளை மாளிகை வாசம் வியாழக்கிழமையுடன் முடிவுக்கு வந்தது. அமெரிக்காவின் 44ஆவது அதிபராக, மிகவும் சிக்கலான பன்னாட்டுச் சூழலில், எட்டாண்டுகள் பதவி வகித்த பராக் ஒபாமா, விடைபெறும்போது, அவருடன் வெள்ளை மாளிகையிலிருந்து பல ஜனநாயகப் பண்புகளும் விடைபெற்று விடக்கூடாது என்கிற அச்சம் நடுநிலையாளர்களிடம் எழுகிறது.

அதிபர்கள் மாறினாலும், அயலுறவுக் கொள்கையில் அமெரிக்கா இதுவரை தடாலடி மாற்றங்களை எதிர்கொண்டதில்லை. இலங்கை விடயத்தில் ஒபாமா நிர்வாகம் கையாண்ட அயலுறவுக் கொள்கையை ட்ரம்ப் தொடர்வாரா? என்பது பலரது எதிர்பார்ப்பாக உள்ளது.

ஆனால் ட்ரம்ப் அதிபராவது இலங்கைக்குச் சாதகமாக அமையும் என்று அரசுத் தலைவர் மைத்திரிபால சிறிசேனவும் முதன்மை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர். இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்களுக்கு, வெளிநாட்டு நீதிபதிகளின் பங்களிப்புடனான நீதி விசாரணைக்கு ஐ.நா. மனித உரிமைகள் சபை பரிந்துரைத்தது. இந்தத் தீர்மானத்தை இலங்கையின் இணை அனுசரணையுடன் அமெரிக்காவே மனித உரிமைகள் சபையில் முன்வைத்தது.

தற்போது அந்தத் தீர்மானத்திலிருந்து இலங்கையை விடுவிக்குமாறு அமெரிக்க அதிபர் ட்ரம்பிடம் கோரவுள்ளதாக அரசுத் தலைவர் மைத்திரிபால சிறிசேன தனது கட்சியினரிடம் தெரிவித்திருந்தார். எனினும் ட்ம்ரப் எவ்வாறு செயற்படுவார் என்பதைப் பொறுதிருந்துதான் பார்க்க வேண்டும்.

எதிர்பாராதவிதமாக அமெரிக்க அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பதவி ஏற்றிருக்கும் டொனால்ட் ட்ரம்ப், எவர் மீதும் தனது வெறுப்பு அரசியலைக் கைவிட்டு அனைவரையும் அரவணைத்துச் செல்வாரா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்!



மதுரகவி காரை
எம்.பி. அருளானந்தன்

# இறையின்பம் பெற்றால் இவ்வுலகில் வாழ்வாங்கு வாழலாம்



இறைவனுடைய திருவுருவத்தை கோயிலில் நாம் தரிசித்து இன்புறுகிறோம். கண்ணால் கண்டு இன்புறுவதோடு நின்றால் போதாது. அவனுடைய திருவுருவத்தை உள்ளத்தே வைத்து வழிபட வேண்டும். இறைவனை வழிபடும் முறைகள் படிப்படியாக உயர வேண்டும். அந்தப்படிகள் நான்கு. அவற்றை சரியை,கிரியை, யோகம், ஞானம் என்று கூறுவார்கள். இறைவனுடைய திருக்கோயிலைத் தரிசித்தல், வலம் வருதல், பூசையைக் கண்டு மகிழ்தல் முதலியவை சரியையின் பாற்படும். நாமே பூசித்து வழிபடல் கிரியையாகும். உள்முகத்தே அவனைத் தியானித்து இன்புறல் யோகமாகும். மெய் இது என்றும் பொய் இது என்றும் தேறித் தெளிதல் ஞானமாகும்.

ஒரு படியில் இருந்து அடுத்த படிக்குப் போக வேண்டும். ஒரு படியிலேயே நின்று கொண்டிருப்பதால் பயன் இல்லை. மேலே சொன்ன நான்கு படிகளில் புறத்தே அமைவன சரியையும் கிரியையும். அகத்தே அமைவன யோகமும் ஞானமும். புறத்தே செய்யும் வழிபாட்டோடு நின்று விட்டால் இலைகள் தளைத்த மரம், பூக்காமல் இருப்பதுபோல இருக்கும். அல்லது அரும்பாகிப் பிறகு பூவாகி உதிர்ந்து போவது போன்றது என்றும் சொல்லலாம். காயாகிக் கனிந்தால் தான் முழுப்பயனும் உண்டாகும், இந்த நான்கையும் அரும்பு, மலர், காய், கனி என்றே தாயுமானவர் கூறுவார். கனிமரத்தில் அரும்பும், பூவும் வந்தால் போதுமா? மாமரம் அரும்புகிறது, மலர்கிறது, அந்த மலருக்கு ஒரு வகை மணம் இருக்கிறது. வண்டுகள் அந்த மலர்த்தேனை உண்ணுகின்றன. மாமரம் வைத்து வளர்ப்பதற்குப் பயன் மாம் பூவைப் பெறுவதுதானா? பூக்கள் உதிர்ந்து வடு உண்டாகும். வடு முதிர்ந்து காய் ஆகும். காய் முதிர்ந்து கனியாகும். தேமா மரமானால் நல்ல இனிய பழம் பழுக்கும். தேமாங்கனி பெறுவது தான் அம்மரத்தை வளர்ப்பதற்குப் பயன். இந்த உடம்பை இறைவன் தந்திருக்கிறான். உள்ளத்தையும் தந்திருக்கிறான்.

வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவன் அவன். இவற்றைக் கொண்டு ஒவ்வொரு படியாக ஏறவேண்டும். புறமுக வழிபாடாகிய சரியையில் தொடங்கிக் கிரியையில் ஈடுபட்டுப் பிறகு உளமுக வழிபாடாகிய யோகத்தில் புகவேண்டும். அதிலிருந்து ஞான நிலையை அடைய வேண்டும்.

மனதில் உள்ள தடுமாற்றத்தை-அலையும் தன்மையை மாற்றினால் தான் இன்பம் உண்டாகும். அதை மாற்ற இறைவனைத் தியானிக்க வேண்டும் அதுவே யோகம்.

சித்தத்தின் விருத்தியை இல்லாமற்செய்வதே யோகம். அதற்குச் சித்தத்தில் இறைவனை அமர்த்த வேண்டும். அவன் உள்ளே ஆடத் தொடங்கினால் மனம் ஆடுவது அடங்கி விடும். ஒரு மிட்டாய்க் கடைக்கு ஏழை ஒருவன் போகிறான். அங்கே அலுமாரிகளில் வகைவகையாக அடுக்கி வைத்திருக்கும் மிட்டாய்களைப் பார்க்கிறான். அவன் கையில் காசு இல்லை. அவன் நாவில் நீர் ஊறுகிறது. ஆனால் மிட்டாயை வாங்கி உண்ண முடியவில்லை. அங்கிருந்து வெளியே வரும் போது தன் நிலைக்கு இரங்கி அவன் கண்ணிலும் நீர் ஊறுகிறது.

கையில் பணம் உள்ளவன் அவற்றை வாங்கி உண்டு மகிழ்வான். அதற்காகவே மிட்டாய்க் கடைக்காரன் அவற்றை நாலுபேர் காணும்படி வைத்திருக்கின்றான்.

திருக் கோயில்களில் உள்ள திருவுருவம் அந்த மிட்டாயைப்போன்றதே. இறைவனைப் புறக் கண்ணால் கண்டு வந்தால்போதாது, உட்கொள்ள வேண்டும். மிட்டாயை உட்கொள்வதுபோல உட்கொள்ள வேண்டும். அப்போதுதான் அதன் சுவை தெரியும். முகக் கண்ணால் பார்ப்பது போதாது. அகக்கண்ணால் பார்க்க வேண்டும். அப்போது தான் ஆனந்தம் உண்டாகும். இறையின்பமே நிலையின்பம். “அரிது அரிது மானிடராதல் அரிது” என ஔவைசொல்லியிருக்கிறாள். அந்தபுனிதமான மானிடப் பிறவியை பெற்ற நாம் இவ்வுலகில் நிறைவான இறையனுபவங்கள் நிறைந்த ஆன்மிக வாழ்வை அமைத்துக் கொண்டால் வாழ்வாங்கு வாழ முடியும்.

பா.பாலாஜினி

# பொறுப்புணர்வு

பொறுப்புணர்வு என்பது மனித வாழ்வோடு நெருங்கிய ஒரு விடயமாகும். மனிதன் ஒரு சமூக விலங்கு. எந்த மனிதனாலும் தனித்து வாழ்ந்துவிட முடியாது.ஒவ்வோர்மனிதனும் இன்னொருவரில் தங்கியே வாழ முடிகின்றது. அந்த வகையில் நோக்கும் போது, குடும்பத்திலும் சரி, சமூகத்திலும் சரி அவரவர் வகிக்கின்ற பொறுப்புக்கு ஏற்ப ஒவ்வோர் மனிதனுக்கும் ஒவ்வோர் பொறுப்போ அல்லது பல பொறுப்புக்களோ உண்டு. அந்தப் பொறுப்புக்களை நிறைவேற்றுவது நம் ஒவ்வொருவரினதும் கடமை ஆகும். இப்படியான பொறுப்புணர்வு என்பது மனிதருடைய சுதந்திரம் மற்றும் நடத்தை ஆகியவற்றோடு தொடர்பு பட்டது. ஒவ்வொரு மனிதனும் தனது எண்ணம், உணர்வு, நடத்தை, ஆகியவற்றுக்கு, தானே பொறுப்புக் கூற வேண்டும் என உணர்வதே பெரிய விடயமாகும். அப்படியான பொறுப்புக்களை உணர்ந்த மனிதர்களை அரிதாகவே வாழ்வில் காண முடிகின்றது.

சமூகத்தின் அடிப்படை அலகு குடும்பமாகும். குடும்பத்தில் தாய் தந்தை ஆகிய இருவருக்குமே பொறுப்புணர்வு உண்டு. அதில் இருந்து யாரும் விலகிக் கொள்ளமுடியாது. மகனுக்கு அன்பு பாசம், செல்வம், கல்வி என்பவற்றைக் கொடுத்து வளர்ப்பதோடு மட்டும் ஒரு தந்தையினுடைய பொறுப்பு முடிந்து போவதில்லை. அவனை சமூகம் மதிக்கின்ற ஒரு உயர்ந்த நிலைக்கு உயர்த்துவதே அவருடைய பொறுப்பாகும். அதைப்போல தாய்க்கும் பொறுப்புகள் இருக்கவே செய்கின்றன. தாய் தந்தை ஆகிய இருவரும் குடும்பத்தில் விவாகரத்துப் பெற்று விலகிச் சென்றுவிட்டால் குடும்பத்தில் பிள்ளையின் நிலை அதோ கதியாகி விடும். அவர்கள் இருவரினதும் பிரிவு காரணமாக பிள்ளையின் நிலை பாதிக்கப்பட்டால் அதற்கு தாய் தந்தை ஆகிய இருவருமே பொறுப்புக் கூறவேண்டியவர்களாக உள்ளனர். ஆனாலும் அதை யாருமே உணர்ந்து கொள்வதில்லை.

பொதுவாக சமூகத்தில் பொறுப்புணர்வு பற்றி எப்போது பேசப்படும் என்று அவதானித்திருக்கின்றீர்களா? எல்லாம் சரியாக நடக்கும் போது பொறுப்புணர்வு பற்றி யாருமே சிந்திப்பதில்லை. எங்கேயாவது தவறு நடக்கும் பட்சத்தில் தான், இதுக்கு யார் பொறுப்பு என்று சிந்திக்கத் தலைப்படுகின்றோம்.

இன்றைய கல்வி நடவடிக்கைகளை எடுத்துப்பாருங்கள். கல்வி இன்று போட்டி மயமாகி விட்டது. பாடசாலை, தனியார் வகுப்புக்கள், சிறப்பு வகுப்புக்கள் என்று பிள்ளைகள் ஓடி ஓடிப்படிக்கின்றார்கள். அந்தப் பிள்ளைகள் பரீட்சையில் சித்தியடைந்து உயர் புள்ளிகளைப் பெற்று விட்டால் பாடசாலை ஆசிரியர்களும் தனியார் வகுப்பு ஆசிரியர்களும் பெற்றோர்களுமாகச் சேர்ந்து தாம் தான் பொறுப்பு என்று கூறிப் பெருமைப்பட்டுக் கொள்கின்றார்கள். கஷ்டப்பட்டு கல்வி கற்ற மாணவர்களை யாருமே கருத்திற் கொள்வதில்லை. ஆனால் அந்தப் பிள்ளைகள் ஒருவேளை பரீட்சையில் சித்தியடையத் தவறிவிட்டாலோ அதற்கு யாருமே பொறுப்புக் கூற முன்வரமாட்டார்கள், ஒதுங்கிக் கொள்வார்கள், பிள்ளைகள் தான் படிக்கவில்லை என்று அவர்கள் மீதே பெரும் பழியைப் போட்டு விடுவார்கள்.

இப்படியாகத் தான் நாம் வாழ்கின்ற சமூகத்தில் எத்தனையோ நிகழ்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. பொறுப்புக் கூற வேண்டியவர்கள் எல்லோருமே ஒதுங்கிக் கொண்டு மற்றவர்கள் மீது பழி சுமத்தி விடுகின்றார்கள். இதனால் இன்றைய சமூகத்தில் எத்தனையோ பிரச்சினைகள் உருவாகி உள்ளன. இன்று எங்கள் பிரதேசத்தில் போதைப் பொருள் கடத்தலானது, மிக லாவகமான முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. எங்கள் இளைஞர்கள் எல்லோருமே தங்கள் கடமைகளை மறந்துவிட்டு போதையின் பாதையில் போய்க் கொண்டு இருக்கின்றார்கள். சமூகக் கட்டமைப்பையே சீர்குலைக்கின்றார்கள். இந்த விடயம் தவறு என்றும் இதை இல்லாது ஒழிக்க வேண்டும் என்றும் நாம் கூறிக் கொண்டு இருக்கின்றோமே தவிர, இதற்கு யார் காரணம், பொறுப்பு என்று நாம் சிந்தித்து இருக்கின்றோமா என்றால் நிச்சயமாக இல்லை என்று கூற வேண்டும் இப்படியான விடயங்களில் பொறுப்பானவர்களை இனங்கண்டு தண்டனை வழங்கினால் ஒழிய, இதை இல்லாமல் செய்ய முடியாதென்பதை நாம் முதலில் புரிந்து கொள்ள வேண்டும். இது எல்லாம் சரி இப்படியான பொறுப்புக்கூறல் என்கின்ற விடயமானது எவ்வாறு நம் மத்தியில் அறிமுகமானது, நாம் எவ்வாறு அதனைச் சிந்திக்கத் தொடங்கினோம் என்பதை இதுவரை யாரும் ஊகித்து இருக்கின்றீர்களா?



பொறுப்புணர்வு தொடர்பான எண்ணக்கருவானது முதன் முதலில் ஐரோப்பிய நாடுளிலேயே ஏற்பட்டது. ஐரோப்பிய நாடுகளில் 18ஆம்,19ஆம் நூற்றாண்டுக் காலப்பகுதி அளவில் மறுமலர்ச்சிகளும், புரட்சிகளும் தொடர்ச்சியாக ஏற்பட்டன. இவற்றின் விளைவாக பொறுப்புக் கூறல் என்ற கூற்று அந்த மக்கள் மத்தியில் சிந்திக்கப் பட்டது. அது தொடர்பான பல எண்ணக்கருக்களும் அவர்களால் உருவாக்கப்பட்டன. அந்தக்கருத்துக்களே படிப்படியாக ஏனைய ஐரோப்பிய மற்றும் ஆசிய நாடுகளில் பரவின. இன்று பொறுப்புணர்வு பற்றி எண்ணக் கருக்கள் எல்லா இடங்களிலும் பரவிய போது, அது சரியான முறையில் கடைப்பிடிக்கப்படுவதில்லை என்பதே மிகவும் வருத்தத்துக்குரிய விடயமாகும்.

20ஆம் நூற்றாண்டுக் காலப்பகுதியளவில் இந்தப் பொறுப்புணர்வை ஆய்வு செய்த தத்துவ ஆய்வியலாளர்கள் அது சுதந்திரம் மற்றும் தனிமனித நடத்தை ஆகியவற்றோடு தொடர்புபட்டுள்ளதாகக் கூறியுள்ளனர். அப்படியானால் பொறுப்புணர்வு என்பது மனிதனின் ஒழுக்கத்தோடு மட்டுமே சம்பந்தப்பட்ட விடயம் என்று நீங்கள் நினைக்கின்றீர்களா? நிச்சயமாக இல்லை. பொறுப்புணர்வு என்பது ஒழுக்கம் மற்றும் அறம் சார்ந்த அனைத்து நடவடிக்கைகளாலுமே இணைக்கப்பட்ட ஒரு விடயமாகும்.

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** உங்களின்வளர்ச்சிகண்டுபிறர்பொறாமை கொள்வர். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் அதிகரிக்கும். பணியாளர்கள் சுதந்திர மனப் பான்மையுடன் பணியாற்றுவர். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்க யோகமுண்டு.

**இடபம்:** நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக் கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப்பணி மேற்கொள்வீர்கள். லாபம் உயரும். பிள்ளை களின் வழியில் சுபவிடய பேச்சு நடந்தேறும். இஷ்ட தெய்வ வழிபாடு சிறப்பாக நிறைவேறும்.

**மிதுனம்:** பேச்சு, செயலில் நிதானத்தைக் கடை பிடிக்கவும். தொழில், வியாபாரத்தில் மிதமான வருமானம் கிடைக்கும். பணியாளர்கள் பணிச் சுமைக்கு ஆளாக நேரிடலாம். பெண்கள், ஆடம்பர எண்ணத்தை தவிர்ப்பது நல்லது.

**கடகம்:** எதிர்மறையாக இருந்த சூழல் விலகும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிக்கான புதிய வாய்ப்பு கிடைக்கும். சேமிக்கும் விதத்தில் வரு மானம் வரும். பணியாளர்கள் சலுகை கிடைக் கப் பெறுவர்.

**சிங்கம்:** வாழ்வில் இனிய அனுபவம் கிடைக்கப் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர் பார்த்த ஆதாயம் கிடைக்கும். பணியாளர்கள், சக ஊழியர்களின் அன்பைப் பெறுவர். புதிய வாகனம் வாங்க யோகமுண்டு.

**கன்னி:** நண்பரால் உதவி கிடைக்கப் பெறுவீர் கள். தொழில், வியாபாரத்தில் லாபம் மிதமாக இருக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். தாயின் தேவையை அறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**துலாம்:** பெருந்தன்மை மிக்கவராக விளங்கு வீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி இலக்கு பூர்த்தியாகும். எதிர்பார்த்ததை விட வருமா னம் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலைக்கும்.

**விருச்சிகம்:** கடந்தகால நற்செயலுக்கு பாராட்டு கிடைக்கும். தொழில், வியாபாரம் மிதமான வருமானம் கிடைக்கும். பணியாளர்கள் விண் ணப்பித்த கடனுதவி வந்து சேரும். பிராணி களிடம் விலகியிருக்கவும்.

**தனுசு:** நண்பரிடம் கருத்துவேறுபாடு உருவாக லாம். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் சுமா ராக இருக்கும். பணியாளர்கள், பணிச்சுமையை சந்தித்தாலும் வருமானம் கிடைக்கப் பெறு வர். ஆரோக்கியம் மேம்படும்.

**மகரம்:** புதிய முயற்சியில் ஈடுபட்டு வெற்றி காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் லாபம் பன்மடங்கு உயரும். பணியாளர்கள் அதிகாரி களின் பாராட்டைப் பெறுவர். விருந்து விழா வில் பங்கேற்பர்.

**கும்பம்:** நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக் கும். தொழில், வியாபாரத்தில் உழைப்புக்கேற்ப உயர்வு உண்டாகும். பணியாளர்களுக்கு விரும்பிய இடமாற்றம் கிடைக்கும். பெண்கள் வீட்டு உபயோகப்பொருள் வாங்குவர்.

**மீனம்:** மனதில் அடிக்கடி சோர்வு ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக் கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளா வர். மனைவியின் ஆறுதல் வார்த்தை நிம்ம திக்கு வழிவகுக்கும்.



# மாதவனுக்கு ஜோடியாக சாய் பல்லவி

மலையாளத்தில் துல்கர் சல்மான் நடித்த 'சார்லி' படம் வெளியாகி ஒட்டுமொத்த ரசிகர்களின் மனதையும் கொள்ளை கொண்டது. ஒரு மனிதன், எந்நேரமும் உற்சாகமாக, எதையும் நல்ல நோக்குடன் எடுத்துக்கொள்பவனாக இருக்க முடியுமா என்கிற ஆச்சரியத்தை படம் முழுவதும் நிரப்பினார் துல்கர் சல்மான். படத்தில் கதாநாயகியாக நடித்த பார்வதி மட்டும் சளைத்தவரா என்ன..? 'டெ' ஒபாத்திரத்தில் பின்னியிருந்தார். இந்தப்படத்தை ஏ.எல்.விஜய் தமிழில் ரீமேக் பண்ணப்போவதாகவும் அதில் 'சார்லி' பாத்திரத்தில் மாதவன் நடிக்க இருக்கிறார் என்கிற தகவலும் கசிந்து, மாதவனால் மறுக்கப்பட்டு தற்போது அதுதான் உண்மை என ஆகியுள்ளது. இந்தப்படத்தை அப்படியே ரீமேக் பண்ணாமல் தமிழுக்கு ஏற்றவாறு காட்சிகளை மாற்றிவிட்டாராம் ஏ.எல்.விஜய்.. இப்போது கதையே புது மாதிரி மாறிவிட்டதாம். அதனால் 'சார்லி' யின் ரீமேக் என்று சொல்வதைவிட அதன் தழுவல் என்று சொன்னால் பொருத்தமாக இருக்கும் என்கிறார்கள் படக்குழுவினர். சரி.. அப்படியானால் பார்வதி பாத்திரத்தில் நடிக்கப்போவது யார் என்கிற கேள்விக்கும் இப்போது விடை தெரிந்துள்ளது.. 'பிரேமம்' மூலம் ரசிகர்களின் மனம் கவர்ந்த சாய்பல்லவி தான் 'டெ' பாத்திரத்தில் நடிக்க ஒப்பந்தமாகி இருக்கிறாராம். 'பிரேமம்', 'கலி' ஆகிய படங்களைத் தொடர்ந்து இவர் நடிக்கும் மூன்றாவது படம் இது என்பது குறிப்பிடத்தக்கது.



ஒன்றும் பிரச்சினை இல்லை!
நாலு தடவை பவர்ஸ்டார் படம் பாரு.
எல்லாம் சரி ஆகிடும்!

கோடீஸ்வரனாக வாழ்ந்து கோதுமை ரொட்டி மட்டும் சாப்பிடுறவனைவிட...



ஏழையாக வாழ்ந்து எல்லாத்தையும் சாப்பிடுபவன் வாழ்க்கையை அனுபவித்துவிடுகிறான்.

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 6 | | | | 2 | 3 | | |
| 1 | | | | | 7 | 8 | | |
| | 7 | 2 | 3 | | | | 5 | |
| 5 | | 9 | | | | | 8 | |
| | | | | | | | | |
| | 4 | | | | | 5 | | 1 |
| | 2 | | | | 3 | 7 | 4 | |
| | | 8 | 7 | | | | | 3 |
| | | 7 | 5 | | | | 6 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 1 | 2 | 5 | 4 | 3 | 6 | 8 | 9 |
| 5 | 6 | 3 | 2 | 8 | 9 | 1 | 7 | 4 |
| 9 | 8 | 4 | 1 | 6 | 7 | 5 | 3 | 2 |
| 3 | 7 | 9 | 4 | 5 | 6 | 8 | 2 | 1 |
| 4 | 2 | 6 | 8 | 7 | 1 | 3 | 9 | 5 |
| 8 | 5 | 1 | 3 | 9 | 2 | 4 | 6 | 7 |
| 2 | 3 | 5 | 9 | 1 | 8 | 7 | 4 | 6 |
| 1 | 9 | 7 | 6 | 3 | 4 | 2 | 5 | 8 |
| 6 | 4 | 8 | 7 | 2 | 5 | 9 | 1 | 3 |

ஒரு ஆங்கில காதல் கதை... படித்து கண்கலங்கினால் நிறுவனம் பொறுப்பல்ல

WhatsApp

one day a காகம் and கொக்கு fell down in கடல்
After that the காகம் gave his கை &touch the கொக்கின் கை
suddenly கொக்கு sang a song
"கறுப்பான கையால கைய புடிச்சா"...
and காதல் starts between them
But காகத்தின் family rejected கொக்கு.
because of its வெள்ளைக் colour
so கொக்கு always stand in one leg in hot வெயில் to become கறுப்பு
what a fun tastic love story

**படிக்காத மேதை**

நட்பு புத்தகம் போன்றது. அதில் ஆங்காங்கே சில எழுத்துப்பிழைகள் இருக்கும். அதனை சரி செய்யுங்கள் பிழை என்பதற்காக நல்ல புத்தகங்களை இழக்காதீர்...

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற் படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல் களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டி கள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார் கள்). இந்த ஒவ் வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ் வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ் வாறே 1-9 இலக் கங்கள் இரட்டைப் படாமல் வர வேண் டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# கீரைக் கட்லட்



**தேவையானப் பொருள்கள்:**

கீரை - 1 கட்டு
(எந்த கீரையையும் பயன்படுத்தலாம்)
பெரிய வெங்காயம் - 1
தக்காளி - 1
சாம்பார் பொடி - 1 கரண்டி (குவித்து அளக்கவும்)
மஞ்சள் தூள் - கால்க்கரண்டி
மசாலா தூள் - கால்க்கரண்டி
இஞ்சி, உள்ளி விழுது அரைக்கரண்டி
கடலை மா - 1 கப்
உப்பு - 1 கரண்டி அல்லது தங்கள் சுவைக்கேற்றவாறு
எண்ணெய்- தேவையான அளவு

## செய்முறை:

கீரையை ஆய்ந்து தண்ணீரில் அலசி பின்னர் பொடியாக நறுக்கிக் கொள்ளவும். வெங்காயம், தக்காளி இரண்டையும் பொடியாக நறுக்கிக் கொள்ளவும். ஒரு சட்டியில் 2 அல்லது 3 கரண்டி எண்ணெய் விட்டு சூடானதும் வெங்காயத்தைப் போட்டு வதக்கவும். பின் இஞ்சி உள்ளி விழுதைப் போட்டு வதக்கவும். அத்துடன் தக்காளியைச் சேர்த்து நன்றாக மசியும் வரை வதக்கவும். பின்னர் அத்துடன் சாம்பார் பொடி, மஞ்சள் தூள், மசாலா, உப்பு ஆகியவற்றைச் சேர்த்து நன்றாகக் கிளறி விடவும். கடைசியில் நறுக்கி வைத்துள்ளக் கீரையைப் போட்டு ஒரு கிளறு கிளறி இறக்கி விடவும். கீரை சற்று ஆறியதும் அத்துடன் கடலை மாவை கொஞ்சம் கொஞ்சமாகச் சேர்த்து பிசையவும். கைகளைத் தண்ணீரில் தொட்டுக் கொண்டு (அப்பொழுதுதான் கைகளில் ஒட்டாமல் இருக்கும்) எலுமிச்சம் பழ அளவிற்கு மாவை எடுத்து உருட்டி பின்னர் சற்று அழுத்தி வடை போல் தட்டிக் கொள்ளவும். தோசைக்கல்லை அடுப்பிலேற்றி சிறிது எண்ணெயை விட்டு தேய்த்துக் கொள்ளவும். அதில் தட்டி வைத்திருக்கும் கட்லட்டை (4 அல்லது 5 அல்லது கல்லில் இடம் இருக்கும் வரை) ஒன்றுடன் மற்றொன்று படாமல் வைக்கவும். அடுப்பை மிதமான தீயில் வைத்துக் கொள்ளவும். கட்லட்டைச் சுற்றி 4 அல்லது 5 கரண்டி எண்ணெயை விடவும். ஓரிரு நிமிடங்கள் பொரித்து, தோசைத் திருப்பியால் திருப்பி விட்டு, மீண்டும் சிறிது எண்ணெயைச் சுற்றி விட்டு வேக விடவும். கட்லட் நன்றாக இருபுறமும் சிவக்கும் வரை திருப்பி திருப்பிப் போட்டு வேக விட்டு எடுக்கவும்.

## மருத்துவப் பயன்கள்

ஒரு கப் தயிரைத் தினமும் தவறாமல் சாப்பிட்டு வந்தால் அல்சர் வரவே வராது.......!

தினமும் ஓர் ஏலக்காயை தேனோடு உண்பது கண் பார்வைக்கும், நரம்பு மண்டலத்திற்கும்மிகவும் நல்லது.......!

தினமும் இரண்டு அல்லது மூன்று ஓமம் சாப்பிட்டால் ஒரு மனிதனுக்கு தேவையான இரும்புச் சத்தில் பத்து சதவீதம் கிடைக்கிறது.......!

குழந்தைகளுக்கு முகத்தில் பாலுண்ணி தோன்றியதும், வெங்காயத்தை வெட்டி அதன் மேல் தேய்த்துவிட்டால் இரண்டு மூன்று தினங்களில் உதிர்ந்து விடும்.......!

மஞ்சள், பூண்டு இவை இரண்டையும் பால் விட்டு அரைத்து தலைக்கு பற்றுப் போட்டால், தலைவலி நீங்கும்.......!



## யோகாசன ஆரம்பமும் ஆசன படிமுறைகளும்

யோகாசனம் செய்யும் முன்

5. ஆசனங்கள் செய்யும் போது ஓர் ஆசனத்துக்கு அடுத்து அதற்கான மாற்று ஆசனம் செய்தே அடுத்த ஆசனத்தைச் செய்தல் வேண்டும். ஆசனங்களுக்கிடையில் சாந்தியாசனம் செய்து ஓய்வு எடுத்தல் வேண்டும்.
6. ஒவ்வொரு ஆசனத்தின் முடிவிலும் இரு தடவைகள் மூச்சை நன்றாக இழுத்து விடுதல் வேண்டும்.
7. ஆசனங்களை மிக இலகுவாகச் செய்தல் வேண்டும். உடல் வளைந்து கொடுக்காதவிடத்து வலுக்கட்டாயமாகச் செய்யக் கூடாது. அவரவர் தங்களால் இயலக் கூடிய ஆசனங்களையே செய்தல் வேண்டும்.
8. ஆசனங்களை முடிக்கும் போது 3-5 நிமிடங்கள் வரை சவாசனம் செய்தே முடித்தல் வேண்டும்.
9. இறுதியாக நாடி சுத்தி, பிராணாயாமம் செய்து , 2-20 நிமிடங்கள் வரை தியானம் செய்வது நல்லது.
10. ஆசனங்களை செய்ய முடியாதவர்கள், நோய்வாய்ப் பட்டவர்கள் காலையும்,மாலையும் 2-20 நிமிடங்கள் சாதாரண நிலையில் அமர்ந்து அல்லது கதிரையில் அமர்ந்தபடி தியானம் செய்வது நல்ல பயனளிக்கும். இதுவும் இயலாதவர்கள் சாப்பிடும் போது நிலத்தில் சப்பாணி கொட்டி இருந்து சாப்பிட்டாலே போதுமாகும். இதுவுமியலாதவர் 20 நிமிடங்கள் நடப்பது நன்மை பயக்கும்.



## நகங்களை பராமரிக்க சில குறிப்புகள்



பெண்கள் தங்கள் முக அழகுக்கு செலவிடும் நேரத்தில் ஒரு சில நிமிடங்கள் கூட தங்கள் கை விரல்களுக்கோ அல்லது நகங்களுக்கோ செலவிடுவதில்லை. விரல்கள் அழகாக காட்சியளிக்க வேண்டுமென்றால் நகங்கள் அழகாக இருக்க வேண்டும்.

தரமான நெயில் பொலிஷ்களை மட்டுமே உபயோகிக்க வேண்டும். அப்போது தான் நகத்திற்கு எந்தவித பாதிப்பும் வராது.

சிலருக்கு நகம் கடினத் தன்மையுடன் இருப்பதால், நகத்தை வெட்டுவதற்கு சிரமமாக இருக்கும். எனவே விரல்களை 15 நிமிடம் தண்ணீரில் ஊறவைத்து பின்னர் வெட்டலாம்.

நகங்கள் அடிக்கடி உடைந்து போனால், சிறிதளவு பேபி ஓயிலில் நகங்க்களை ஊறவைத்து பின்னர் கழுவினால் நகங்கள் உறுதியாகும்.

நெயில் பொலிஷ் ரிமூவரை அடிக்கடி பயன்படுத்துவதைவிட நெயில் பொலிஷ் ரிமூவருடன், சிறிது கிளிசரின் கலந்து பயன்படுத்தி வந்தால் மிகவும் நல்லது.

தண்ணீரை மிதமாக சூடுபடுத்தி, சிறிது உப்புக் கலந்து. அதில் விரல்களை சிறிது நேரம் வைத்திருந்தால், விரல்கள் புத்துணர்ச்சியுடன் காணப்படும்.



தினமும் நெயில் பொலிஷ் உபயோகிப்பதால் நகங்களின் நிறம் மங்கிக் காணப்பட்டால் நெயில் பொலிஷ் பயன்படுத்துவதைத் தவிர்க்கலாம்.

ஈரமாக இருக்கும் போது ஷேப் செய்தால் நகங்கள் உடைவதற்கான வாய்ப்பு உள்ளது. எனவே, நகங்கள் ஈரத்தன்மையின்றி இருக்கும்போது ஷேப் செய்ய வேண்டும்.


கிளிசரின் மற்றும் எலுமிச்சைச் சாறு கலந்து அதை நகத்தில் தடவி சிறிது நேரம் கழித்துக் கழுவினால், நகங்கள் பளபளப்பாக இருக்கும். அதே போல், பாதாம் எண்ணெயை நகங்களில் பூசி சிறிது நேரம் கழித்து, கடலை மாவினால் கழுவினாலும் நகம் பளபளப்படையும். மாதத்துக்கு ஒரு முறை இப்படி செய்ய நல்ல பயன் கிடைக்கும்.

ஒலிவ் எண்ணெயை மிதமாக சூடுபடுத்தி அதை விரல்களில் தேய்த்து சிறிது நேரம் கழித்து கழுவ வேண்டும். இவ்வாறு தினமும் செய்து வந்தால் நகங்கள் நன்றாக வளரும்.

மிதமான சூடுள்ள பாலில் பஞ்சை நனைத்து அதை வைத்து நகங்களை தேய்த்து சுத்தப்படுத்தினால், நகங்களில் காணப்படும் அழுக்குகள் நீங்கி நகங்கள் பளபளப்பாகும்.

# தாகம்!

## அறிவியல் நோக்கு



மனிதர்களிலும், விலங்குகளிலும் காணப்படும் இயல்பூக்கமே தாகம் எனப்படுகிறது. தாகத்தின் விளைவாக நாம் திரவங்களைத் தேடுகிறோம். பருகிக்கொள்கிறோம். உடலில் உள்ள திரவத்தின் சமநிலைத் தன்மைகளை பராமரிப்பதற்கும், சீரான தட்ப வெப்ப நிலையைப் பேணவும் கருவியாக இந்தத் தாக உணர்வு செயற்படுகிறது.




இயங்குநிலை பெறுகிறது.

உடலில் திரவத் தன்மை வாய்ந்த பொருள்கள் குறையும்போதோ அல்லது உப்பின் அடர்த்தி அளவு அதிகமாகும்போதோ தாக உணர்வு ஏற்படுவதாக சொல்லப்படுகிறது. இந்தச் செயல்நிலைகளின்போது, மூளையானது மிக வேகமாகச் செயற்படுகிறது. தூண்டலை அனுப்பி எம்மிடையே தாக உணர்வை ஏற்படுத்துகிறது. உடலில் தொடர்ந்து நீரின் இழப்பு, இருக்குமானால் அது பலவகையான சிக்கல்களின், இடர் நிலைகளின் அறிகுறியாக இருக்கலாம். மேலும் நரம்பியல் கோளாறுகளின் விளைவாக மூளையின் செயற்றிறன் குறையும். சிறுநீரகப் பாதிப்புகள் ஏற்படும். அளவுக்கதிகமானதாக உணர்வை விஞ்ஞானிகள் பொலிடிப்சியா (polydipsia) எனவும் அதிகளவில் சிறுநீர் கழிக்கப்படலை பொலியூறியா (polyuria) எனவும் குறிப்பிடுகின்றனர். இது நீரிழிவு நோயின் அறி குறியாக இருக்கலாம்.

தாக உணர்வு என்பது மைய நரம்பு மண்டலத்தினால் உணரப்படுகிறது. எக்ஸ்ரா செலுலர் திறஸ்ற் (extracellular thirst) என்பது உடலில் நீரின் அளவு குறைவதால் ஏற்படும் தாக உணர்வு எனவும் இன்றா செலுலர் திறஸ்ற் (intracellular thirst) என்பது உடலில் உப்பின் அடர்த்தி அதிகரிப்பதால் ஏற்படும் தாக உணர்வு எனவும் விஞ்ஞானிகள் கருத்துரைக்கின்றனர்.

ஆக, இந்த இரண்டுவகையான தாக உணர்வுகளுமே மூளையின் மைய நரம்புமண்டலத்தால் தான் உணரப்படுகின்றன.

# உரோமங்கள் நரைப்பது ஏன்?



நரைத்தமுடி, அறிவின் அடையாளம் என்று நாம் சொல்லி வருகின்ற வழக்கத்தை பொய் என்கிறது ஐரோப்பிய விஞ்ஞானிகள் குழு. கறுத்தமுடி நரைத்துப் போவது ஏன் என்பதற்கு தற்போது விடை காணப்பட்டுள்ளது.

எங்களுடைய உரோமத்தின் செல்களில் இயற்கையாகவே சிறிதளவு ஜதரசன் பெரா ஒக்சைட் எனப்படுகின்ற வேதிப்பொருள் சுரக்கிறது. வயது அதிகரிக்கும்போது சுரக்கப்படும் ஜதரசன் பெரா ஒக்சைடின் அளவும் அதிகரிக்கிறது. உரோமத்தின் உள்ளாய் ஏற்படும் இந்த மாற்றங்கள் முடியை சாம்பல் நிறத்துக்கு மாற்றுகிறது. அதன்பின்பாக வெள்ளையாக்கி விடுகிறது என்கின்றனர் ஐரோப்பிய விஞ்ஞானிகள்.

உரோமத்துக்கு இயற்கையாகவே நிறமூட்டுவது மெலனின் எனப்படுகின்ற வேதிப்பொருளே. உரோமம், கண்கள், தோல் இவற்றின் நிறத்தைத் தீர்மானிப்பது என்பதே மெலனின் வேதிப்பொருளின் வேலையாக காணப்படுகிறது. மெலனின் சுரப்பதை ஜதரசன் பெரா ஒக்சைட் தடை செய்துவிடுகின்ற தன்மைகளே பிரச்சினைகளின் மூலவேராகச் சொல்லப்படுகிறது.

ஆக, மனிதர்களின் உரோமக் கால்களின் மாதிரிகளை பகுப்பாய்வு செய்தே இந்த முடிவுகள் எட்டப்பட்டுள்ளது. உரோமக் கால்களில் சுரக்கும் ஐதரசன் பெரா ஒக்சைட் தண்ணீராகவும், ஐதரசன் வாயுவாகவும் சிதைவடையச் செய்வதற்கான பணியை எம்.எஸ்.ஆர் ஏ,பி என்னும் என்சைம்கள் செய்கின்றன. எம்.எஸ்.ஆர் ஏ,பி என்சைம்கள் சுரப்பது குறைவடையும்போது ஐதரசன் பெரா ஒக்சைட் சிதைவடையும் தன்மைகளும் குறைந்துபோகிறது.

ஐதரசன் பெரா ஒக்சைட் அதிகரிப்பதால் றொசினியஸ் என்னும் என்சைம் உற்பத்தியாவதும் நின்று போய்விடுகிறது. மயிர்க்கால்களில் மெலனின் சுரப்பதற்கு இந்த றொசினியஸ் எனப்படும் என்சைம்தான் காரணமாக சொல்லப்படுகிறது.


## மரண அறிவித்தல்



மலர்வு 20 . 06 . 1927

உதிர்வு 17 . 01 . 2017

### திருமதி இரத்தினம்மா ஐயாத்துரை

யாழ்.குப்பிழானைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும், மொன்றியல் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினம்மா ஐயாத்துரை 17.01.2017 செவ்வாய்க்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சீனித்தம்பி - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பையா - ஆச்சிமுத்து தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற ஐயாத்துரையின் அன்பு மனைவியும், சண்முகலிங்கம் (குப்பிழான். ஐ.சண்முகன்), காலஞ்சென்றவர்களான கந்தலிங்கம், தேவிமீனாட்சி மற்றும் குமாரலிங்கம் மணிமேகலா (ஜேர்மனி), முருகலிங்கம் (கனடா), ரூபவதி (சீதா - கனடா), சுந்தரவதனி (வதனி - கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், புனிதவதி (அம்பாள்), கமலாதேவி, வசந்தமலர், சற்குருநாதன் (ஜேர்மனி), சத்தியபாமா (கனடா), தங்கராசா (கனடா), வெற்றிவேலாயுதம் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், இராதாகிருஷ்ணன், பராசக்தி, இராமகிருஷ்ணன், கரிஜாசக்தி, கிருபானந்த கிருஷ்ணன், யோகாசக்தி, சாந்தசக்தி, சிவகிருஷ்ணன், நவகிருஷ்ணன், சாதனா, சிவதா, சிந்துஜா, சுகன்யா, இரவீந், இரவிவர்மன், வதனன், ராகினி,பிரமன், வாரணன், அபிநயா, அதிசயா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.01.2017) ஞாயிற்றுக்கிழமை மொன்றியல் கனடாவில் நடைபெறும். அதேதினம் முற்பகல் 10 மணியளவில் அவரின் வாழ்விடமான குப்பிழான் இரத்தினபவனத்தில் அஞ்சலிப் பிரார்த்தனை நிகழ்வு இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

சண்முகலிங்கம் - 077 615 8894, 021 226 2193,
கந்தலிங்கம், கிருபானந்த கிருஷ்ணர் - 077 631 4995,
குமாரலிங்கம் - 077 625 3495,
முருகலிங்கம் - 5146 625243 - 450 681 5027,
மணிமேகலா - சற்குருநாதன் - 0049 157 853 46678,
சீதா தங்கராசா - 438 929 6711,
வதனி வெற்றிவேலாயுதம் - 514 744 6296

(N/231)
(11,17,18)



## மரண அறிவித்தல்



தோற்றம் 06.01.1932 மறைவு 18.01.2017

### திருமதி இராஜலட்சுமி பொன்னுத்துரை

சுதுமலை மத்தி, மானிப்பாயைச் சேர்ந்த திருமதி இராஜலக்ஷ்மி பொன்னுத்துரை 18.01.2017 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை பொன்னுத்துரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், வேலுப்பிள்ளை - பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், Dr.வேதானந்த நாயகி ( Australia ), கிருஷ்ணானந்தன் (பொறியியலாளர் - Australia), யுசிலானந்தன் (பொறியியலாளர்- Australia ), ருசிதநாயகி (றஞ்சி ), குமாரானந்தன், சசிகலா (London), சிவபத்மினி ( Canada), சண்முகானந்தன் (கருமாரி மோட்டோஸ் - கொழும்பு), சர்வானந்தன் ( New Zeland ) ஆகியோரின் அன்புத் தாயாரும், இராஜேஸ்வரன் (Australia), Dr. றஞ்சினி ( Australia), Dr. கயல்விழி (Australia ), கணேசலிங்கம் (தினேஸ் வெதுப்பகம் - மானிப்பாய்), அன்னலட்சுமி (ஆசிரியர்), சிவராஜா (London), நந்தகுமார் ( Canada), தமிழ்ச் செல்வி (அதிபர் - மயிலிட்டி கலைமகள் வித்தியாலயம்), ஜெயமகள் ( New Zeland ) ஆகியோரின் அன்பு மாமியும், ஹரேந்திரா ( Australia ), இசிகா ( Australia ), சிவேந்திரா ( Australia ), Dr. நிசாந் ( Australia ), Dr. தனுஜா ( Australia), Dr. கோகுல் ( Australia ), Dr.யௌவனா ( Australia ), மிதுசனா ( Australia ), ருக்சன் (Australia ), பிரசாந் ( Irrigation Dept Mankulam ), Dr. நிசாந் ( Jaffna Hospital), சாயிசாந் (யாழ்.இந்துக் கல்லூரி), விதுஷா (வேம்படி மகளிர்கல்லூரி), நிகேதனன் ( London), கோபிதனன் ( London ), லக்சா ( Canada ),மகிழினி ( Mahajana college ), மைவிழி, ஹர்சினி ( New Zeland) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான வேலாயுதபிள்ளை, சிவசுப்பிரமணியம், தில்லைநடராசா, புஸ்பராணி, தணிகாசலம், குலேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான தெய்வானைப்பிள்ளை, முருகுப்பிள்ளை ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.01.2017) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவருடைய இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சுதுமலை மத்தி,**
**மானிப்பாய்.**

(J/7815)
(11,18)

**தகவல்: குடும்பத்தினர்.**
**றஞ்சி கணேசலிங்கம்.**

**தவறிவிட்டது**

உடுப்பிட்டி மண்டான்பகுதியில் NP-DAC 5773 என்னும் இலக்கமுடைய நம்பர் பிளேற் தவறிவிட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் தந்துதவவும். தொடர்பு - 077 6161 376

**மணமகள் தேவை**

1988 ஆம் ஆண்டு பிறந்த பூரம் 3 ஆம் பாதம் 8 இல் செவ்வாய் இலக்கணபாவம் 68, சந்திரபாவம் 34 நகைத்தொழில் செய்யும் மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்பு.077 9863 089,021 5616 110

**அறை வாடகைக்கு உண்டு**

கச்சேரி நல்லூர் வீதிக்கு அருகில் இரண்டு பேர் தங்கியிருக்கக் கூடிய மூன்று நேர சாப்பாட்டுடன் அறை வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 077 152 8480

**IPS**
Institute of Professional Studies
Certificate Function - Batch IV
- பிரதம விருந்தினர்
  பேராசிரியர் N. சண்முகலிங்கம் (முன்னாள் துணைவேந்தர்)
- சான்றிதழ் வழங்குதல்
  திருமதி கௌரி சண்முகலிங்கம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
T.P: 076 685 2529
மாணவர்கள் அணி : 04.
IPS, திருநெல்வேலி.

**காணி விற்பனைக்குண்டு**

திருநெல்வேலி நொதேண் வைத்தியசாலைக்கு அருகில் உடையார் ஒழுங்கையில் 2½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 076 993 7223

கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 89
சீட்டிழுப்பு திகதி: 20.01.2017
அடுத்த ஞாயிற்றுக்கிழமைக்கான ஜக்போட்
ரூ. 76,486,665/-
V 22 39 58 72

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம்: 533 வர்ணம்: நீலம்
சீட்டிழுப்பு திகதி: 20.01.2017
வெற்றி இலக்கங்கள்
01 04 33 45 O
ரூ. 21,308,595/-
விசேட இலக்கங்கள்
844 | 171 | 02

இம்முறை தனயோகம் உங்களுடையதா?
திகதி 20.01.2017
2085
சிவப்பு

இடபம்
வெற்றி இலக்கங்கள்
11 13 27 53
ஞாயிற்றுக்கிழமை வெற்றிப்பொதி
ரூ 6. 736. 815/=
2017.01.22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
வெற்றி இலக்கங்கள்
13 65
டபிள் சான்ஸ்
Web: www.dlb.lk

**கண்ணீர் அஞ்சலி**

எமது சக ஊழியரான
திருமதி விஜயலதா ராஜ்கரனின் தாயார்
வள்ளிப்பிள்ளை தர்மராசா
19.01.2017 காலமானதையிட்டு எமது கண்ணீர் துளிகளை காணிக்கை ஆக்குவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் உறவினர்களுக்கு ஆறுதல் கூறுகின்றோம்.
யாழ். போதனா வைத்தியசாலை,
மருந்தாளர்கள்.

**கண்ணீர் அஞ்சலி**



யாழ். போதனா வைத்தியசாலையில் மருந்தாளராக கடமையாற்றும் **திருமதி விஜயலதா ராஜ்கரன்** அவர்களின் அன்புத்தாயார்
**வள்ளிப்பிள்ளை தர்மராசா**
அவர்கள் 19.01.2017 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
நிறைவுகாண் மருத்துவவியல் தொழில் வல்லுனர்கள் ஒன்றியம், யாழ்ப்பாணம்.

## இஸ்லாமிய...

யேற்றுக் கொண்ட பின்னர் ஆற்றிய கன்னி உரையில் டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்தார்.
அமெரிக்காவின் புதிய அதிபராக டொனால்ட் ட்ரம்ப் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 8ஆம் திகதி நடைபெற்ற தேர்தல் ஊடாகத் தெரிவானார். தேர்தல் மற்றும் தேர்தல் முடிவுகள் தொடர்பில் சர்சைகள் எழுந்தன. இவ்வாறானதொரு நிலையில் நேற்றைய தினம் உத்தியோகபூர்வமாக, அமெரிக்காவின் பாரம்பரிய நடைமுறைக்கு அமைவாக ட்ரம்ப் புதிய அதிபராகப் பதவியேற்றார்.
வெள்ளை மாளிகைக்குச் நேற்றுக் காலை சென்ற ட்ரம்ப் தம்பதியினர், முன்னைய அரச தலைவர் ஒபாமா தம்பதியினருடன் காலை உணவு அருந்தினர். அதன் பின்னர் வொசிங்டன் நகரில் பதவியேற்பு நடைபெறும் கேபிட்டல் மண்டபத்துக்கு வந்தனர். ட்ரம்ப் பதவியேற்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஊர்வலம் - போராட்டம் நடந்ததால், பதவியேற்பு விழாவுக்கு பன்மடங்கு அதிகரித்த பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது.
விழாவை நேரடியாகக் காண்பதற்காக லட்சக் கணக்கானோர் கூடியிருந்தனர். பதவியேற்பு விழாவில் முன்னைய அரச தலைவர்களான ஜோர்ஜ் புஷ், கிளிண்டன் உள்ளிட்டவர்களும், பன்னாட்டு அரச தலைவர்கள், வர்த்தகப் புள்ளிகள் எனப் பலதரப்பட்டோரும் கலந்து கொண்டிருந்தனர்.
முதலில் அமெரிக்காவின் துணை அரச தலைவர் மைக் பென்ஸ் பதவியேற்றுக் கொண்டார். இதன் பின்னர் அமெரிக்க மக்களின் பலத்த கரகோசம் முழங்க, புதிய அதிபராக ட்ரம்ப் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். அமெரிக்காவின் தலைமை நீதிபதி ஜோன் ஜி றொபேட்ஸ் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். ட்ரம்ப் தனது பதவிப் பிரமாணத்தின் போது, தனது மனைவியின் கையில் இரண்டு பைபிள் புத்தகங்களைக் கொடுத்து அதன் மீது ஒரு கையை வைத்தே சத்தியம் செய்து கொண்டார்.
பிரமாண்டமான பதவியேற்பு வைபவம் இலங்கை நேரப்படி இரவு 10.30 மணிக்கு நடைபெற்றது. ட்ரம்ப் பதவியேற்றுக் கொண்ட பின்னர் தனது முதலாவது உரையை அமெரிக்க மக்களுக்கு நிகழ்த்தினார். அதில், பராக் ஒபாமா மற்றும் அவரது மனைவி மிசெல் ஒபாமா, ஆட்சி மாற்றத்தைக் கையாண்ட விதம் குறித்துப் பாராட்டினார். ஜனவரி 20 ஆம் திகதி மக்கள் நாட்டின் ஆட்சியாளர்களாக மீண்டும் மாறிய நாளாக நினைவு கூரப்படும் என்று அவர் கூறினார்.
தன்னை எதிர்நோக்கியுள்ள பணி சவால் நிறைந்தது என்று கூறிய ட்ரம்ப், இந்த வேலையைச் செய்து முடிக்கப் போவதாக உறுதியளித்தார். இன்றிலிருந்து ஒவ்வொரு முடிவும் அமெரிக்காவுக்கு முதலில் லாபம் அளிக்கும் வகையிலேயே எடுக்கப்படும் - என்றார். (வ-5)

## வடக்கில்...

நிலையம் நேற்றுத் தகவல் வெளியிட்டது.
யாழ்ப்பாண மாவட்டத்தில் 32 ஆயிரத்து 233 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்து 12 ஆயிரத்து 447 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். சங்கானைப் பிரதேச செயலர் பிரிவிலேயே அதிகளவிலானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.
கிளிநொச்சி மாவட்டத்தில் 13 ஆயிரத்து 210 குடும்பங்களைச் சேர்ந்த 44 ஆயிரத்து 401 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவிலேயே அதிக மானோர் பாதிப்புற்றுள்ளனர். முல்லைத்தீவு மாவட்டத்தில் 8 ஆயிரத்து 846 குடும்பங்களைச் சேர்ந்த 38 ஆயிரத்து 606 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவிலேயே அதிகூடிய அளவில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.
மன்னார் மாவட்டத்தில் 22 ஆயிரத்து 20 குடும்பங்களைச் சேர்ந்த 76 ஆயிரத்து 728 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். முசலிப் பிரதேச செயலர் பிரிவிலேயே அதிகளவிலானோர் பாதிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. வவுனியா மாவட்டத்தில் 4 ஆயிரத்து 267 குடும்பங்களைச் சேர்ந்த 15 ஆயி ரத்து 345 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். வெங்கலச் செட்டிகுளம் பிரதேசத்திலேயே அதிகமான பாதிப்பு ஏற்பட்டுள்ளது. நாடு முழுவதும் 2 லட்சத்து 51 ஆயிரத்து 310 குடும்பங்களைச் சேர்ந்த 10 லட்சத்து14, 690 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். (த-5)

## வறட்சி...

நேற்றுக் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரையில் 2.8 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி கிடைக்கப்பெற்றுள்ளதாக, வளி மண்டலவியல் திணைக்களப் பொறுப்பதிகாரி பிரதீபன் தெரிவித்தார். வடக்கின் ஏனைய மாவட்டங்களில் மப் பும் மந்தாரமுமான காலநிலை நிலவியபோதும் குறிப்பிடத்தக்க மழை வீழ்ச்சி கிடைக்கப்பெறவில்லை.
வடக்கு மாகாணம் உள்ளிட்ட நாடு முழுவதும் மழை வீழ்ச்சி இன்மையால் கடும் வறட்சி வாட்டி வதைத்துக் கொண்டிருக்கின்றது. நாடளாவிய ரீதியில் 10 லட்சம் பேர் வரையில் வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ள தாக இடர் முகாமைத்துவமத்திய நிலையம் அறிக்கையிட்டுள்ளது.
இந்த நிலையில் யாழ்ப்பாணத்தில் நேற்றுப் பரவலாக மழை பெய்தது. கிளிநொச்சி மாவட்டத்தில் பிற்பகல் 1 மணியளவில் சுமார் 10 நிமிடங்கள் மாத்திரம் சுமாரான மழை பெய்தது. முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களில் வானம் மப்பும் மந்தாரமுமாகக் காணப்பட்ட போதும் மழை பெய்யவில்லை. (த-5)

## டொனால்ட்...

நடத்தப்பட்டது. டொனால்ட் ட்ரம்ப் அரச தலைவராகப் பதவியேற்கும் நிகழ்வு நேற்று நடைபெற்ற நிலையிலேயே அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் ஐக்கிய சோசலிசக் கட்சியால் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஐக்கிய சோசலிஸக் கட்சியின் பொதுச் செயலாளரான சிறிதுங்க ஜயசூரிய தெரிவித்ததாவது:
அமெரிக்காவின் அரச தலைவராக டொனால்ட் ட்ரம்ப் தெரிவாகியுள்ளமை பயங்கரமானதாகும். அவரை நாம் கடுமையாக எதிர்க்கின்றோம். இதற்கு நியாயபூர்வமான காரணிகளும் இருக்கின்றன.
முழு உலகையும் போர் நிலைக்கு அழைத்துச் செல்லும் வகையிலேயே அவரின் செயற்பாடுகள் இருக்கின்றன. முஸ்லிம்களுக்கு எதிரான அவரின் கொள்கை ஜன நாயகத்துக்கு எதிரானதாகும். அகதிகள் தொடர்பிலும் இறுக்கமான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளார். இதை மையப்படுத்தியே எமது போராட்டம் நடத்தப் பட்டது. இது ஆரம்பம் மாத்திரமே. எதிர் காலத்திலும் ஜனநாயக வழி யில் போராடு வோம் - என்றார். (த-5)

## குடும்பத் தலைவர்...

இந்தச் சம்பவம் நேற்று மு.ப.10.30 மணியளவில் கச்சாய் - கிளாலி வீதியில் இடம்பெற்றது. கெற்பேலி மேற்கைச் சேர்ந்த உதயகுமார் வினோத்குமார் (வயது - 31) என்னும் ஒரு பிள்ளையின் தந்தையே சாவடைந்தவராவார். சாவகச்சேரி நீதிமன்றில் இடம்பெற்ற வழக்குக்குச் சென்றுவிட்டு வீடு திரும் புகையில் விபத்து இடம்பெற்றதெனத் தெரிவிக்கப்பட்டது.
வீதியில் காணப்பட்ட மணல் பகுதியில் மோட்டார் சைக்கிள் சில்லு சறுக்கி வாகனத்துடன் மோதி வீழ்ந்தபோது வாகனச் சில்லு அவர் மீது ஏறியதென விபத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.
சடலம் சாவகச்சேரி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. கொடிகாமம் பொலிஸார் விசாரணை களை மேற்கொண்டனர். (த-9)

## ஜல்லிக்கட்டுக்கு...

இளைஞர்களின் தன்னெழுச்சியான போராட்டம் வெற்றியடைந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.
தமிழக அரசின் அவசரச் சட்டத்திற்கு புதுடில்லி அரசின் சுற்றுச்சூழல் அமைச்சகமும், கலாசார அமைச்சகமும், சட்ட அமைச்சகமும் ஒப்புதல் அளித்துள்ளன. இதைத் தொடர்ந்து புதுடில்லி அரசின் உள்துறை அமைச்சகம் அவசரச் சட்டத்துக்கு அனுமதியளித்து குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பி வைத்தது.
தமிழக அரசின் வரைவுச் சட்டத்தில் எந்த மாற்றமும் இல்லாமல், புதுடில்லி அரசின் அமைச்சகங்கள் ஒப்புதல் வழங்கியுள்ளன. மாநில அரசின் சட்டத்தில் காட்சிப் படுத் தக் கூடாத விலங்கு கள் பட்டியலில் இருந்து காளைகள் நீக்கப்பட்டுள்ளன. குடியரசுத் தலை வரின் ஒப்புதல் பெறப்பட்டவுடன் தமிழக ஆளுநர் வித்யாசாகர் ராவ் அவசரச் சட்டத்தை பிறப்பிப்பார்.
முன்னதாக தமிழக அரசே அவசரச் சட்டத்தை பிறப்பிக்கலாம் என்று புதுடில்லி அரசின் தலைமைச் சட்டத்தரணி முகுல் ரோத்தகி தெரிவித்திருந்தார். ஜல்லிக்கட்டு தொடர்பாக புதுடில்லி மற்றும் மாநில அரசுகள் சட்டம் இயற்ற விருப்பதாக தெரிவித்ததையடுத்து, ஒரு வாரத்துக்குத்தீர்ப்பை ஒத்திவைப்பதாக இந்திய உயர் நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது.
இதையடுத்துதமி ழக இளைஞர்களின் தன்னெழுச்சியான போராட்டம் வெற்றியடையும் சூழல் ஏற்பட்டுள்ளது. (வ-5)


**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



எமது பாடசாலை ஆசிரியரான
திரு. க. முரளிதரன்
அவர்கள் அதிபர் தரம் III பரீட்சையில் சித்தி பெற்று 02.01.2017 தொடக்கம் யா/புன்னாலைக்கட்டுவன் மகாவித்தியாலயத்தில் அதிபராக பதவி உயர்வு பெற்றமையையிட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம்.
Congratulations!
வாழ்த்துவோர்: யா/மயிலிட்டி வடக்கு கலைமகள் மகாவித்தியாலயம், காங்கேசன்துறை. ஆசிரியர் நலன்புரிகழகம்.



பாதுகாப்புடன் அழைத்து வரப்படும் ட்ரம்ப்



வெள்ளை மாளிகையில் ஒபாமா மற்றும் ட்ரம்ப் தம்பதியினர்

# ட்ரம்ப் - பராக் ஒபாமா தம்பதிகள் வெள்ளை மாளிகையில் சந்திப்பு

டொனால்ட் ட்ரம்பும் அவருடைய மனைவியும் அமெரிக்காவின் முன்னாள் அதிபர் பராக் ஒபாமா மற்றும் அமெரிக்க முன்னாள் முதல் பெண்மணி மிசெல் ஒபாமாவை வெள்ளை மாளிகையில் நேற்றுக் காலை சந்தித்தனர். அமெரிக்காவின் வழக்கத்துக்கு அமைவாக இந்தச் சந்திப்பு காலை உணவுடன் நடைபெற்றுள்ளது.
ட்ரம்பின் குடும்பத்தினர், பதவியேற்பு நாளை வெள்ளை மாளிகை அருகிலுள்ள தேவாலயம் ஒன்றில் நடைபெற்ற பாரம்பரிய செப வழிபாட்டோடு தொடங்கினர்.
ட்ரம்ப் வெள்ளை மாளிகைக்கு வருவதற்கும், அங்கிருந்து பதவியேற்பு மண்டபத்துக்குச் செல்வதற்கும் கடும் பாதுகாப்பு வழங்கப்பட்டது.
முன்னதாக, தன்னுடைய அலுவலகமான ஓவல் மாளிகையை விட்டு கடைசியாக வெளியேறுவதற்கு முன்னால், பராக் ஒபாமா அமெரிக்கா வழக்கப்படி, அடுத்த அதிபருக்குத் தனிப்பட்ட குறிப்பை எழுதி வைத்துள்ளார். (வ-5)

# நல்லதொரு முடிவு தமிழருக்கு வரும்

## புதுடில்லி அரசு தெரிவிப்பு

புதுடில்லி, ஜன.21
ஜல்லிக்கட்டு விவகாரத்தில் தமிழக மக்களுக்கு விரைவில் நல்ல செய்தி கிடைக்கும் என புதுடில்லி அரசின் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அனில்குமார் தாவே கூறினார்.
புதுடில்லி அரசின் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கூறியதாவது:
தமிழகத்தில் அமைதியாக நடக்கும் போராட்டம் பாராட்டத்தக்கது. ஜல்லிக்கட்டுக்கு மிகவிரைவாக நல்ல முடிவு எடுக்கப்படும். இன்று அல்லது நாளைக்குள் பிரச்சினை முடிவுக்கு வரும் என நம்புகிறேன். தமிழக மக்களுக்கு நல்ல செய்தி கிடைக்கும்.
நிரந்தர தீர்வு:
ஜல்லிக்கட்டு நடத்த அனைத்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. உறுதியாக, எவ்வித பிரச்சினையின்றி ஜல்லிக்கட்டு நடைபெற வேண்டும். அவசர கதியில் முடிவுகளை எடுத்துத் தவறான செயலில் ஈடுபட்டு விடக்கூடாது என்பதில் உறுதியாக இருக்கிறோம். தமிழர்களின் பாரம்பரியமிக்க ஜல்லிக்கட்டு விவகாரத்துக்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டும் என விரும்புகிறோம் -என்றார். (வ)

# லிபியாவில் அமெ. நடத்திய தாக்குதலில் 80 ஐ.எஸ். உறுப்பினர்கள் உயிரிழப்பு

லிபியாவில் அமெரிக்கப் படைகள் நடத்திய வான்வழித் தாக்குதலில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பைச் சேர்ந்த 80 ஆயுததாரிகள் கொல்லப்பட்டனர்.
ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிராக நடத் தப்பட்ட வான்வழித் தாக்குதல் குறித்து, அமெரிக்க ராணுவ தலைமையகம், லிபியாவில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பி னரின் கோட்டையான சிர்ட்டே நகரில் ஐ.எஸ். ஆயுததாரிகளின் முகாமில் அமெரிக்க படைகள் நடத்திய வான்வழித் தாக்குத லில் 80 ஆயுததாரிகள் கொல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ம)

# ஜல்லிக்கட்டு நடக்கும் வரை மக்கள் போராட்டம் தொடரும்

இன்னும் இரண்டொரு நாட்களில் ஜல்லிக்கட்டுப் போட்டிகள் நடைபெறும் என்று தமிழக முதலமைச்சர் அறிவித்திருந்தாலும் மாநிலம் முழுவதும் போராட்டத்தில் ஈடுபட்டுவருபவர்கள் தங்கள் போராட்டங்களைத் தொடர்ந்து வருகின்றனர்.
முன்னதாக ஜல்லிக்கட்டு தொடர்பான தமிழக அரசின் அவசரச் சட்டத்துக்கு புதுடில்லி சுற்றுச்சூழல் மற்றும் சட்ட அமைச்சகங்கள் தங்கள் ஒப்புதலை வழங்கியுள்ளன.
தமிழக அரசு அவசரச் சட்டம் கொண்டுவரும் பட்சத்தில் ஜல்லிக்கட்டு நடக்கக்கூடும் என்பதால், மதுரை மாவட்ட ஆட்சியர் வீரராகவ ராவ், அலங்காநல்லூரில் ஜல்லிக்கட்டு நடக்கும் இடத்தை நேற்றுப் பார்வையிட்டார்.
தமிழ்நாட்டில் ஜல்லிக்கட்டுப் போட்டிகளை நடத்த வலியுறுத்தி மாநிலம் முழுவதும் நடைபெற்றுவரும் போராட்டங்கள் நான்காவது நாளாக நேற்றும் தொடர்ந்து நடைபெற்ற நிலையில், போராட்டம் நடந்துவரும் சென்னை மெரீனா கடற்கரையை நோக்கி லட்சக்கணக்கான பொதுமக்கள் புறப்பட்டதால் சாலைகள் அனைத்தும் முடங்கின. (வ)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சந்திரமணி பாக்கியராஜா



பிறப்பு 1948.07.21 இறப்பு 2017.01.20

உடுப்பிட்டி, கண்ணாமலையைப் பிறப்பிடமாகவும், அல்லையம்பதி துன்னாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சந்திரமணி பாக்கியராஜா நேற்று (20.01.2017) வெள்ளிக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை -தங்கம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான ஞானமுத்து - சந்தனப்பிள்ளை தம்பதியரின் அன்புமருமகளும் காலஞ்சென்ற பாக்கியராஜாவின் அன்பு மனைவியும் லி. கிருஸ்ணவேணி (இலங்கை மின்சார சபை) இன் அன்புத்தாயும் க்.லிங்கரூபன் (பிரதம மின் பொறியிலாளர் கட்டமைப்பு இ.மி.ச) இன் அன்பு மாமியும் இராசலட்சுமியின் அன்புச்சகோதரியும் சிவகௌரியின் அன்புச் சிறியதாயும் ஜெகதீஸ்வரனின் அன்பு மாமியும் யதுஷிகா, அக்ஷிகா, வர்ணிஜா, சங்கோதயன், சாருகேசி, வேதோதயன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியுமாவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22.01.2017 ஞாயிற்றுக் கிழமை மு.ப. 9 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கருகம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அல்லையம்பதி,
துன்னாலை.

தகவல்:
குடும்பத்தினர்
077 7371 144

### நல்லையா லோகேஸ்வரன்

(ஓய்வு பெற்ற ஆசிரியர்- யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி, யா/ சுதுமலை சின்மய பாரதி பாடசாலை)



பிறப்பு 05.03.1949 இறப்பு 20.01.2017

தாவடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நல்லையா லோகேஸ்வரன் நேற்று (20.01.2017) வெள்ளிக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லையா-பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இராசையா-இரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும் கனகாம்பாளின் அன்புக் கணவரும் சாதனா (கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்-யாழ்ப்பாணம்), லாவண்யா(அபிவிருத்தி உத்தியோகத்தர்- பிரதேசசெயலகம், துணுக்காய்), கௌரிநாத், ஸ்ரீநிகேதன் (மருத்துவபீடம்-35ஆவது அணி, யாழ். பல்கலைக்கழகம்), ஆகியோரின் பாசமிகு தந்தையும் செந்தில்குமரன் (நிலஅளவைத் திணைக்களம்-கிளிநொச்சி), கௌசிகா(LB Finance) ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரநிக்காவின் அன்புப் பேரனும் லோகேஸ்வரி(ஜேர்மன்), சிவனேஸ்வரி(மட்டக்களப்பு), விக்னேஸ்வரி (ஆசிரியை-யா/வேம்படி மகளிர் கல்லூரி), ஈஸ்வரன் (கொக்குவில்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22.01.2017 ஞாயிற்றுக்கிழமை பி.ப ஒரு மணியளவில் தாவடியில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்.
077 167 6420

# பல்லுயிரியம்..!


## ஏன்..? எதற்கு? எப்படி?

*"ஞாயிறு போற்றுதும்*
*திங்களைப் போற்றுதும்*
*மாமழை போற்றுதும்..."*

என்றவாறு இயற்கையை இரசிப்பதே அதன் பாதுகாப்பு அடிப்படைக் கருதுகோள்களில் முக்கியமானதாகக் காணப்படுகிறது. இத்தகைய பாரம்பரிய வெளிப்பாட்டின் ஊடகமான எமது மொழியின் மிக நீண்ட கால வரலாற்றில் இயற்கை விஞ்ஞானம் என்ற அழகியலின் வளமான கணக்கீடுகள், அவை பற்றியதான குறிப்புகள் யாவும் மறைந்து போய் விட்டன.

இந்தச் சந்தர்ப்பத்திலே இயற்கை வளப் பாதுகாப்பு என்பது ஒரு மொழியின் பயன்பாடு எனப்படுகிறது. கலைச் சொல்லாக்கத்தில் அது இருப்பதையும் ஆங்கிலமே உணர்த்தியுள்ளது.

எடுத்துக்காட்டாக குரங்குக்கும், மந்திக்கும் உள்ள பொருள் புரியாத போக்கு, இன்றைய தமிழரின் பண்பாட்டுச் சிதைவுகளில் ஒரு முக்கியக் கூறாகச் சொல்லப்படுகிறது. எமது முயற்சியாகவே பார்க்கப்படுகிறது. அறிவியலின் பெயரால், வறண்ட மொழி பெயர்ப்பை மட்டுமே செய்து கொண்டிராமல் ஆக்கபூர்வமான கலைச் சொல்லாக்க வழியில் இயற்கையின் தமிழ் உலகம் சிறந்திட, நிமிர்ந்திட உருவான சொல்லே பல்லுயிரியம். வள்ளுவரிடமிருந்து பெறப்பட்ட பல்லுயிரியம் என்பதை பையோடைவர்சிட்டி(Bio - diversity) என்ற ஆங்கிலச் சொல்லுக்கு மாற்றாக மொழியாக்கம் செய்திருப்பது பெருமைக்குரியது.




### உயிர்களின் பல்வகைமை

1999 ஆம் ஆண்டு ரியோடிஜினிரோவில் இடம்பெற்ற புவி உச்சி மாநாட்டில் அமெரிக்கா இது குறித்து பேசியிருந்ததாகச் சொல்லப்படுகிறது. இதன்படி இன்றைய நாள்வரையான காலப்பகுதிவரை பூமியில் கண்டுபிடிக்கப்பட்டு பெயரிடப்பட்ட ஏறத்தாழ 8 மில்லியன்- குறிப்பாக 80 இலட்சம் உயிரிணங்களும் இன்னும் கண்டறியப்படாத, பெயரிடப்படாத தாவர விலங்கினங்களும் எம்முடன் வாழும் வளர்ப்பு விலங்குகளும் சேர்ந்ததுமான சூழல் அமைப்பே பல்லுயிரியமாக விளங்குகிறது. இவ்வமைப்பானது, செழித்துக் காணப்படும் பகுதிகள் அதாவது ஒவ்வொரு அங்குலத்திலும் பல்லாயிரம் உயிர்ப்பொருள்கள் எங்கெங்கு உள்ளன என்பதை நோக்கினால், அவை இந்தியாவைப் போன்ற வெப்ப மண்டல நாடுகளில் காணப்படும் மழைக் காடுகளில் தான் காணப்படுகின்றன. இதற்கான உதாரணமாக பிரேசில் மழைக் காடுகளையும் சொல்லி விடலாம் என்கின்றனர் ஆய்வாளர்கள்.

பிரேசில் மழைக் காடொன்றில் ஒரு மரத்தில் மட்டுமே சேகரிக்கப்பட்ட பூச்சிகளை வகை காண, பிரித்தறிய முற்பட்ட பூச்சியியலாளர்களில் ஒருவர், அவற்றில் இதுவரை கண்டு பிடிக்கப்படாத சில நூறு பூச்சி இனங்கள் இருந்ததாகச் சுட்டிக்காட்டியுள்ளதாக தகவல் தெரிவிக்கப்படுகின்றது.

### உயிரினங்களின் நுழை புலம்

மத்திய அமெரிக்க நாடான பெருவில் மற்றொரு ஊர்வனவியலாளர், தரைக்கு வராமல் மரங்களிலேயே வாழும் அரிய சிலவகைப் பல்லி இனங்களைக் கண்டுபிடித்திருக்கிறாரென்றால், அக்காடுகளின் உயிர்ச் சூழலின் சிறப்பை சொல்லவும் வேண்டுமா? எமக்குத் தெரியாத இன்னும் என்னென்ன உயிரினங்கள் இருக்குமோ? இவையனைத்தையும் அறிவின் நுழைபுலத்தோடு ஆராய்ந்தறிந்தால், மருத்துவத்துறைக்கு மாத்திரமல்ல பொருளாதாரத் துறைக்கும் மிகப் பெரிய சாதக வரப்பிரசாதங் கள் கிடைக்கலாம். இந்த விடயங்களை நோக்கும்போது, மனத்தில் பெருத்த சந்தேகம். அவை தாண்டி எதற்காக இத்தனை கோடி உயிரினங்கள்?



நமக்குப் பயன்படக்கூடிய சிலவற்றைத் தெரிவு செய்து காப்பாற்றிக் கொண்டால் போதாதா? என்பதான கேள்விகள் எழுகிறன்றன.

உண்மையில் ஒவ்வொரு இனமும், வகையும் ஒன்றுடன் ஒன்று சூழலியலில் பின்னிப் பிணைந்துள்ளதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்என்பதை இவை கோடிட்டுக்காட்டுகின்றன. ஒன்றை அழித்தால், அதன் விளைவு சங்கிலித் தொடராக மற்றொன்றைத் தாக்கும். தற்போது உலகில் பயிரிடப்படும் 30 முக்கிய தானிய வகைகள் காடுகளில் இருந்தவையே. மனிதனே அதை எடுத்து வந்து செயற்கையாகப் பண்படுத்தி, தமக்குரித்தான வகையிலே பயனாக்கிக் கொண்டுள்ளான். இதன் வழியே இப்போதும் ஒரு பயிரின் தரத்தை மேம்படுத்த, காட்டிலுள்ள அதன் உறவோடுதான் கலப்பினம் செய்யப்படுகிறது. எடுத்துக்காட்டாக, 1970 ஆம் அண்டுகளில் ஆசியாவில் அண்ணளவாக 6 கோடி ஏக்கர் நெல்வயல்கள் சிராசிஸ்டன்ட் என்ற ஒருவகை வைரஸ் நோயால் தாக்கமுற்று அழிவுநிலையை அடைந்தன. இதனைச் சமாளிக்க பிலிப்பைன்சில் உள்ள பன்னாட்டு அரிசி ஆராய்ச்சி நிலையம், அந்த நோய்க்கு எதிர்ப்புள்ளதோர் அரிசி இனத்தைக் கண்டறியும் நோக்கில் தமது சேகரிப்பில் இருந்த 6273 என்பதான காட்டுப் புல் வகைகளைச் சோதித்துக் கொண்டதாகச் சொல்லப்படுகிறது. இவற்றோடு ஒப்பீடு செய்து உருவாக்கப்பட்ட அரிசி வகையே பின் நாள்களில் ஐ.ஆர்.20 என உலகப் புகழ் பெற்ற அரிசி வகையாக மாற்றம்கண்டது. இதிலிருந்து வந்த ஐ.ஆர்.50 வகைதான் இன்றும் உலகில் அதிகம் பயிரிடப்படும் வகையாக இருக்கிறது.

### இயற்கையொடு பொருத்தமுறல்

செடி, கொடிகளில் குறிப்பிடப்பட்டவற்றை விலங்குகளுக்கும் பொருத்திப் பார்க்க வேண்டும். தென்கிழக்கு ஆசிய காட்டுமாடான பென்டெங், இந்தோனேசியாவில் பழக்கப் ப ்த்தப்பட்டு, வழக்கப்படுத்தப்பட்டு எண்ணிக்கையில் 15 இலட்சமாக பெருக்கப்பட்டுள்ளது. மீன் இனங்கள் சிலவும் அப்படியே சொல்லப்படுகிறது. இன்று தமிழன் உண்ணும் மீன்களில் 90 வீதமானவை கடலிலிருந்தே பிடிக்கப்பட்டவை. ஆனாலும் உலகிலேயே மீன் பற்றாக்குறையை எதிர்கொள்பவர்களும் ந ாங்களே. போதிய அளவு நீர்நிலைகள் இ ங்கிருந்தும் நன்னீர் மீன்களின் அருமைத் தன்மை என்பது எமக்குள்ள அறிவியலின் மையை உணர்த்துகிறது. நாமும் சிந்தித்தால் பல்லுயிரியத்தின் அரவணைப்பை மேம்படுத்தலாம். ஆக வறுமை மாறி வளம் பொங்கிட எமது கைகளை விட மூளைகளுக்கே வேலை தேவை.

தமிழ்நாட்டைப் பொறுத்த வரையிலே, அது ஏறத்தாழ 100 வகைப் பாலூட்டிகளுக்கும், 400 வகைப் பறவைகளுக்கும், 160 வகை ஊர்வனவற்றுக்கும், 12,000 வகைப் பூச்சிகளுக்கும், 5,000 வகைத் தாவரங்களுக்கும், 10,000 வகை சங்கு, சிப்பி, கடல்வாழினங்களுக்கும் ஓர் அற்புத உறைவிடமாக விளங்குவதாக சொல்லப்படுகிறது.

இருப்பினும்,எமது முதல் தேவை என்பது மூடநம்பிக்கையில்லா இயற்கையை ரசிக்கும் தன்மை. இரண்டாவது மதம் சாராததொரு இயற்கைவாதியிமானநட்பு. மூன்றாவது நேர்மையானதொரு ஆராய்ச்சியாளரின் நூல்கள் மீதான ஈடுபாடு. நான்காவது எளிய அறிவுசால் வாழ்வு. முதலில் நாம் இரசிக்கத் தொடங்குவோம்! இயற்கையைக்காப்போம்!

31 ஆம் நாள் நினைவஞ்சலி

எமது பாடசாலையின் ஆசிரியை
திருமதி ஷாமினி ஞானதேவன்
அவர்களின் அன்பு மாமியார்
அமரர் பரராஜசிங்கம்
அன்னப்பிள்ளை
அவர்களின் ஆத்மாசாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
பாடசாலைச் சமூகம்,
யா/கைதடி குருசாமி வித்தியாலயம்.



31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
நன்றி நவிலலும்



அமரர் வேலாயுதர்
கந்தையா

22.12.2016 அன்று இறைவனடி சேர்ந்த
எமது குடும்பத் தலைவர் அமரர்
வேலாயுதர் கந்தையா அவர்களின்
வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று
(21.01.2017 ) சனிக்கிழமை முற்பகல் 11
மணிக்கு நடைபெறும். அந்நிகழ்விலும்
தொடர்ந்து இடம்பெறும் அன்னாரின்
ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய
போசன நிகழ்விலும்
கலந்துகொள்ளுமாறு கேட்டுக்
கொள்கின்றோம்.
அன்னாரின் இறுதி நிகழ்வில்
கலந்துகொண்ட அனைவருக்கும்
மற்றும் சகல வகைகளிலும் உதவி
புரிந்தவர்களுக்கும் மற்றும்
தொலைபேசி மூலம்
அனுதாபங்களைத்
தெரிவித்தவர்களுக்கும்
இத்தருணத்தில்
நன்றியறிதலைத்
தெரிவித்துக்
கொள்கின்றோம்.



குடும்பத்தினர்.
கைதடி கிழக்கு,
கைதடி.

## மனித உரிமை...

உரிமைகள் சபையோ எதுவித பத்திரிகை அறிக்கையையும் இதுவரை வெளியிடவில்லை.

உலகப் பொருளாதார மாநாடு சுவிஸின் டாவோஸ் நகரில் நடைபெறுகின்றது. இந்த மாநாட்டில் பங்குபற்றுவதற்குச் சென்றுள்ள தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, மாநாட்டுக்குப் பக்க நிகழ்வாகப் பல தரப்பினரையும் சந்தித்து வருகின்றார். ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரையும் நேற்றைய தினம் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் தலைமை அமைச்சர் அலுவலகம் அனுப்பி வைத்துள்ள பத்திரிகைச் செய்திக் குறிப்பில்,

இலங்கைவாழ் மக்களின் அனைத்துவித உரிமைகளையும் பாதுகாத்து - அதை உறுதிப்படுத்தும் வகையிலான வேலைத் திட்டங்களை அரசு தொடர்ந்தும் முன்னெடுக்க வேண்டும் என்பதுதான் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் எதிர்பார்ப்பாக இருக்கின்றது என்று ஆணையாளர் சயிட் அல் ஹுசைன் குறிப்பிட்டார்.

இலங்கையின் மனித உரிமை விவகாரம் சம்பந்தமாக ஏற்பட்டுவரும் முன்னேற்றங்களால் தான் மகிழ்ச்சி அடைகின்றார் என்றும் ஐ.நா. ஆணையாளர் தெரிவித்தார். போரால் பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பில் இலங்கை அரசு அவதானம் செலுத்தியிருப்பது முக்கியமான விடயம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதற்குப் பதிலளித்த தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, சகல மக்களினதும் உரிமைகளையும் அரசமைப்பின் ஊடாக உறுதிப்படுத்திக் கொள்வதே அரசின் எதிர்பார்ப்பாக இருக்கின்றது - என்றார்.

இந்தச் சந்திப்பில் தலைமை அமைச்சர் ரணிலுடன், பன்னாட்டு வர்த்தக விவகார அமைச்சர் மலிக் சமரவிக்கிரம, ஐ.நா.வுக்கான இலங்கைத் தூதுவர் ரவிநாத் ஆரியசிங்க ஆகியோரும் பங்கேற்றிருந்தனர். (த-5)

## நெடுந்தீவுக்கான...

கொழும்பு அரசின் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பைசர் முஸ்தபா, சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், ஆஸ்திரேலியத் தூதுவர் பிறைட் கட்சிசன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

நிகழ்வில் பெண்கள் மற்றும் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஆகியோருடன் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், மற்றும் கடற்படை அதிகாரிகள் பொதுமக்கள் உட்பட பலர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர் .

*பின்னணி*

நெடுந்தீவு மக்களின் கோரிக்கையையடுத்து நெல்சிப் திட்டத்தின் ஊடாக உலக வங்கியின் நிதிப் பங்களிப்பில் 50 மில்லியன் ரூபா செலவில் அமைக்க முயன்ற வேளையில் 150 மில்லியன் தேவையெனக் கண்டறியப்பட்டது. இதன் மிகுதித் தொகையான 100 மில்லியன் ரூபா நிதி ஆஸ்திரேலிய அரசிடம் கோரப்பட்டது. அந்த நிதியை ஆஸ்திரேலியா வழங்கியது.

நெடுந்தாரகையில் 80 பயணிகள் பயணிக்கக்க முடியும். அவ்வாறு பயணிக்கும் பயணிகள் ஒவ்வொருவரும் தலா 40 கிலோ பொதிகளும் எடுத்துச் செல்ல முடியும். இதற்கான இயந்திரமும் பாகங்களும் இந்தியா மற்றும் அமெரிக்க நாடுகளில் இருந்து தருவிக்கப்பட்டு குறித்த படகில் பொருத்தப்பட்டு பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இதற்கான மாலுமிகளாக 6 நெடுந்தீவு இளைஞர்களுக்கே வேலைவாய்ப்பும் வழங்கப்பட்டுள்ளது. இவர்களுக்கான பயிற்சிகள் துறைமுகங்கள் அதிகாரசபை , டொக்கியாட் நிறுவனம் மற்றும் கடற்படையினரூடாக வழங்கப்பட்டன. படகுக்கும் அதில் செல்லும் பயணிகளுக்காகவும் நடப்பாண்டுக்கு மட்டும் காப்புறுதி செய்யப்பட்டது. காப்புறுதிப் பணமாக 38 லட்சம் ரூபா செலுத்தப்பட்டுள்ளது. (வ-10)

## காணாமற்போனோரின்...

அறிவித்துள்ளனர். இது தொடர்பாக ஜனாதிபதி, கொழும்பு அரசின் தலைமை அமைச்சர் மற்றும் எதிர்க் கட்சித்தலைவர் ஆகியோருக்கு கையொப்பமிட்டு அறிவுறுத்தல் கடிதம் ஒன்று நேற்று வெள்ளிக்கிழமை அனுப்பி வைத்துள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

இந்தப் போராட்டம் வவுனியாவில் மாவீரன் பண்டாரவன்னியன் உருவச்சிலைக்கு முன்பாக நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பிக்கப்பட உள்ளதாக சங்கத்தின் வவுனியா மாவட்டத் தலைவி திருமதி ஜெயவனிதா காசிப்பிள்ளை அறிவித்தார்.

இது தொடர்பாக அவரால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கயில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

'தமிழர் தாயகத்தில் கையளிக்கப்பட்டு கடத்தப்பட்டுகாணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடிக்கண்டறியும் குடும்பங்களின் சங்கத்தினராகிய நாங்கள், சிறிலங்கா அரச படைகள்மற்றும் அரசதுணை ஆயுதகுழுக்களால் எமது உறவுகள் கடத்திச் செல்லப்பட்டமையைக் கண்கண்ட சாட்சிகளாக உள்ளோம். அரசினால் நியமிக்கப்பட்ட பலதரப்பட்ட ஆணைக்குழுக்கள், உள்ளூர் மற்றும் பன்னாட்டு மனித உரிமை அமைப்புக்கள், ஜனாதிபதி, தலைமை அமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர், தமிழ் மக்களின் அரசியல் அதிகாரம்பெற்றுள்ள தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு, பன்னாட்டுச் சமூகம் என்று சகல தரப்புகளிடமும் முறையிட்டும், வருடங்கள் பல கடந்த நிலையிலும் எமது உறவினர்கள் விடுவிக்கப்படவில்லை.

இந்த நிலையில் சாத்வீக ரீதியாக சகல கவனவீர்ப்பு மற்றும் அழுத்தப் போராட்டங்களை நடத்தியும், எமது உறவினர்கள் தொடர்பில் உரிய தீர்வு எமக்கு வழங்கப்படவில்லை. ஆகவே வேறுவழியின்றி பின்வரும் கோரிக்கைகளை வலியுறுத்தி சாகும் வரையிலான உணவு ஒறுத்தல் போராட்டத்தை முன்னெடுப்பதைத் தங்களுக்கு அறியத்தருகின்றோம்.

எமது உறவுகள் உயிருடன் இருக்கிறார்களா? இல்லையா? உயிருடன் இருந்தால், அவர்கள் எந்த இரகசிய சித்திரவதை முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள், உயிருடன் இல்லாவிட்டால், அவர்களுக்கு என்ன நடந்தது? யாரால்? எப்படி? கொலைசெய்யப்பட்டு, எங்கே புதைக்கப்பட்டுள்ளார்கள்? என்பவற்றை நாட்டு மக்களுக்குப் பகிரங்கப்படுத்த வேண்டும். கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டுள்ள எமது உறவுகள் உயிரோடு இருப்பின், அவர்கள் தத்தமது குடும்பத்தினரோடு இணைந்து வாழ்வதற்கு உடனடியாக வழிவிடுவதோடு, சகல அரசியல் கைதிகளையும் விடுதலை செய்ய வேண்டும் போன்ற எமது கோரிக்கைகள் அனைத்தும் நிபந்தனைகள் ஏதுமின்றி தங்களால் நிறைவேற்றப்படும் வரை சாகும் வரையிலான உணவு ஒறுத்தல் போராட்டத்தை நடத்தவுள்ளோம்.

நாங்கள் உயிரிழந்தால் அதற்குரிய முழுப் பொறுப்பையும் ஜனாதிபதி, தலைமை அமைச்சர், எதிர்க்கட்சித்தலைவர் ஆகியோரே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதையும் தெரியப்படுத்துகின்றோம் - என்றுள்ளது. (வ-21)

## வெலிவேரிய...

நேற்றுத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சட்டமா அதிபர் திணைக்களம் சார்பாக மன்றில் பிரசன்னமாகிய அரச சட்டத்தரணி பத்மால் வீரசிங்க, நீதிவான் டி.ஏ. ருவன் பத்திரண முன்பாக இந்தத் தகவலை வெளியிட்டார்.

ரத்துபஸ்வெல பகுதியிலுள்ள தொழிற்சாலையால் வெளியகற்றப்படும் கழிவுநீர் குடிதண்ணீரில் கலப்பதால் பாதிக்கப்பட்ட மக்கள் 2013 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். ஆர்ப்பாட்டத்தைக் கலைப்பதற்கு அந்தப் பகுதியில் இராணுவத்தினர் களமிறக்கப்பட்டு துப்பாக்கிப் பிரயோகத்தையும் நடத்தினர். மூவர் பலியானதுடன், பலர் காயமடைந்திருந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான வழக்கு கம்பகா நீதிமன்றில் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது. மன்றில் முன்னிலையான இரகசியப் பொலிஸார், சம்பவம் இடம்பெற்ற போது மேல்மாகாணத்திற்குப் பொறுப்பாக இருந்த முன்னாள் மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் அநுர சேனநாயக்கவிடம் வாக்கு மூலம் பதிவு செய்துகொண்டதாக அறிவித்தனர். தாம் கடமையிலிருந்தபோது, ரத்துபஸ்வெல பகுதியில் ஏற்பட்ட பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு முயற்சித்தபோதிலும் பயனளிக்கவில்லை. ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டபோது இராணுவத்தினரை வரவழைத்தது யார் என்பது பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்று முன்னாள் மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் அநுர சேன நாயக்க தெரிவித்திருப்பதாகவும் இரகசியப் பொலிஸார் மன்றில் தெரியப்படுத்தினர்.

அரச சட்டத்தரணி பத்மால் வீரசிங்க, இராணுவத்தினரால் நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் மூன்று பேர் உயிரிழந்தனர் எனவும் பலர் காயமுற்றதாகவும் மன்றில் தெரிவித்துள்ளார். இந்தச் சம்பவம் நிகழ்ந்திருக்கையில் வெலிவேரியப் பகுதியிலுள்ள கிறிஸ்தவ தேவாலயம் மீதும் இராணுவத்தினர் தாக்குதல் நடத்தியதாகவும், இதன்போது அங்கிருந்த ஒருவர் உயிரிழந்தார் எனவும் அரச சட்டத்தரணி கூறியுள்ளார்.

சம்பவங்கள் இடம்பெற்ற பின்னர் விசாரணை செய்வதற்கான பொறுப்பை இரகசியப் பொலிஸாரிடம் பொலிஸ்மா அதிபர் பாரப்படுத்தியபோதிலும், இரகசியப் பொலிஸாரால் விசாரணைகள் சரியான முறையில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதையும் அரச சட்டத்தரணி மன்றில் தெரியப்படுத்தினார்.

வழக்கு மீதான அடுத்த கட்ட விசாரணைகளை ஏப்ரல் மாதம் 7 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (த-5)

## பிரிட்டன்...

நாடு முழுவதும் டெங்கு நோயின் தாக்கம் வேகமாகப் பரவி வருகின்றது. இந்தத் தாக்கம் கொழும்பில் உள்ள பிரிட்டன் தூது வரையும் விட்டுவைக்கவில்லை. (த-5)

## வடமராட்சியில்...

டுள்ளனர். அவர்களிடம் இருந்து ஒரு தொகைப் பணம் உட்பட அச்சடிப்பதற்கான



இயந்திரங்களும் மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

வல்வையில் உள்ள மதுபான நிலையம் ஒன்றுக்கு நேற்று முன்தினம் இரவு சென்ற நால்வர் மது அருந்துவதற்காகப் பணத்தைக் கொடுத்துள்ளனர். அந்தப் பணத்தில் சந்தேகம் கொண்ட மதுபான நிலைய ஊழியர் நெல்லியடி பொலிஸ் நிலையத்துக்குத் தகவல் வழங்கினார். சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார், குறித்த நோட்டுக்கள் சட்டவிரோதமாக அச்சிடப்பட்டவை என்பதை உறுதிப்படுத்தி பணத்தைக் கொடுத்த நால்வரையும் விசாரணைக்கு அழைத்துச் சென்றனர்.

விசாரணைகளின் பின்னர் நால்வரும் கைது செய்யப்பட்டனர். இதன் பின்னர் ஒருவர் கைது செய்யப்பட்டார். மற்றொருவர் தலைமறைவாகியுள்ளார். இவர்களிடம் இருந்து பெறப்பட்ட தகவலின் படி கணினி உட்பட சட்டவிரோதமாக நாணயத் தாள்களை அச்சிடும் பொருள்கள் மீட்கப்பட்டன. கைது செய்யப்பட்டவர்களில் நால்வர் வல்வெட்டித் துறையைச் சேர்ந்தவர்கள். ஒருவர் அல்வாயைச் சேர்ந்தவர் என்பது விசாரணை களில் தெரியவந்துள்ளது.

விசாரணைகளின் பின்னர் இவர்கள் பருத்தித்துறை நீதிவான் மன்றில் முற்படுத்தப்படுவர் எனப்பொலிஸார் மேலும் கூறினர். (த-21-26)

## இறக்குமதியாகும்...

திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காகவும் நியமிக்கப்பட்டுள்ள அரச தலைவரின் சிறப்புச் செயலணியின் கூட்டம் நேற்று நடைபெற்றது. இதன் போதே அரச தலைவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டதாக, அவரின் ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியார் வர்த்தகர்கள் மற்றும் அரிசி ஆலை உரிமையாளர்களுக்குத் தேவையான வகையில் அரிசி விலையை அதிகரித்துப் பொதுமக்களை அசௌகரியத்துக்குள்ளாக்க முடியாது. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சந்தையில் அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட இடமளிக்க முடியாது.

அரிசி இறக்குமதியின் போது பாவனைக்குப் பொருத்தமான அரிசி இறக்குமதி செய்யப்படுவதை உறுதி செய்ய வேண்டும். அரசுக்குச் சொந்தமான களஞ்சியசாலைகளில் இருந்து வழங்கப்பட்டுள்ள நெல்லைப் பெற்றுக் கொண்டுள்ள நெல் ஆலை உரிமையாளர்கள் அவற்றை அரிசியாக மாற்றி சந்தைக்கு வழங்கியுள்ளார்களா என்பதைக் கண்டறிந்து அறிக்கை ஒன்றைச் சமர்ப்பி[illegible] மாறு நெல் சந்தைப்படுத்தல் சபை[illegible] ஆலோசனை வழங்கப்பட்டது.

அரச தலைவரின் தனிப்பட்ட வேண்[illegible] கோளுக்கு அமைவாக இலங்கைக்கு[illegible] தாயிரம் மெற்றிக் தொன் அரிசியை [illegible] னும் சில வாரங்களில் அன்பளிப்பாக வழ[illegible] இந்தோனேசிய அரசு விருப்பம் வெளி[illegible] டுள்ளதாகவும், அரச தலைவர் இந்[illegible] கூட்டத்தில் தெரிவித்ததாக, அந்தப் பத்[illegible] கைச் செய்திக் குறிப்பில் குறிப்பிடப்[illegible] டுள்ளது. (வ-5)

## நீதி கிடைத்தால்...

சி.வி.விக்னேஸ்வரன். ஐரோப்பிய ஒன்றியத்தின் பதில் தூதுவர் போல் மற்றும் அவரது பிரதிநிதிகள் நேற்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்தனர்.

இதன்போது, வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை கைதடியில் அமைந்துள்ள முதலமைச்சர் செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்கள்.

இந்த சந்திப்புத் தொடர்பில் வடக்கு மாகாண முதமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாண மக்களுக்கு எவ்வாறான உதவிகளைச் செய்ய முடியுமென்று தூதுவர் கேள்வி எழுப்பியிருந்தார். போரினால் கணவனை இழந்த பெண்கள் மற்றும் முன்னாள் போராளிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்துமுகமாக பல்வேறு செயற்றிட்டங்களை வகுக்க வேண்டிய கட்டாயம் உள்ளது. கணவனை இழந்த பெண்கள் மற்றும் முன்னாள் போராளிகளுக்கு வாழ்வாதார உதவிகளைச் செய்து மீண்டும் சமூகத்துடன் இணைக்க வேண்டியுள்ளது.

கடந்த காலங்களில் இவ்வாறுதான் பல உதவித்திட்டங்களை வழங்கி வந்துள்ளோம். மீண்டும் இவ்வாறான உதவிகளை வழங்குவோம். மறுவாழ்வு அளிக்கும்போது, எந்த விதமான பயிற்சிகளையும் முன்னாள் போராளிகளுக்கு வழங்கவில்லை. மீளவும் தமது வாழ்க்கையைத் தொடர்வதற்கான வாய்ப்புக்கள் எதுவும் செய்து கொடுக்கப்படவில்லை. மாவட்டத்தில் ஏதாவது குற்றங்கள் நடந்தால், பொலிஸ் மற்றும் இராணுவம் முன்னாள் போராளிகளையே கைது செய்து செல்கின்றனர்.

இவ்வாறான கைதுகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். முன்னாள் போராளிகளுக்கு அங்கீகாரம் கிடைக்கும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியுள்ளன.

சமாதானத்தையும் நல்லிண[illegible]கத்தையும் ஏற்படுத்துவதற்கு என்ன ந[illegible]டிக்கைகள் மேற்கொள்ள முடியும் என்[illegible] ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர் கேள்வி[illegible]ழப்பியிருந்தார்.

போர்க்குற்றங்கள் சம்பந்[illegible]ட்ட விசாரணைகள் நடைபெற வே[illegible]ம். நடந்த தவறுகளுக்கு நீதி கிடைத்[illegible] மாத்திரமே அமைதியையும் நல்லிண[illegible]த்தையும் உருவாக்க முடியும். அரசி[illegible] ரீதியான உரித்துக்களைப் பெற்றுத்[illegible]தால் மாத்திரமே ஏனைய விடயங்க[illegible] கரிசனை கொள்ள முடியும் என்று தூ[illegible]ரிடம் எடுத்துக் கூறினேன் - என்றார். (வ-106)

# மன்னார் கில்லறி கழகம் இறுதிக்குத் தகுதி பெற்றது



யாழ்ப்பாணம், ஜன. 21
மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் மன்னார் கில்லறி அணி இறுதிக்குத் தகுதிபெற்றது.

உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் மன்னார் கில்லறி அணியை எதிர்த்து திக்கம் இளைஞர் அணி மோதியது.

ஆட்டத்தில் 6 ஆவது நிமிடத்தில் கில்லறி அணியின் றஞ்சா முதல் கோலைப் பதிவுசெய்தார். 10 ஆவது நிமிடத்தில் யேசுநாதன் இரண்டாவது கோலைப் பதிவுசெய்ய முதல் பாதியின் முடிவில் 2:0 என்று ஆதிக்கம் செலுத்தியது கில்லறி.

ஆட்டத்தின் 45ஆவது மற்றும் 46ஆவது நிமிடங்களில் றஞ்சா அடுத்தடுத்து இரு கோல்களைப் பதிவுசெய்ய முடிவில் 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதிபெற்றது கில்லறி. (ம-23)



## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜன. 21

**யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டம்**
யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் லீக் முறையிலான தொடரின் ஆட்டங்கள் யாழ். மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென்றலைட்ஸ் அணியை எதிர்த்து கே.கே.எஸ். அணி மோதவுள்ளது.

**துடுப்பாட்டம்**
இலங்கை கிரிக்கெட் சபை கழகங்களுக்கு இடையில் தேசிய மட்டத்தில் முன்னெடுத்து வரும் தொடரின் ஆட்டமொன்று இன்று இடம்பெறவுள்ளது. பல்லேகல மைதானத்தில் இடம்பெறவுள்ள இந்த ஆட்டத்தில் யாழ்ப்பாணம் சென்றலைட்ஸ் அணியை எதிர்த்து கண்டி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**யங்ஸ்ரார் வி.க. கால்பந்தாட்டம்**
வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்தத்திட்டமிட்ட ரி-20 தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இன்று ஆரம்பமாகின்றன. இன்று காலை 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஈகிள்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ம-23)

## இல்லமெய்வன்மை

யாழ்ப்பாணம், ஜன. 21
வல்வை மகளிர் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று இடம்பெறவுள்ளன.

பாடசாலையின் மைதானத்தில் பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரியின் முதல்வர் செல்வி ஆர். சுப்பிரமணியக்குருக்கள் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடமராட்சி வலயக் கல்வி பணிப்பாளர் சி.புஸ்பலிங்கம் கலந்து கொள்ளவுள்ளார். (ம-422)

## கரப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 21
யாழ்ப்பாண பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான நடப்பு வருடத்துக்கான ஆண்களுக்கான கரப்பந்தாட்டத் தொடர் ஜெட் லையின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இன்று ஆரம்பமாகிறது. (ம-23)

## காலிறுதியில் சாய்னா

மலேசிய பூப்பந்தாட்டத் தொடரில் காலிறுதிக்குத் தகுதி பெற்றார் இந்தியாவின் நட்சத்திர வீராங்கனையான சாய்னா நேவால்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற காலிறுதிக்குத் தகுதி பெறும் ஆட்டத்தில் சாய்னாவை எதிர்த்து இந்தோனேசியாவின் ஹன்னா மோதினார். மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதல் இரு செற்களையும் 21:17, 21:12 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்று நேர் செற் வெற்றிபெற்று காலிறுதிக்குத் தகுதிபெற்றார் சாய்னா. (ம)



வடமாகாண சபை உறுப்பினர் எஸ்.பிரிமூஸ் சிறாய்வா மாகாண சபை நிதி ஒதுக்கீட்டின் கீழ் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இரு விளையாட்டுக் கழகங்களுக்கு கடந்த புதன்கிழமை ஒரு தொகுதி விளையாட்டு உபகரணங்களை வழங்கினார். (ம-56)

## தொடரை வென்றதில் திருப்தி விராட் கோக்லி தெரிவித்தார்

இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரைக் கைப்பற்றியதன் மட்டில் திருப்தி தெரிவித்தார் இந்திய அணியின் தலைவரான கோக்லி.

இந்த இரு அணிகளுக்கும் இடையில் மூன்று ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடர் நடைபெற்று வருகிறது. இரண்டு ஆட்டங்கள் முடிந்துள்ளன. இரண்டிலும் வென்றுகிண்ணம்வெல்வதை உறுதி செய்தது இந்தியா. இந்தநிலையிலேயேகோக்லி இவ்வாறு தெரிவித்தார்.

சம்பியன்ஸ் லீக் தொடர் விரைவில் நடைபெறவுள்ளது. மிகமுக்கிய தொடரான இந்தத் தொடருக்கு முன்னதாக இங்கிலாந்துத் தொடரைக் கைப்பற்றியமை திருப்தியே என கோக்லி மேலும் தெரிவித்தார். (ம)



## எல்லே தொடர் இன்று

யாழ்ப்பாணம், ஜன. 21
நல்லூர் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான நடப்பு வருடத்துக்கான எல்லே தொடர் கனகரெத்தினம் மகா வித்தியாலய மைதானத்தில் இன்று இடம் பெறவுள்ளது. (ம-23)

# நியூசியின் வேகத்தில் சுருண்டது பங்களாதேஷ்

நியூசிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் முதல் நாளான நேற்று 289 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது பங்களாதேஷ்.

தொடரில் இரண்டு ஆட்டங்கள். முதலாவது ஆட்டத்தில் நியூசிலாந்து வெற்றிபெற்றது. எனவே இந்த ஆட்டத்தில் வென்றேயாக வேண்டும் என்ற நெருக்கடி நிலை பங்களாதேஷுக்கு உள்ளது.

கடந்த ஆட்டத்தில் பவுன்சர் பந்துவீச்சால் தாக்கப்பட்ட பங்களாதேஷ் அணித்தலைவர் ரகிம் இந்த ஆட்டத்தில் களமிறங்கவில்லை. இதனால் இக்பால் தலைமைப் பொறுப்பை ஏற்றார்.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. இக்பாலுடன் ஆரம்ப வீரராகக் களமிறங்கினார் சர்க்கர். ஐந்தே ஓட்டத்துடன் இக்பாலை வீழ்த்தினார் சவுத்தி. முகமதுல்லாவை வீழ்த்தினார் போல்ட். 38 ஓட்டங்களில் முதல் இரு இலக்குகளையும் இழந்தது பங்களாதேஷ்.

சர்க்கருடன் இணைந்தார் சகிப் அல் ஹசன். இந்த இணை நியூசிலாந்தின் பந்துவீச்சை எதிர்த்து தாக்கத்தை செலுத்தியது. இணைப்பாட்டமாக 100 ஓட்டங்கள் பகிரப்பட்டன. இருவரும் அரைச்சதம் கடந்தனர். இலக்குச் சரிவு ஏற்பட்டபாடில்லை. நீண்ட இடைவெளிக்குப் பின்னர் 86 ஓட்டங்களுடன் சர்க்கர் ஆட்டமிழந்தார். சர்க்கர் ஆட்டமிழந்த போது பங்களாதேஷ் 165 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இந்த ஆட்டமிழப்பே ஆட்டத்தின் திருப்புமுனையாக அமைந்தது. பின்னர் தொடர்ந்து சரிவைக் கண்டது பங்களாதேஷ். 59 ஓட்டங்களுடன் சகிப் அல் கசன் ஆட்டமிழந்த பிற்பாடு ஏனைய வீரர்களையும் பவிலியனுக்கு அனுப்பியது போல்ட், சவுத்தி இணை. 289 ஓட்டங்களில் சுருண்டது பங்களாதேஷ். நியூசிலாந்து அணி இன்று துடுப்பெடுத்தாடக் களமிறங்கும். (ம)





# செல்ராவிடம் ரியல் மட்ரிட் படு தோல்வி

ஐரோப்பிய கழகங்களுக்கு இடையிலான சம்பியன்ஸ் லீக் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் செல்ரா டி விகோவிடம் படுதோல்வியடைந்தது ரியல் மட்ரிட். ரியல் மட்ரிட்டுடன் ஒப்பிடுகையில் செல்ரா பலமான அணியல்ல. இதனால் ரியல் மட்ரிட்டின் ஆதிக்கம் மிகைந்திருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் பெரும் போராட்டத்தை செல்ரா வெளிப்படுத்தியது. கோல்கள் இன்றி முடிவுக்கு வந்தது முதல் பாதி.

இரண்டாம் பாதியின் 64 ஆவது நிமிடத்தில் அஸ்பாஸ் செல்ராவின் முதல் கோலைப் பதிவுசெய்தார். அடுத்த ஐந்தே நிமிடத்தில் மார்செல்லோ பதிலடி கொடுத்தார். 1:1 என்று நகர்ந்தது ஆட்டம். ஜொனி 71 ஆவது நிமிடத்தில் பிறிதொரு கோலைப் பதிவுசெய்து செல்ராவை முன்னிலை பெறச் செய்தார். அதற்குப் பதிலடி கொடுக் கவும் ரியல் மட்ரிட் பலமுறை முயற்சித் தது. இருப்பினும் பயன் கிடைக்கவில்லை. முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் செல்ரா வெற்றிபெற்றது.

ரியல் மட்ரிட் அணி இந்த வருடத்தில் சந்தித்த இரண்டாவது தோல்வியாக இது அமைந்தது. முன்னதாக 40 ஆட்டங்களில் தோல்வியே காணாமல் இருந்த மட்ரிட்டை செவில்லா 2:1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியமை குறிப்பிடத்தக்கது. (ம)

# கேல்ஸ் விலகல்

இந்தியாவுக்கு எதிரான இறுதி ஒருநாள் ஆட்டம் நாளை நடைபெறவுள்ள நிலையில் குறித்த ஆட்டத்தில் இருந்து விலகினார் இங்கிலாந்து அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான கேல்ஸ். டோனி அடித்த பந்தொன்றைப் பிடியெடுப்பதற்காக சென்ற போது கேல்ஸின் கைவிரலில் காயம் ஏற்பட்டது. இதனையடுத்து அவர் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார். கையில் எலும்பு முறிவு ஏற்பட்டமை கண்டறியப்பட்டது. இதனால் நாளைய



ஆட்த்தில் கேல்ஸுக்கு ஓய்வு கொடுக்கப்பட்டது. ரி-20 தொடரில் இருந்தும் அவர் விலகலாம் என்றும் கருதப்படுகிறது. (ம)



# ரியல் சொசைட்ரெட் கழகம் பார்சிலோனாவிடம் தோல்வி

ஐரோப்பிய கழகங்களுக்கு இடையிலான சம்பியன்ஸ் லீக் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் ஸ்பெய்னின் பார்சிலோனாவிடம் வீழ்ந்தது ரியல் சொசைட்ரெட்.

ஆட்டத்தின் 20 ஆவது நிமிடத்தில் பார்சிலோனாவின் முதல் கோலைப் பதிவு செய்தார் நெய்மர். வேறெந்த மாற்றங்களும் இல்லாமல் முதல் பாதி முடிவுக்கு வந்தது. இரண்டாம் பாதியில் சொசைட்ரெட் பல்முறை முயற்சித்த போதிலும் எவையும் பயனளிக்கவில்லை. முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் பார்சிலோனா வெற்றி பெற்றது. (ம)

# இறுதியாட்டம் கொல்கத்தாவில் நாளை

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடரின் மூன்றாவதும் இறுதியானதுமான ஆட்டம் கொல் கத்தாவில் நாளை நடைபெறவுள்ளது.


முடிவடைந்த முதல் இரு ஆட்டங்களில் முதலாவதில் 3 இலக்குகளாலும் இரண்டாவதில் 16 ஓட்டங்களாலும் இந்தியா வெற்றி பெற்று முன்னிலையில் உள்ளது. இதனால் நாளைய ஆட்டத்தின் முடிவு எவ்வாறு அமைந்தாலும் கிண்ணம் இந்தியாவிடமே செல்லும். ஆனால் சொந்த மண்ணில் இங்கிலாந்தை வழித்துத் துடைக்க இந்தியா முனைப்புக் காட்டும். அதேநேரம் இங்கிலாந்தும் குறைந்தது ஓர் ஆட்டத்திலேனும் வெற்றிபெறுவதற்காகப் போராடும் என்று கருதப்படுவதால் இந்த ஆட்டம் பெரிதும் எதிர்பார்க்கப்படுகிறது. பகலிரவு ஆட்டமாக இந்த ஆட்டம் இடம்பெறவுள்ளது. (ம)

# பழைய நோட்டுக்கள் மட்டுமே வெளியேறியுள்ளன; டோனி, யுவராஜை புகழ்ந்தார் வீரேந்திர சேவாக்

இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் ஆட்டத்தில் டோனி மற்றும் யுவராஜ் போன்ற அனுபவ வீரர்கள் சதம் கடந்து சாதித்த நிலையில் பழைய நோட்டுக்கள் மட்டுமே வெளியேறியுள்ளன அனுபவ வீரர்கள் வெளியேறவில்லை என தனது பாணியில் கருத்துத் தெரிவித்தார் சேவாக்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் இந்திய அணி 25 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளை இழந்தது. ராகுல், தவான், கோக்லி ஆகியோர் ஆட்டமிழந்திருந்தனர். இதனால் இந்தியா தடுமாறும் என்று கருதப்பட்டது. ஆனால் டோனி, யுவராஜ் இணை நீண்ட நேரம் நிலைத்து நின்று துடுப்பெடுத்தாடியது. இருவரும் சதம் கடந்தனர். யுவராஜ் 150 ஓட்டங்களுடனும் டோனி 134 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். இதனையடுத்தே சேவாக் தனது டுவிற்றர் பக்கத்தில் இவ்வாறு பதிவிட்டார்.

இந்தியாவில் இதுவரை காலமும் நடைமுறையில் இருந்த 500 மற்றும் ஆயிரம் ரூபாய் நோட்டுக்கள் இல்லாமல் செய்யப்பட்டு பதிலாக புதிய 500 மற்றும் 2 ஆயிரம் ரூபாய் நோட்டுக்கள் அறிமுகம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)



# உலகக்கிண்ணம் வரையில் மத்தியூஸ் அணித்தலைவர்


## இலங்கை கிரிக்கெட் உறுதி



2019 ஆம் ஆண்டு உலகக்கிண்ணம் வரையில் மத்தியூஸே அணித்தலைவராகச் செயற்படுவார் என்று தெரிவித்தார் இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவர் திலங்க சுமதிபால.

இலங்கை கிரிக்கெட் சபையின் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை அணித் தலைவரை மாற்றுவது தொடர்பில் கலந்தாலோசிக்கவில்லை. அணியில் தற்போது இருக்கும் குறைநிறைகளைப் பற்றியே நாம் ஆராய்ந்து வருகிறோம். அஞ்சலா மத்தியூஸ் தனது பொறுப்பை புரிந்து கொண்டு அணியை மீண்டும் கட்டியெழுப்பும்படியாக செயற்பட வேண்டும். வேகப்பந்து வீச்சில் எமது அணி தற்போதும் மந்த கதியிலேயே உள்ளது. அதை நிவர்த்தி செய்வதற்காக நாம் ஆராய்ந்து வருகின்றோம். எமது அணியில் 140 கிலோ மீற்றர் வேகத்தில் பந்தை வீசக் கூடிய வல்லமையானவர்கள் தற்போது இல்லை. அணியில் விளையாடும் அனைத்து வீரர்களுக்கும் நாம் போதியளவு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கின்றோம். திறமைகளை வெளிப்படுத்துவது அவர்களின் கைகளில் தான் உள்ளது என சுமதிபால மேலும் தெரிவித்தார். (ம)



# நேர் செற் கணக்கில் ஆட்டத்தை முடித்தார் ஸ்பெய்ன் வீரர் நடால்

ஆஸ்திரேலிய ரென்னிஸ் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் நேர்செற் வெற்றி பெற்று மூன்றாவது சுற்றுக்குத் தகுதிபெற்றார் நடால்.

பன்னாட்டுத் தரப்படுத்தலில் 9 ஆம் இடத்தில் உள்ள வீரரான நடால் தனது இரண்டாவது சுற்று ஆட்டத்தில், சைப்ரஸ் வீரர் பக்டேடிசை எதிர்கொண்டார். ஐந்து செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதல் மூன்று செற்களையும் 6:3, 6:1, 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 3:0 என்ற நேர் செற் வெற்றி பெற்று மூன்றாவது சுற்றுக்கு முன்னேறினார் நடால். (ம)

**SLEAS**
மட்டுப்படுத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கான விசேட இலவச கருத்தரங்கு
தை 30 தொடக்கம் மாசி 28 வரை நடைபெறவுள்ள 20 நிமிட வாய்மொழி பரீட்சைக்கான ஆயத்த வழிகாட்டல் கருத்தரங்கு எம் நிறுவனத்தில் மட்டுமே நடைபெறுகின்றது.
ஞாயிறு (22/01/2017)
மாலை 2.00 - 5.00
யாழ்ப்பாணக்கல்லூரி, பட்டப்படிப்புகள் பிரிவு. (யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கியருகில்)

# நீண்டு செல்கிறது கெர்பரின் வெற்றி

ஆஸ்திரேலிய பூப்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் வெற்றிபெற்றார் ஜேர்மன் வீராங்கனை கெர்பர்.

நடப்பு வருடத்தில் முதலாவது பன்னாட்டு அந்தஸ்து பெற்ற தொடராக ஆஸ்திரேலியத் தொடர் நடைபெற்று வருகிறது. பெண்கள் ஒற்றையர் பிரிவு மூன்றாவது சுற்று ஆட்டமொன்றில் கெர்பரை எதிர்த்து செக் குடியரசின் பிளிஸ்கோவா நேற்றுமுன்தினம் மோதினார். முதல் இரு செற்களையும் முறையே 6:0, 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி நேர் செற் வெற்றிபெற்று நான்காவது சுற்றுக்குத் தகுதிபெற்றார் கெர்பர். (ம)

மீண்டும் ஓர் அரிய சந்தர்ப்பம் நாளை தவறவிடாதீர்கள்

**வெளிநாட்டு வேலைவாய்ப்பு - மலேசியா**

மலேசியாவிலுள்ள பிரபல்யமான ஆடைத் தொழிற்சாலை ஒன்றுக்கு உற்பத்தி உதவியாளர், தையல் இயந்திர திருத்துநர்களுக்கான விண்ணப்பம் கோரப்படுகின்றது.

| JOB CATEGORY | QTY | SALARY (RM) |
|---|---|---|
| 01. உற்பத்தி உதவியாளர் (பெண்) | 20 | 1200+OT |
| உற்பத்தி உதவியாளர் (ஆண்) | 80 | 1200+OT |
| 02. தையல் இயந்திர திருத்துநர் | 10 | 1800-2500 |

**நிபந்தனைகள்**
- இலவச தங்குமிட வசதி மற்றும் மருத்துவ வசதி 3 வருடங்கள்.
- வேலை நேரம் 8 மணித்தியாலங்கள், மேலதிகமாக வேலை செய்யும் நேரத்துக்கு 1.6 வீதமும் சனிக்கிழமை நாள்களில் இரண்டு மடங்கு கொடுப்பனவும் வழங்கப்படும்.
- வாரத்தில் இரண்டு நாள்கள் ஓய்வு / விடுப்பு வழங்கப்படும்.
- முன்னனுபவம் தேவையில்லை.
- வயது எல்லை - 18 - 35.
- அரசாங்க அனுமதிக்கட்டணம் ரூபா 50.000/=
- வங்கிக் கடன் வசதி செய்து தரப்படும்.
- பொருத்தமானவர்கள் தங்கள் சுயவிவரம், புகைப்படம், கடவுச்சீட்டு, அடையாள அட்டை ஆகியவற்றுடன் நேர்முகத் தேர்வுக்கு சமுகமளிக்கவும்.

இடம் - சுபாஸ் விருந்தினர் இல்லம், விக்டோரியா வீதி, யாழ்ப்பாணம். (யாழ். ஆஸ்பத்திரி பின் வீதி)
காலம் - நாளை (22.01.2017) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி
முன்பதிவுகளுக்கு : யாழ்ப்பாணம் - 077 972 9481, 076 718 3799
கொழும்பு - 011 5244446

Capital Recruitment International (Pvt)Ltd
No.130 3/1, 3rd Floor, Grand Pass, Colombo - 14
அரச அனுமதி இலக்கம் - LL NO : 2248

(08/7826)(11.17.18)



# தேசியமட்ட எவ்.ஏ. கிண்ணத் தொடரில் யாழ். லீக்கில் சென். மேரிஸ் சம்பியன்

யாழ்ப்பாணம், ஜன. 21

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனம் தேசிய ரீதியில் எவ்.ஏ. கிண்ணத் தொடரை நடத்தி வருகிறது. யாழ். லீக்கில் பதிவுசெய்துள்ள கழகங்களுக்கு இடையிலான தொடரில் நாவாந்துறை சென். மேரிஸ் அணி சம்பியனானது.

அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் நேற்று மாலை இடம்பெற்ற இறுதியாட்டத்தில் மேரிஸை எதிர்த்து பாசையூர் சென். அன்ரனிஸ் மோதியது. ஆட்டத்தின் 18ஆவது மற்றும் 22ஆவது நிமிடங்களில் மேரிஸின் நிதர்சன் இரு கோல்களைப் பதிவுசெய்தார். 25ஆவது நிமிடத்தில் அன்ரனிஸின் மதுசன் ஓர் கோலைப் பதிவுசெய்த போதிலும் முதல் பாதியின் முடிவில் 2:1 என்று முன்னிலை வகித்தது மேரிஸ்.

இரண்டாவது பாதியின் 55 ஆவது நிமிடத்தில் நிரோசன் கோலைப் பதிவுசெய்து மேரிஸின் கோல் கணக்கை மூன்றாக உயர்த்தினார். 75 ஆவது மற்றும் 80 ஆவது நிமிடங்களில் நிதர்சன் மேலும் இரு கோல்களைப் பதிவு செய்ய முடிவில் 5:1 என்ற கோல் கணக்கில் மேரிஸ் வெற்றிபெற்றது. (ம-23)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.01.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.